79

79

162

79

79

Verified with original
3/12/62

(1)

"அனுபவ முறை கையேடு"

எம். பெருமாள் சேர்வை,

மோகனூர், நாமக்கல்,

சேலம்.

O.N.

manuscript book
Returned to individual on
15.12.62.

22.8.62.

பற்பபடலம்

கலைமான் கொம்பு பற்பம்.

மான் கொம்பை துண்டு துண்டாய் உடைத்து தயிரில் ஊர வைத்து கழுவி குமரிக்குள் வைத்து சீலை மண் செய்து இருபது விரட்டியில் புடம் போட பற்பமாகும்.

~~மேற்கண்ட பற்பம்~~ வேறு:- மான். கொம்பை துண்டு துண்டாய் வெள்ளைத். துணியில் பொட்டணம் கட்டி இருபது விரட்டியில் புடம் போட பற்பமாகும்.

தாளக பற்பம்.

தாளகத்தை சுண்ணம்பு நீரில் ஐந்து தடவை சுத்தி செய்து காய்ந்த கிளிஞ்சியும் உயிர் கிளிஞ்சியும் இரண்டையும் நேக அரைத்து தாளகத்துக்கு கவசம் செய்து சீலைமண் செய்து ஐந்து எருவில் புடம் போட பற்பமாகும்.

~~மேற்கண்ட பற்பம்~~ தாளகத்தையும் சீனக்காரத்தையும் இரண்டையும் பெரும் பொடியாய் செய்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து ஐந்து எருவில் புடம் போட பற்பமாகும்.

கெந்தக பற்பம்.

~~*ருதம்*பட்டையை*நன்றாக*திரிதால்*தீ*கொளுத்தி*பி*~~ மருதம் பட்டையை நன்றாக வெய்யிலில் காயவைத்து பின்பு குவித்து திரியால் தீ கொளுத்தி சாம்பலை எடுத்துக் கொண்டு ஒரு சிறு கலயத்தில் சாம்பலை பேர் பாதி போட்டு அதன் மத்தியில் கெந்தகத்தை வைத்து மேலுக்கும் சாம்பலை மூடி சில்லிட்டு சீலைமண் செய்து அடுப்பிலிட்டு எரிக்கும்போது மேல் சில்லில் சூடு ஏறும் போது இறக்கி நன்றாக ஆரவிட்டு எடுத்து பூனை வணங்கி இலையை அரைத்து கவசம் செய்து ஒன்பது எருவில் புடம் போடவும்.

அயக்காந்த வெள்ளை பற்பம்.

அயம், காந்தம் வகைக்கு பலம் ஒன்று வாழைக்கிழங்கு நீரில் அரைத்து வில்லை செய்து காயவைத்து முழப்புடம் போடவும். இம்மாதிரி பத்து புடம் போட பற்பமாகும்.

தாளகப் பற்பம்.

ஒரு விராகனெடை தாளகத்தை மிளகு தக்காளி சாரில் சுருக்கு கொடுத்து கும்பிடு கிளிஞ்சியில் வைத்து ஒரு விரட்டியில் புடம் போட பற்பமாகும்.

தங்கப் பற்பம்.

சிகப்பு பூ பூக்கிற அவரை இலை சாரு ஒரு ~~சிமிழில்~~ இமிழில் விட்டு தங்கத்தை வைத்து 35 வரட்டியில் புடம் போட பற்பமாகும்.

வீர பற்பம்.

வீரம் தேவையானது கொண்டு வந்து கிளிஞ்சி நீரிலை சுருக்கு கொடுத்து எடுத்து ஒரு குகையில்ப் போட்டு கோவை இலை ஆகுதில் இருக்கு சார் விட்டு சீலைமண் செய்து ஏழு எருவில் புடம் போட பற்பமாகும்.

தாளகம்.

தாளகத்தை புளியம் பிரண்டை சாரும் வெற்றிலைச் சாரும் குகையில் வைத்து புடம் போடவும்.

பூரச் சுன்னம்.

கும்பிடு கிளிஞ்சியை எடுத்து வந்து அதை பிளந்து வெடியுப்பு போட்டு பீங்கானில் வைக்க நீராகும். அந்த ஜலத்தில் ரச கற்பூரம் பலம் 1 போட்டு வெய்யிலில் 24 நாழிகை வைக்கவும். அதை எடுத்து கவசம் செய்து காடைப் புடம் போட கொடிய சுன்னமாகும்.

லிங்க பற்பம்.

லிங்கத்தை அத்தி மரத்தை துளைத்து அதற்குள் வைத்து மூன்றாம் நாள் எடுத்து குகையில் வைத்து வாழை மட்டை சார் விட்டு உருக்க உருளி கட்டும்.

இதுவே கட்டு.

அதன் பிறகு வாழை மரத்தின் அடிக் கிழங்கை தண்ணீர் எடுத்து மேற்கண்ட படி கட்டி லிங்கத்தை கல்வத்தில் போட்டு மேற்கண்ட சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கோழி புடம் போட பற்பம்.

நாக பற்பம்.

நாகத்தை சுத்தி பண்ணி குகையில் வைத்து உருக்கி சரி எடை கடல் நுரையை நணிக்கிக் கொண்டு நாகம் உருகும் போது கடல் நுரைத்தூள் கொஞ்சம் கொஞ்சமாய் போட பற்பம் ஆகும். சகல மூலத்திற்கும் வெண்ணெயில் கொடுக்கலாம்.

நாக பற்பம்.

நாகத்தை சுத்திப் பண்ணி கொண்டு ~~குகை~~ குகையில் வைத்து உருக்கி வரப்பூலான் வேர் பட்டையை எடுத்து தூள் செய்து கொஞ்சம் கொஞ்சமாக தூள் போட்டு உருக்கி பற்பமாகும். அதை எடுத்து எலுமிச்சம் பழம் சாற்றில் அரைத்து ஓட்டில் வைத்து புடம் போடவும். வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் புடம் போடவும். இதை நவ மூலத்திற்கும் வெண்ணெயில் கொடுக்கவும்.

கருவங்க பற்பம்.

கோவை இலை சாறும், கீழா நெல்லிச் சாறும், புளியம் கட்டையை ~~பல்லம்~~ செய்து அதில் மேற்கண்ட சார்களை விட்டு கருவங்கத்தை மேலே சொன்ன தளழகளால் மூடி புளியம் கட்டையால் அடைத்து ஏழு சீலை மண் செய்து கெஜப்புடம் போட பற்பமாகும்.

தாளக பற்பம்.

தாளகத்தை சுண்ணாம்புக்கல்லில் வைத்து பத்து தடவை சுத்தி பண்ணி விளக்கெண்ணெய் அரைக்கால் படி விட்டு காய்ச்சி எடுத்து கவு தும்பை இலையும் புது சுண்ணாம்பும் அரைத்து கவசமாக செய்து அதற்குள் வைத்து சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போட பற்பமாகும். ஈளை, இருமல், சுவாசம், க்ஷயம், காசம், இவைகளுக்கு வெண்ணெய், நெய் முதலியவைகளில் கொடுக்கவும்.

கெந்தக பற்பம்.

கெந்தகம் ஒரே கட்டியாக வாங்கி வந்து பிரமன் தண்டு பால் அடித்து மூன்று நாள் வெய்யிலில் வைத்து பிறகு எடுத்து கோவை இலையை அரைத்து கவசம் செய்து சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட பற்பமாகும். ஆகாவிட்டால் வேலி பருத்தி இலையை அரைத்து கவசம் செய்து புடம் போட பற்பமாகும். 10 எருவில் ஏழு சீலை மண்.

தாளக பற்பம்.

கடுக்காய் தோல் எடுத்து தண்ணீரில் ஊற வைத்து அதில் தாளகத்தையும் ஊறப் போட்டு நான்காம் நாள் எடுத்து வேறே கடுக்காய் தோலில் தண்ணீர் விட்டு அரைத்து குகையாக செய்து தாளகத்தை உள்ளே வைத்து சீலை மண் செய்து புடம் போடவும். 10 எருவில் மூன்று புடம் போடவும், ஆறின உடன் அவசரமில்லாமல் பொருத்து எடுக்கவும். இதுவே பற்பமாகும்.

கெந்தக பற்பம்.

ஒரு கலயத்தில் மணல் போட்டு அதன் மேல் கெந்தகத்தை நணிக்கிப் போட்டு அதன் மேல் சாணிப் பால் விட்டு சில் மூடி சீலை செய்து இரண்டு நாழிகை தீபம் போல் எரிக்க பற்பமாகும்.

அப்பிரக பற்பம்.

வெடியுப்பு, சீனக்காரம், நவாச்சாரம் மூன்றையும் கோப்பையில் போட்டு பனியில் வைத்தால் செய்நீராகும். மேற்கண்ட செய்நீர் கோப்பையில் கொஞ்சம் கிருஷ்ண அபிரக்கை வெய்யிலில் உலர்த்தி வைத்தால் அதை குழி, அம்மியில் வாய் நீர். இட்டு அரைத்து வில்லை செய்து வெய்யிலில் ஊவைத்து காய்ந்த பிறகு தத்தி இலையை அரை கவசம் செய்து 30 எருவில் புடம் போட பற்பமாகும்.

பூர பற்பம்.

பூன்ன வணங்கி சாற்றில் சுருக்கு கொடுத்து ஜவிரலி இலையை அரைத்து கவசம் செய்து மூன்று சீலை மண் செய்து சாண் புடம் போட்டு குளிர்ந்த பின் எடுக்கவும். தீரும் வியாதிகள் அரையாப்பு, சூலை, கிரந்தி, புண், கண்டமாலை இதுகளுக்கு பனை வெல்லத்தில்; வெட்டைக்கு வெண்ணெயில் கொடுக்கவும்.

பச்சை துருசு பற்பம்.

துருசை பொட்டலம் கட்டி தயிரில் ஒரு நாள் ஊரவைத்து விராலி இலையில் கவசம் செய்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கோழிப்புடம். மறுபடியும் கல்வத்திலிட்டு கருஞ் துளசி சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஒரு புடம், கரு ஊமத்தன் சாற்றில் ஒரு புடம் போட பற்பமாகும். கபங்களுக்கும் கொடுக்கலாம். எள்ளிடை நெய்யில் இட வாந்தியாம்.

சூட சுன்னம்.

கிளிஞ்சி சுண்ணம்புக்குள் சூடத்தை வைத்து எரித்தால் சுன்னமாகும். பானைக்குள் கிளிஞ்சி சுண்ணம்பை வைத்து அதன் மேல் சூடத்தை வைத்து மேற்கண்ட சுண்ணம்பை மேலே போட்டு எரித்தால் சுன்னமாகும். தீபக்கினியாக எரிக்கவும். மேல் சட்டி மூடவும்.

ரத்த மூலத்துக்கு.

ஆமை யோட்டை சீந்திக் கொடியில் சுத்தி செய்து 25 விரட்டியில் புடம் போடவும். மறுபடியும் சீந்தி தலைச் சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து 25 விரட்டியால் புடம் போடவும். மேற்கண்ட பற்பத்தை பணவிடை எடுத்து மிளகாயை நல்ல எண்ணெய் விட்டு வறுத்து கருதியவுடன் பனைவெல்லம் சேர்த்து அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து கழச்சக் காய் அளவில் பற்பத்தை உள்ளுக்குள் வைத்து இரு வேளையும் சாப்பிடவும். கால் மண்டலம் சாப்பிடவும். புளி தள்ளவும்.

ரசம் வெட்டுக்கு.

ரசம் பலம் 1 வாங்கி உருக்கி சிவகரந்தைச் சார் விட்டு ஊதிலை வெட்டையாகும். பிறகு சரியிடை தாம்பூரம் சரியெடை கொடுத்தால் வெள்ளையாகும்.

சீனக்கார பற்பம்.

சீனக்காரம் பலம் 1 கல்லுப்பு பலம் 1, குமரிச் சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து அகலில் வைத்து 20 விரட்டியில் புடம் போட்டு தேனில் குழைத்து கொடுக்கவும். புளி தள்ளவும். குன்மம் தீரும்.

தாம்பூர பற்பம்.

இச்சிப் பாலைக் கறந்து தாம்பூரக் காசுக்கு முழுதும் படியாய் அகலில் வைத்து விட்டு மேல் அகல் மூடி எழு சீலை மண் செய்து குழி வெட்டி ஐம்பது விரட்டியால் கெஜபுடம் போடவும். பற்பமாகும். தேனில் அரிசியெடை கொடுக்கவும். நெய், தயிர், பால் புஷ்டியாக கொடுக்கவும். மேகம் 21-ம். கண் புகைச்சல், முதலியதும் தீரும். மூன்று நாள் ஆறு வேளை கொடுக்கவும். பத்தியம் புளி, புகையிலை, போகம் நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள் கூடாது.

தாளக பற்பம்.

தாளகம் பலம் 1, ஓட்டில் வருத்து மேனிச்சார் 10 தடவை சுருக்கு கொடுத்து எரித்து நறுக்கி அரிசியெடை திப்பிலித் தூளில் தேன் விட்டு மத்திச்சு சாப்பிடவும். க்ஷயம் இருபதும் தீரும். புளி, புகையிலை தள்ளவும்.

*   *

தாளக பற்பம்.

தாளகம் பலம் ½, கற்பூர தலாசத்து பலம் ½, குமரிச் சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து அகலில் வைத்து பத்து விரட்டியால் புடம் போடவும். அதை எடுத்து நறுக்கி அரிசியெடை திப்பிலித் தூளில் தேன் விட்டு குழைத்துச் சாப்பிடவும். புளி தள்ள வேண்டியது.

தாளக பற்பம்.

தாளகம் பலம் 1 குகையில் போட்டு கரி விட்டு ஆடும் போது வெள்ளருகு சார் விட்டு அதை எடுத்து எலுமிச்சம் பழச்சாரில் விடவும். அதை நறுக்கி அரிசியெடை பற்பத்தில் திப்பிலி தூள் போட்டு தேன் விட்டு மத்திச்சு சாப்பிடவும். புளி தள்ளவும். க்ஷயம், இருமல், இளைப்பு, வெட்டை இவைகள் தீரும். இச்சா பத்தியம். கபத்தையும் கண்டிக்கும். புளி தள்ளவும்.

தாளக பற்பம்.

தாளகம் பலம் 1 சுண்ணாம்புக் கல்லில் சுருக்கு கொடுத்து சரியிடையாய் வைத்து அரைத்து வில்லை தட்டி காய வைத்து அகல் வைத்துக் காய வைத்து பத்து விரட்டியால் புடம் போடவும். திப்பிலித் தூளில் அரிசியெடை பற்பம் தேனில் கொடுக்க க்ஷயம், இருமல் தீரும். புளி, புகையிலை தள்ளும்படிச் செய்யவும்.

வங்க பற்பம்.

வெள்ளாட்டு கோமியத்தில் எட்டு தடவை வங்கத்தை உருக்கி ஊற்றி குன்மக்குடோரி இலையை அரைத்து வங்க தகட்டுக்கு கவசம் செய்து அகலில் வைத்து ஒரு பலத்துக்கு 10 விரட்டியில் புடம் போடவும். இவ்விதம் 7 புடம் போட பற்பம் ஆகும்.

அண்ட சுன்னம்.

முட்டை ஓடு கொண்டு வந்து தண்ணீரை கொதிக்க வைத்து அதில் போட்டு ஓட்டை எடுத்துக் கொள்ளவும். கலயத்தில் போட்டு சீலைமண் செய்து கெஜப்புடம் போடவும். சுன்னமாகும். அண்ட வாய்வுக்கு, வெண்ணெயிலும் மற்ற வாய்வுகளுக்கும் தேன், வெல்லம் இவைகளை போட்டு கொடுக்கலாம்.

தாம்பூர பற்பம்.

வெள்ளை எருக்கன் பால் படி கால் கலயத்தில் பிடித்து 1835-ம் வருஷத்திய ஆறு காசு துட்டை அதில் முப்பது நாள் போட்டு வைக்கவும். 31-வது நாள் வெள்ளை எருக்கன் தலையை கலத்தின் நிறைய அடைத்து சீலை செய்து கெஜபுடம் போடவும்.

*   *

தங்க பற்பம்.

நத்தைச் சூரி இலையை அரைத்து தங்கத்திற்கு கவசம் செய்து விராகன் எடைக்கு 10 விரட்டி வீதம் புடம் போடவும், பற்பமாகும். பசி அதிகரிக்கும். புஷ்டியான ஆகாரம் சாப்பிடவும், அனுபானம் வெண்ணெயில் தாது விர்த்தியாகும்.

பவழ பற்பம்.

ஒரு பலம் கொடிப் பவழத்தை 4 எலுமிச்சம் பழ ரசத்தில் ஊற வைத்து ஒரு நாள் கழித்து எடுத்துக் காய வைத்து ஓட்டில் வைத்து எருக்கன் பால் விட்டு சீலை மண் செய்து 30 விரட்டியில் புடம் போட பற்பமாகும். சூடு, இருமல் இவைகளுக்கு வெண்ணெயில் கொடுக்கவும்.

அண்ட_சுன்னம்.

வீரம், பூரம், கெந்தகம், ரசம் வகைக்கு பலம் 1 பொடித்தலைச் சார் விட்டு அரைத்து ~~வில்லை~~ தட்டி காய வைத்து 30 விரட்டியில் புடம் போட சுன்னமாகும். வெண்ணெயில் வெல்லத்தில் கொடுக்க அண்ட வாயு, தமர வாயு, சாதாரண வாய்வுகளும் தீரும். தேனிலும் கொடுக்கலாம்.

கெந்திப்_பற்பம்.

கெந்தகத்தை பெரும் பூசனிச்சார், ~~ஈர~~ வெங்காயச் சார், இளநீர் இவைகளில் சுத்தி செய்து சிரசிண்ணி இலையை அரைத்து உள்ளே கெந்தியை வைத்து சீலை செய்து கோழிபுடம் போட பற்பமாகும். சூலை, மேகம், நடிப்பு ஆருத புண் இவைகள் தீரும். சற்குருவே துணை செய்வார். நிச்சயம்.

பூரப்பற்பம்.

பூரத்தை முலைப் பாலில் சுத்திப் பண்ணி பன்றி மலத்தை ஒரு கலயத்தில் கால் வாசி போட்டு மத்தியில் பூரக் கட்டியைப் போட்டு மேலே மேற்கண்ட மலத்தைக் கொட்டி மூடி 7 சீலை மண் செய்து காயவைத்து விராக புடம் போட்டு பற்பத்தை பத்திரப் படுத்தவும். வெட்டை, வெள்ளை, மேகம் முதலியவைகள் எல்லாம் தீரும்.

தாம்பூரப்_பற்பம்.

~~பற்பத்தில் வெகு கடினம் தாம்பிர பற்பம் பண்ணி நால் சிவ யோகம் சித்தியாகும். அற்பம் மென்ன என்னாதே.~~ தாம்பிரத்தை ஐந்து முத்திரை தகடாக சல்லி வாங்கி கொப்பான கருங்குன்றி அரைத்து கொள்ளிலையின் சாற்றில் அரைத்துக் கொண்டு சர்ப்புமாம். பழஞ்சாரம், தேசி நீரும் கலத்திலே தாம்பிரத்தைக் காய்ச்சி தோயாதேயிருக்கையில் ஏழு தரம் சுத்தி யாகும். சொல்லரிய கத்தா~~லை~~ கொண்டு வந்து அரைத்தனை தாம்பிரத்தில் பொதித்து சுத்தே சுத்தியே பெரியதொரு புடத்தைப் போடு. சொல்லரிய தாம்பிரந்தான் வெண்மையாகும். தேய்த்து மே வெள்ளை நீர் முள்ளி வாங்கி நலமான வெள்ளெருக்கன் பாலால் ஆட்டி தகட்டின் மேல் தட்டிப் பூசி அப்பனே உலர்ந்ததன் மேல் சுண்ணம்புச் சீலை ஆட்டியே பொதிந்து முன் போல் புடத்தைப் போடு. ஆத்தாதுக்கும் வடுகனுக்கும் பூசை பண்ணிப் போடு. தாட்டிகமாய் தாம்பர பற்பம் என்ன சொல்வேன். சங்கு போல் நீரியத தவளமாகும். காட்டான சித்தர்கள் சொன்ன வாக்கை ஜெகத்திலே சீடனுக்காக செப்பினேன். நாள் காட்டாதே ஒருவருக்கும் கை முறையது தப்பாது. காட்டினல் கடநரகில் மாளுவாயே. மாளாதே என் மக்காள் சொல்லக் கேளு. மகத்தான பற்பத்தை பதனம் பண்ணு. கோலான சூதமொரு பலத்துக்கப்பா குறிப்பான பற்பம் ஆகும். கலந்து போடு, தோலான வெங்காரும், எருக்கன் பாலும் சேர்த்தாட்டு. சூதமது விரைந்துபோகும். --- வேளை நீ வில்லை செய்து அகலில் இட்டு மேல்மூடி சீலை செய்து குக்கிடத்தில் போடு. கோலான சூதமது தாம்பிர பற்பம். கொடிதான சுன்னமாம். குருவும் மாச்சே. (5) குருவெடுத்து நவலோகம் தன்னில் ஈயே. குறையாத பத்தரையாம் மாத்தும் மாறும். மழுவான சரக்கெல்லாம் சுன்ன பற்பத்தில். புணவிடைதான் அநுபானத்தில் உன்ன செரியான மண்டலந்தான் கொண்டாக்கில் தீராத குன்மம் எட்டும், வாய் சூலை அறுபத்திநான்கும், கிரந்தி. குஷ்டம் மாறாத ரோகமெல்லாம் அகலும் தானே. தேசீ நீர், கழுதை நீர், கேசரி என்ற பெயர். ?

பூர_பற்பம்.

பூரத்தை கோல வெங்காயத்தில் வைத்து புடம் போட பற்பம் ஆகும். வெள்ளை வெட்டைக்கு கொடுக்கலாம்.

அன்னபேதி_செந்தூரம்.

5-பலம் அன்ன பேதியும் 5-பலம் வெடியுப்பும் உரவாகும்படி ~~தாள்~~ செய்து ஓட்டில் இட்டு சிறு தீயாக எரித்துக் கொண்டு இரும்புக் கரண்டியிலை பிரட்டி பிரட்டிக் கொண்டு

இருக்கவும். புகை அடங்கி செந்தூரம். பிறகு அந்த இறக்கி அதோடு 5 பலம் அன்ன பேதியும் பச்சைகாக சேர்த்து மேனிச் சார் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து 30 விரட்டியில் புடமிட்டு எடுத்து ¼ கால் பலம் வீரம், கால் பலம் பூரம் சேர்த்துக் கோர்வைச் சார் விட்டு அரைத்து வில்லைத் தட்டி காய வைத்து 1 புடம் போட செந்தூரம் ஆகும். மேற்கண்ட மருந்தை 1 அரிசியெடை தேனில் குழந்தைகளுக்கும், 2, 3 அரிசியெடை பெரியவர்களுக்கும் கொடுக்கலாம். வெள்ளை வெட்டை, ஜன்னி, விஷ பேதி, அசீரணம், நரம்பு தளர்ச்சி, வாத சீதளம், புளியேப்பம், மாரடைப்பு, உதிரச் சிக்கல் நீங்கும். மேக வெள்ளைக்கு வெண்ணெயில் சாப்பிடவும். அநேக நோய் தீரும். சுபம். சுபம்.

கெற்போற்பத்தி மெழுகு.

பொன்னுசாமி வைத்தியர் அவர்கள் செய்த முறை.

உலர்த்திய ஆத்து தும்மட்டி விதை பலம் 10, சுத்தி செய்த வாளம் பலம் 10 இவை இரண்டையும் சேர்த்துக் குழித் தயிலம் இறக்கிக் கொள்ளவும்.

விரலி மஞ்சள், தோலா 7 கல்வத்திலிட்டு மேற்கண்ட தயிலம் 1 தோலாவை சிறுகச் சிறுக விட்டு நன்றாக மெழுகு பதமாக அரைத்துச் சீமிழில் வைத்துக் கொள்ளவும்.

மாதவிடாய் வீட்டுக்கு விலக்குமான மறுநாள் முதல் 3-நாளைக்கு காலையிலும், மாலையிலும் திரேக திடம், வியாதி பலமறிந்து 3, 5 குன்றி எடை வரையில் உட்கொண்டு மேலே காபிச் சாப்பிடலாம்.

உப்பில்லா பத்தியம்.

வென்னீர் சாதம் சாப்பிடவும். மருந்தின் வேகத்தால் வயிற்றுவலி, எரிச்சல், ஏற்பட்டால் நாவல் பட்டை கஷாயம் சாப்பிடவும். (உபயோகம்) சூதகக்கட்டு, சூதக பந்தம், வயிற்று வலி, இடுப்பு வலி, கர்ப்ப பையில் உள்ள புழுக்கள் முதலிய ரோகங்கள் தீரும். கர்ப்பம் தரிக்கும் அனுபவ சித்தி பெற்றது. ~~இந்த முறை டாக்டர் பொன்னுசாமி அவர்கள் சொன்னது. சுபம்~~.

பேதி அல்வா செய்யும் முறை.

ரேவல் சீனிப் பால் எடை 1-க்கு ரோஜாப்பூ குல்கந்து எடை 10-ஆக சேர்த்துக் கொள்ளவும்.

செய்முறை:- ரேவல் சீனிப் பாலை கல்வத்தில் நன்றாய் அரைத்து பிறகு குல்கந்தைக் கூட்டி மெழுகு போல் அரைத்து வாய் அகன்ற சீசாவில் வைத்துக் கொள்ளவும். சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு காபி குடிக்கவும். நன்றாக பேதி ஆகும். சுடு தண்ணீர் உபயோகிக்கவும். ~~சுபம்~~.

சிவனார் அமுர்த் ஆக்ரானம் அல்லது ரசம்.

வெங்காரம், கருநாபி, மனோசிலை, கெந்தகம், ரசம் அக்ராக்காரம் திப்பிலி, இவைகள் வகைக்கு விராகன் ½, சுக்கு விராகன் 3½, மிளகு விராகன் 7 இவைகளை நயமாக அரைத்து வைத்துக் கொண்டு இதை கவிக்கம், நசியும் உள்ளுக்கும் கொடுக்கலாம். தலைவலி, ஜன்னி, சுரம், சலதோஷம் முதலியதும் தீரும். தேனில் கலந்து உள்ளுக்கும் கவிக்கமும் போடலாம். இதை கல்வத்தில் 4 ஜாமம் அரைக்கவும்.

ஆக்ரான புகை.

கருங்குங்கிலியம், கெந்தகம், மஞ்சள் இவைகள் வகைக்கு சமஎடையாக எடுத்து இடித்து ஜலம் விட்டரைத்து துணியில் தடவி உலர்த்தி திரியாக செய்து கொளுத்தி நாசியில் புகை பிடிக்க சலதோஷம், சளி, தலைப் பாரம், மயக்கம் முதலியன தீரும்.

கெந்தக மெழுகு.

சுத்தி செய்த கெந்தகம் பலம் 1, சுத்தி செய்த பூரம் விராகன் 1, பனங்கற்கண்டு பலம் 2, கெந்தகத்தையும், பூரத்தையும் நன்றாக அரைத்து பிறகு பனங்கற்கண்டை கூட்டி அத்துடன் பிறகு சிவனார் வேம்பு குழித்தயிலம் சிறுக சிறுக விட்டு மெழுகு போல் அரைத்து

சீசாவில் வைத்துக் கொண்டு மிளகு பிரமாணம் வெல்லத்தில் வைத்துச் சாப்பிடவும். பத்தியம் நோய்க்கு தக்கபடி. தீரும் வியாதி செம்மேகம், கரு மேகம், படை, தேமல், சிட்டை, விஷகடி, முதலிய வியாதிகள் குணமாகும். இந்த முறை மேலானது. நாமக்கல் டாக்டர் பொன்னுச்சாமி அவர்கள் சொல்லி மோகனூர் வை. முத்தப்பழனி வைத்தியர் மகன் பெருமாள் வைத்தியர் எழுதும் போது மேற்கண்டவர் வயது 41-ல் எழுதப்பட்டது.

23.8.62. **செந்தூரப்படலம்.**

ஆறுமுக செந்தூரம்.

ரசம் பலம் 5, காந்தம் பலம் 7, வெங்காரம் பலம் 8, கெந்தி பலம் 9, கல்லுப்பு பலம் 4 அப்பிரப்பொடி பலம் 12, எமரிச் சார் விட்டு 8 ஜாமம் ஆட்டி மூன்று பைசா அகலமுள்ள வில்லை லேசாய் தட்டி வெய்யிலில் எட்டு நாள் வரையில் காயவைத்து புது சட்டியில் வில்லையை ஒன்றோடு ஒன்று படாமல் பரப்பி வைத்து ஒரு விறகால் 4 ஜாமம் எரித்து எடுத்துக் கொண்டு கல்வத்தில் அரைத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். சகல வியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

நாக செந்தூரம்.

நாகத்தை சட்டியில் போட்டு உருக்கி உருக்கு முகத்தில் கார்ந்தத்தையும் ஓரிலை தாமரையும் அரைத்து உருண்டைச் செய்து கொண்டு நாகத்திற்கு கொடுக்க செந்தூரமாகும். சகல மூலத்திற்கும் கொடுக்கலாம்.

வீர செந்தூரம்.

வீரத்தை நறுக்கி காட்டுக் கொட்டைப் பாலில் முழுதும் படியாக போட்டு நன்றாக உலர்ந்த பின் கல்வத்தில் போட்டு மேற்படி கால் விட்டு அரைத்தால் செந்தூரமாகும். நல்ல சிகப்பாகும். வயிற்று வலி, குன்மம் தீரும். ஒரு அரிசியெடை தேனில் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

லிங்க செந்தூரம்.

லிங்கம் பலம் 1-க்கு மனிதருடைய தலை மயிர் பலம் 2 மேற்கண்ட லிங்கத்திற்கு தலை மயிரை சந்து இல்லாமல் சுற்றி துணியில் பொட்டணம் கட்டி பொட்டணம் முழுதும் படியாக நெய் விட்டு திரி ஒன்று போட்டு தீபம் கொளுத்தி விடவும். நெய் சுண்டினால், செந்தூரமாகும். ஜீரத்திற்கும், ஜன்னிக்கும், தேனில் கொடுக்கவும்.

உலர்ந்த லிங்க செந்தூரம்.

மேற்கண்ட லிங்கத்திற்கு கொட்ட இலையை அரைத்து அதன் மேல் வெள்ளை பூண்டை அரைத்து பூசி கவசம் செய்து சீலை மண் செய்து 7 எருவில் புடம் போட செந்தூரமாகும்

லிங்க செந்தூரம்.

சிவனார் வேம்பு வேரை அரைத்து கவசம் செய்து ஊமத்தம் காயை குடைந்து அதற்குள் வைத்து சீலை மண் செய்து 5 எருவில் புடம் போட செந்தூரமாகும். மேற்கண்ட லிங்க செந்தூரம் லிங்கத்திற்கு முலைப்பால், எலுமிச்சம்பழச்சார், குப்பமேனிச் சார், இதுகளில் சுருக்கு கொடுத்து மருதாணி இலையை அரைத்து கவசம் செய்து ஐந்து எருவில் புடம் போட செந்தூரமாகும். மேற்கண்ட லிங்க செந்தூரம் லிங்கம் பலம் 1 அரை ரூபாய் எடை நாட்டுச் சாராயம் வாங்கி புது சட்டியில் ஊற்றி லிங்கத்தையும், கொடி வேலி இலைச் சாறும் கொஞ்சம் பிழிந்து சட்டியில் மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து சாராயம் சுண்டுகிற வரையில் தீபாக்கினியாக எரிக்கவும். எரிக்கும் போது சத்தம் கேட்கும். சட்டி மேல் கவசத்தை உடைக்கவும். அப்போது மேற்கண்ட கவசம் வேறே போடவும். சுண்டினவுடன் கட்டியை எடுத்து நனிக்கி வைத்துக் கொள்ளவும். சகல வியாதிகளுக்கும் கொடுக்கவும். பிரசவ காலத்தில் சதக்குப்பையை வருத்து தூள் செய்து எடுத்துக் கொண்டு கொஞ்சம் வெந்நீர் வைத்து அதில் இந்த தூளை போட்டு செந்தூரம் கொஞ்சம் போட்டு கொடுக்கவும். வயிற்றில் உள்ள ரத்த அழுக்கு எல்லாம் நன்றாக போய்விடும்.

வீரச் செந்தூரம்.

வீரம் விராகனிடை 3/4, பூரம் விராகனிடை முக்கால், லிங்கம் விராகனிடை மூன்று, சீனக்காரம் விராகனிடை மூன்று இவைகளை ஒன்றாக பொடிச் செய்து முலைப் பால் விட்டு குழப்பிக் கொண்டு கோழி முட்டையை பொத்து எல்லாவற்றையும் ஊற்றி விட்டு ஐவ்வையும் எடுத்து விட்டு அந்த முட்டை கோவக்குள் மருந்தை எல்லாம் போட்டு அடுப்பில் ஒரு சட்டியை வைத்து சட்டியில் பாதி மணலைப் போட்டு முட்டையை மணலில் புதைத்து எரிக்க எள்ளு முலைப் போல் பொங்கும். சமயத்தில் இறக்கி குழி அம்மியில் வைத்து அரைத்து சீசாவில் வைக்கவும். ஆறு மாதம் சென்று எடுத்தால் அதிக காரம். அப்போது ஒரு அரிசி எடைக் கொடுக்கவும். ஒரு நாள் கொடுக்க வியாதிகள் தீரும். உடனே கொடுத்தால் மூன்று நாள் ஆறு வேளைகள் கொடுக்கவும். புளி ஆகாது, ஜீரம், ஜன்னி, வாய்வு, மற்ற வியாதிகளும் தீரும்.

ரசச் செந்தூரம்.

ரசம், நெல்லிக்காய், கெந்தகம் வகைக்கு பலம் 2 அம்மான் பச்சரிசி சாற்றிலை அரைத்து குளிகையாக செய்து குளிகையை காசிக் குப்பிக்குள் வைத்து பல பக்கங்களிலை மூடி சீலை மண் வலுவாய் செய்து ஒரு சட்டிக்கு மத்தியில் துவாரம் போட்டு மத்தியில் குப்பியை வைத்து குப்பி நிறைய உப்பைக் கொட்டி சட்டி மூடி சீலைமண் செய்து ஒரு ஜாதி விறகால் எரித்து மறுதினம் எடுக்க 12 மணி நேரம் எரிக்கவும். அரதேதியம் போல் செந்தூரம் ஆகும்.

இதுவகை ரச செந்தூரம்.

ரசம், கெந்தகம், நவாச்சாரம் இவைகளை அம்மான் பச்சரிசி சாற்றிலை அரைத்து மேலே கண்ட பிரகாரம் சட்டிக்குள் வைத்து எரிக்க செந்தூரமாகும்.

லிங்க செந்தூரம்.

லிங்கத்தை சுத்தி செய்து இருபது சேர் கொட்டையை வெட்டி சட்டியில் பரப்பி லிங்கத்தை வைத்து மேற்கண்ட கொட்டையை மூடி வேப்பெண்ணெயில் நிறைய விட்டு எரிக்கவும். நெருப்புப் பற்றி எரிந்து நின்ற பிறகு எடுத்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அமுரி திரவாகம்.

தச தீக்ஷைப் பூனீர் பத்து தடவை சுத்திச் செய்த பூனீர் என்று பெயர். தச தீக்ஷை உப்பு என்றால் பத்து தடவை சுத்தி செய்த கடல் உப்பு என்று பெயர். இவ்வகள் இரண்டும் வெடியுப்பும் இவை மூன்றும் சமமாக சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழம் சார் விட்டு அரைத்துக் கரண்டியில் போட்டு கொதிக்க வைக்க எண்ணைக் கக்கி விடும். உப்பு வெளுத்து காணவும். அதை எடுத்து வைத்துக் கொண்டு சுண்ணம்புக் கல் கொண்டு வந்து நீத்து எடுத்து மேற்கண்ட சுண்ணம்பு நீரும் மேலே சொன்ன சரக்கும் கலவத்தின் போட்டு அரைத்து அகண்ட பீங்கானில் அப்பி பனியில் வைக்க செய்நீராகும். அதை எடுத்து சீசாவில் அமைத்துக் கொண்டு வீரம், பூரம் வகைக்கு விராகனிடை ஒன்று நிறுத்து போடவும். முன் சொன்ன சரக்கை எடுத்து கல்வத்திலிட்டு மேற்கண்ட சுண்ணம்பு செய்நீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து சீலைமண் வலுவாய் செய்து காயவைத்து கோழிப் புடம் போட சுன்னமாகும். இது தான் முப்பு சுன்னம் என்றும் குருவண்டு என்றும் பெயர். இதனால் சலகமான சரக்கும் நீரும் எந்த சரக்கும் சுத்தி செய்து மேற்கண்ட முப்பு சுன்னத்தை ஒலைக் கனமாக வில்லை செய்து காயவைத்து அதற்கு உரிய பச்சிலை கற்றால் கவசம் செய்து புடம் போட சித்தியாகும். இதற்கு வைத்தியம் முப்பு என்று பெயர். அமுரி என்பது சிறுநீர் இதில் பூனீரை கரைத்து பத்து தடவை எடுப்பது. தச தீக்ஷைப் பூனீர் என்றும் கடல் உப்பை மேலே சொன்ன பிரகாரம் எடுப்பதும் தச தீக்ஷை என்றும் பெயர்.

செய்நீர் செய்யும் முறை.

கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, கரியுப்பு, வளையலுப்பு, உவருப்பு, சவுட்டுப்பு, நவாச்சாரம், எவாச்சாரம், வெங்காரம், மூங்கிலுப்பு, பூனீர் இவைகளை பனி தண்ணீர் விட்டு கல்வத்தில் போட்டு அரைத்து பீங்கானில் போட்டு அப்பி பனியில் வைக்கவும்.

வீரம்; பூரம் வகைக்கு விரார்கனிடை போட்டு எடுத்து சீசாவில் அடைக்கவும். உயிர் சரக்குகளை கட்டும்.

*

அய செந்தூரம்.

அயம் பலம் 1, ஊசி காந்தம் பலம் 1, ரசம் பலம் $\frac{1}{2}$, வீரம் பலம் $\frac{1}{2}$, கொட்டைக் கிரந்தி சார் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஐம்பது விரட்டியில் புடம் போடவும். பிறகு குமரி சாற்றில் அரைத்து 40 விரட்டியில், ஒரு புடம் போடவும். மூன்றும் புடம் பொடி தலைச் சார் பொற்றலை கையான் சார், கீழா நெல்லிச் சார், எலுமிச்சம்பழச் சார், இவைகளில் 4 ஜாமம் அரைத்து வில்லை தட்டி காயவைத்து 30 விரட்டியில் புடம் போடவும். க்ஷயம், வாந்தி, சத்திக் குன்மம், தாது புஷ்டிக்கும் தேனிலாவது வெண்ணெயிலாவது கொடுக்கவும்.

விப்புருதி கண்டமாலை ஒரு விப்புருதிக்கு.

தாம்பூர பற்பம்.

உப்புத் தடவி வைக்கோலில் சுட்ட வர்ணத் தகடு பலம் நாலு கத்தரிச்சு அயம் 2 பலம் பித்தளை பலம் 2, கெந்தி, மனேசிலை, லிங்கம் வகைக்கு பலம் $\frac{1}{2}$, குமரிச் சார் விட்டு 3 நாள் அரைத்து வெய்யிலில் காய வைத்து ஓட்டில் போட்டு சீலை செய்து கலயத்தில் மணல் பாதி போட்டு அதை வைத்து மேலே மணல் போட்டு சீலை செய்து 8 சாமம் எரித்தால் செந்தூரம் ஆகும். அநுபானம் அறிந்து கொடுக்கவும்.

நாக ரச செந்தூரம்.

நாகத்தை உருக்கி ஏழு தரம் இலுப்ப எண்ணெய் விடவும். மறுபடியும் ஏழு தரம் வெள்ளாட்டு கோமயத்தில் விடவும். சுத்தியான நாகம் பலம் 2$\frac{1}{2}$, இரசம் பலம் 2$\frac{1}{2}$, வீரம் பலம் $\frac{1}{2}$, சு. ரசத்தை குகைக்குள் வைத்து அதன் மேல் குகையை மூடி மேல் குகையில் துவாரம் செய்து நாகத்தை உருக்கி விடவும். கெட்டியாகும். பிறகு சீலை மண் செய்து கெட்டியானவுடன் எடுத்து $\frac{1}{2}$ பலம் வீரம் கல்வத்தில் போட்டு திராவகம் உப்பு திராவகம் பீங்கானில் போட்டு 2 நிமிஷம் நெருப்பில் வைத்து இரண்டு சாமம் அரைத்து குப்பிக்குள் கெட்டு-காசக்கு-அடைத்து குப்பிக்குள் வைத்து கார்க்கு அடைத்து கோழி முட்டை கருவும் புது செம்மணும், களி மண்ணும் கருவேலன் பிசின் தண்ணீர் விட்டு அரைத்து குப்பியின் மேல் ஏழு சீலை மண் செய்து காய்ந்த பின் ஒரு சட்டியில் பாதி மணல் போட்டு மையத்தில் குப்பியை வைத்து மேலே மணல் கொட்டி அடுப்பில் வைத்து 12 மணி நேரம் எரிக்கவும். செந்தூரம் ஆகும். சகல வியாதிகளுக்கும் கொடுக்கலாம். சகல மூல ரோகங்களுக்கும் கொடுக்கலாம். அறிந்து பார். கை கண்டது.

மயில் துத்தச் செந்தூரம்.

மேற்கண்ட துத்தத்தை ஒரு சிறு கலயத்தில் போட்டு வெப்பாலை நிறைய விட்டு புடம் போட செந்தூரம் ஆகும். அரிசியெடை தேனில் கொடுக்க க்ஷயம், சீலை, இருமல் நீங்கும். சூதகத்தை உடைக்கும். 3 -புடம் போடவும்.

அறுமுக செந்தூரம்.

தானென்று என் குருவாம் சுப்பிரமணி சுவாமி சொன்ன ஆறு வகையாம் செந்தூரத்தை
நானென்ற நீ என்று வேதிரயுண்டோ நாட்டுகிறேன் புலத்தியனே நன்றாய் கேளு
வானென்ற ரசம் கலஞ்சு வீரம் ஒன்று மகத்தான பூரம் ஒன்று லிங்கம் 5
ஆனென்ற ரச செந்தூரம் 5 அப்பனே கெந்தகந்தான் களஞ்சு 3 மூன்றுன ஆறு வகையும்
களஞ்சு ஈரெட்டாச்சு உத்தமனே இடை பாகம் அறிந்து கொள்ளு நன்றாக சுத்தி செய்து
கல்வத்தில் இட்டு நாடி அரை இரு சாமம் ஆன பின்பு சண்டாலா தேன் மொழியால்
பாலில் சாமம் தான் அரைத் நிழல் உணர்த்தி எடுத்துக் கொண்டு அண்ட பகிரண்ட ஐயர்
ஈஸ்வரனுமா எனக்குச் சொன்னார் ஆதால் நான் உரைத்தேன் மகாதேவர் முன்னே வைத்துப்

லைவத்துப் போற்றி மன மகிழ்ந்து திரிகடுகு வெதுப்பிய தேனும் மருத்தானசெந்தூரம் பணவிடையில் கொள்ளு மகிழ்ந்து கேள் மகிழ்ந்து கேள், சூலை குன்மம் கிரந்தி, பதினெட்டும் அவ்வாக மேல் தடிப்பு மேக வாய்வு மகிழ்ந்து கேள், வழி ஐந்து வாதம் 84, நன்றான தகரகமாம். குதிரை வாய்வு ஒனியானத காசம் எட்டு சன்னி 13-ம் கண்டாலும் பயந்தோடும் அநுபானத்தில் கை பாகம் செய் பாகம் தவறிடாதே. உண்டானபடி சொன்னேன். கால்வேரகம் ஒளிந்து போகும். பத்தியந்தான் இச்சா பத்தியம். என்றும் வைத்தியர்க்கு மனது நொந்தால் ஈவரால் ஆகாது. கர்மம் மிஞ்சும். புண்ணியனே அவர் மனது குளிர்ச்சி பண்ணி வெகுமானம் ஈந்து நன்றியே பகுத்தியாய் இருதயத்தில் என்னி நமனும் நாடான், அன்னியமென்றெண்ணாதே வைத்தியோரை ஆபத்து காத்தவனே ஆசானாகும். திரிகடுகு சூரணம்.

தாளக பற்பம்.

அரிதார கட்டிதனை அகத்திலே சுண்ணாம்பு குள்ளே வைத்து சுத்தி அதை செய்து நீர் எடுத்துக் கொண்டு இகத்திலே மனிதருக்கு சீலை காசம், எலி கடிகள் விஷ பாகம், காச்சல் மகோதிரகள் வருகின்ற நோய்களுக்கு வையே சுக்கில்.

பைத்தியத்திற்கு நசியம்.

இலுப்பக்கட்டி, வரிகுமட்டிச் சோர் பிழிந்த சார், வெள்ளருகு இடித்த பிழித் சார், ஈர வெங்காயம் இவைகள் ஐந்து சிறு பிள்ளைகள் மூத்திரத்தில் கலக்கி இரண்டு மூக்கிலும் நசியம் விடவும். பயித்தியம் தீரும்.

முருங்கப்பு லேகியம்.

முருங்கப்பு பலம் 10 ⟶ கஞ்சா பலம் 1

சிறு பூனைக்காலி விதை, மராட்டி மொக்கு, கசகசா, வால்மிளகு, பூமிசர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, ஜாதிக்காய் சீரகம், சுக்கு, கோஷ்டம், ஏலம், ஜாதிப்பத்திரி, மிளகு, வகைக்கு பலம் 1 சீனி சேர் 2, பனங்கற்கண்டு பலம் 4, பசும் பால் படி ½, பசும் நெய் படி ½, பசும் பால் விட்டு முருங்கைப் பூவை அரைத்து கடைச் சரக்குகளை இடித்து கூட்டி தேன் கூட்டி லேகியம் கிளறி கழச்சக்காய் அளவு பிரமாணம் அந்தி, சந்தி இருவேளையும் சாப்பிடவும். இரவில் சாப்பாட்டுக்குப் பிறகு பசும்பால் சாப்பிடவும். ~~அயத்~~ தாதுவிர்த்தியும், ரத்தவிருத்தியும் உண்டாகும். அயச் செந்தூரம் வைத்துச் சாப்பிட்டால் ரத்த சுத்தி உண்டாகும். விந்தூறும். இந்திரியம் கெட்டிப்படும், தேகம் புஷ்டியாகும்.

~~அரவு குரிச்சி வைத்தியர் சுவாமி முறை.~~

காசம் ஐந்து. சுவாசம் ஐந்து. க்ஷயம் ஐந்து, சிலேத்ம ரோகம் 96-க்கு மருந்து.

வெடியுப்பு சேர் ½, சீனிக்காரம் சேர் ½, கல்வத்தில் இட்டு கொம்பு பாகை இலைச் சார் விட்டு நான்கு ஜாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் செய்து நூறு எருவில் புடமிட சுன்னம். அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு நான்கு குன்டுமணி எடை அந்தி சந்தி (காலை-மாலை) கால் மண்டலம் அரை மண்டலம், ஒரு மண்டலம், சாப்பிட மேற்கண்ட படி வியாதிகள் தீரும். சுபம்.

மேகம் இருப்பத்தி ஒன்றுக்கும், கிரந்தி பதினெட்டுக்கும் சூலை பதினெட்டுக்கும் அரையாப்பு லிங்கப் புற்று, யோனிப்புற்று, மேகவியாதி சகலத்திற்கு,

பாதரசம் பலம் 1, கெந்தகம் பலம் 2, எவ்வளவு நாள் பட்ட வேப்பெண்ணெய் கிடைக்கிறதோ அதை வாங்கி நான்கு ஜாமம் அரைத்து எடுத்து சிமிழில் வைத்துக் கொண்டு குன்டுமணி அளவு கருப்புக் கட்டியில் வைத்து அந்தி சந்தி (காலை-மாலை) கால் மண்டலம், அரை மண்டலம், ஒரு மண்டலம் சாப்பிடவும். மேற்கண்ட வியாதிகள் தீரும். சுபம்.

குழந்தை வலிப்பு 5 அல்லைய கட்டிய சுவாசம் இழுப்புக்கு எண்ணெய்.

வேப்பெண்ணெய் படி 1, மயில் இறகு பலம் ¼ சங்கம் தழை பிடி 1, சங்கம் தழையும் மயில் இறகையும் ஒரு வெண்மையான துணியில் கட்டி மேற்கண்ட எண்ணெயில் போட்டு வெளியில்

அடுப்புக் கூட்டி தீ எரிக்கவும். மேற்கண்ட படி பந்தில் குபீரென்று தீ பிடித்து எரியும்: அது சமயம் ஒரு சட்டிக் கொண்டு மூடி கீழே இறக்கி வைத்து மேற்கண்ட பந்தை எடுத்து எறிந்து விட்டு எண்ணெயை எடுத்து பாட்டிலில் வைத்துக் கொண்டு காசு எடை மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க மேற்கண்ட படி வியாதிகள் தீரும். சுபம்.

ராஜ அமிர்தாதி லேகியம்.

சுக்கு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், தானிக்காய் தோல், கடுக்காய்த் தோல், மிளகு, நிலப்பனைக் கிழங்கு, கிராம்பு, பூனைக்காலி விதை, தேற்றான் விதை, சந்தனத் தூள், மர மஞ்சள், அகில் கட்டை, செஞ்சந்தனம், கோஷ்டம், அக்லாக்காரம், மஞ்சிட்டி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வகைக்குப் பலம் ஒன்று (1) ஏலம், கிராம்பு, லவுங்கப்பட்டை, கருவாப்பட்டை, கோரக் கிழங்கு, கூகைநீர், வாய்விளங்கம், வால் மிளகு, சடாமாஞ்சி, பேய்புடல், ஓமம், கசகசா, அரசன் வித்து, ஆலம் வித்து, முருங்கன் வித்து, சிவதை வேர், அமுக்கிறாங் கிழங்கு, பேரீச்சம் பழம், முந்திரிப் பழம், வகைக்குப் பலம் 1, சந்தன அத்தனர், தோலா $\frac{1}{2}$, சூரத்துப் பன்னீர் படி $\frac{1}{4}$, தேன் படி $\frac{1}{2}$, பசு நெய் படி 1, பசும் பால் படி 1, கரும்புப் பால் படி 1, பருத்திக் கொட்டை பால் படி $\frac{1}{4}$, சர்க்கரை வீசை $\frac{1}{2}$, சாரப் பருப்பு 2, பாதாம் பருப்பு பலம் 2, குங்குமப்பூ 1 விராகன், பச்சைக்கற்பூரம் 1 விராகன், கோரோசனை 1 விராகன், சீருக்கற்கண்டு வீசை 1, அபின் ரூபாய் எடை 1, கஞ்சா பலம் 1, இவை இரண்டையும் சுத்தி செய்யும். அபினியை நெய்யில் வறுத்து கொள்ளவும், கஞ்சாவை நன்றாய் தண்ணீர் விட்டு பிசைந்து கழுவிக் கொண்டு பால் விட்டு அரைத்துக் கொள்ளவும். கடைச் சரக்குகளை வறுத்து இடித்து வஸ்திரக் காயம் செய்து கொள்ளவும்.

கஷாய சாமான்கள்:- கண்டங்கத்திரி, நன்னாரி, வெட்டி வேர், விளாமிச்சம் வேர், சந்தனச் சிராய், நாயுருவி வேர், நெருஞ்சி வேர், வேலாமரத்து வேர், வில்வ வேர், வகைக்கு பலம் 1 இவைகளை இடித்து கஷாயம் வைத்துச் சுண்ட வைத்து கொண்டு கரும்புப் பால், பசும் பால் இவைகளை சேர்த்து சர்க்கரையை கொட்டி பாகு செய்து லேகியம் கிளறவும். சகல வியாதிக்கும் கொடுக்கலாம். மூலம், கிராணி, அதிசாரம், இவைகளுக்கும் தாதுவிர்த்தியும் உண்டாக்கும். சோகை, காமாலை, எலும்புருக்கி இவைகளுக்கும் கொடுக்கலாம். இச்சா பத்தியம்.

கால பைரவ எண்ணெய்.

~~நாமக்கல் டாக்டர் பொன்னுசாமி அவர்கள் சொன்னது.~~

சுத்தி செய்த சேங்கொட்டை 12 சுத்தி செய்த கெந்தி விராகன் 10 இவைகளைச் சேர்த்து $\frac{1}{4}$ படி சித்தாமணக் கெண்ணெயில் போட்டுளரித்து பதத்தில் சேங்கொட்டை வெடித்து மிதக்கும் சமயத்தில் தயிலத்தை வடித்து வைத்துக் கொள்ளவும். கல்வத்தில் 2 விராகனிடை தயிலம் விட்டு சுத்தி செய்த 2 விராகனிடை ரசம் கூட்டி ரசம் மறுபடியும் மடியும் வரை அரைத்துப் பின் 6 தோலா தனித்த நெய் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு 6 நாள் காலையில் விளக்கெண்ணெய் ஸ்நானம் செய்த பிறகு மருந்து சாப்பிட்டு காய்ச்சிய பசும் பால் சர்க்கரை போட்டு தேவையானது சாப்பிடவும். உப்பு, புளி கூடாது. 6 நாளைக்கும் விளக்கெண்ணெய் தேய்த்துக் கொள்ளவும். 7-வது நாள் உப்பு சேர்க்கவும். நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், 48 நாள் கூடாது. பசும் பால், மோர், இவைகள் சேர்க்கலாம்,

தீரும் வியாதிகள்:- கண்ட மாலை, மோகம் ரணம், மேகஊரல், கைகால் முடக்கு, சூலை 18, தடிப்பு, சொறி, வெள்ளை விழுதல், குஷ்டம் 18, பெரு வியாதி கிரந்தி அரையாப்பு படர் தாமரை, துடவாலை, லிங்க புத்து, யோனிப்புத்து, வெண் குஷ்டம், கருங் குஷ்டம், முதலிய பயங்கர வியாதிகள் எல்லாம் குணமாகும். பத்தியம் கடுமையானது. பசும் பால், பச்சரிசி, சாதம், பசும் நெய் இவைகள் மட்டும்

~~[illegible]~~ சேர்க்கவும், உப்பு, புளி, காரம் கூடாது, 48-நாளைக்கு நல்லெண்ணெய், கடுகு மஞ்சள் கூடாது. நெய், சீரகம், கூட்டி தாளிக்கலாம், புகையிலை போகம், கண்டிப்பாய் கூடாது. பத்தியம் தவறினால் கெடுதல் உண்டாகும். பத்தியம் தவறாமல் மருந்து சாப்பிட்ட வர்களுக்கு சரீரம் தங்க மயமாகும். ~~சுபம். சர்க்கரை [illegible] உண்டாகும். சுபம்.~~

புழு வெட்டுக்கு.

பொரித்த வெங்காரம் 1 விராகனிடையை வெங்கலப் பாத்திரத்தில் வைத்துக் கையாத தகரைச் சார் விட்டு இரும்பு கொண்டு அரைக்கவும்: 5 ஜாமம் அரைத்து மறு படி பசும் வெண்ணெய் கூட்டி சங்கு கொண்டு 5 ஜாமம் அரைக்கவும். இந்த களிம்பை மயிர் உதிர்ந்த இடங்களில் தடவினால் மயிர் முளைக்கும். 6, 7 நாளைக்குள் மயிர் உண்டாகும்: சுபம்.

சிவ குரு.

வெள்ளைப் பாஷாணம் பலம் 1, வாலை ரசம் பலம் முக்கால், இரண்டையும் கல்வத்தில் போட்டு வெத்திலை பாக்கு போட்டு மென்று எச்சிலை துப்பி 9 ஜாமம் அரைத்து அரைக்கும் போது வேப்பங் கொழுந்து நுனியில் உள்ள இலைகளை 1 பிடி போட்டு அரைக்கவும். அரைத்து உருண்டையை செய்து தாம்பிர டப்பியில் வைத்து இரும்புகம்பியால் கட்டி முறுக்கி 10 சீலை மண் வலுவாக செய்து கோழிப்புடம் போடவும். உருகிக் கட்டும். இதைக் கொண்டு ஓடும் சரக்குகள் 64-யும் கட்டலாம். மேற்கண்ட கட்டை சீவி மேற்கண்ட நீரில் அரைத்து உலோகங்களுக்கு பூசி புடம் இட நீறும் சுண்ணம்பில் 7 தடவை வெள்ளைப் பாஷாணத்தைச் சுத்தி செய்யவும். ரசத்தை அழிஞ்சி சாற்றில் அரைத்து சுத்தி செய்யவும். சகல வியாதிகளுக்கும் தக்க அநுபானங்களில் கொடுக்கவும்.

கிரந்தி சூலைக்கு புகை.

வெள்ளைக் குங்கிலியம் பலம் 1, லிங்கம் பலம் 1, வெள்ளிக் காடிக் காரம் விராகனிடை 1 பசும் வெண்ணெய் பலம் 12 மேற்கண்ட சரக்குகளை வெண்ணெய் கூட்டி அரைத்து துணியில் தடவி திரி செய்து பசும் நெய் விட்டு தீபம் ஏத்தி திரியை போட்டு தீபம் மேத்தி நோயாளிக்கு முக்காடு இட்டு மூடி புகை பிடிக்கவும். வியர்வை உண்டாகும். கடைசியில் வியர்வையை துடைக்கவும். புகையை நீக்கியும் பிடிக்கவும். உடனே காச்சாத பசும் பால் $\frac{1}{2}$ படி சாப்பிடவும். தீரும் வியாதிகள் சொறி, சிரங்கு, மேக ஜ்ரல்கள், தடிப்பு, ரணங்கள், காமாலை, சூலை இவைகள் தீரும். கண்ட மாலையும் தீரும்.

வீரச் சுன்னம்.

இரும்பு மி கின்னத்தை பழுக்கக் காய்ச்சி வேண்டிய அளவு வீரத்தை நறுக்கி இதில் போட்டுமேல் சட்டி மூடி கீழே இறக்கி வைத்து ஆறிய பின் 1 நாழிகை கழித்து எடுத்துப் பார்க்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி நிற்கும். அந்த பதங்கத்தை வைத்துக் கொண்டு சீரகத்தளவு கோரைக் கிழங்கு கஷாயம், விஷ்[illegible] கிரந்தி கஷாயம் இவைகளில் கொடுக்க க்ஷயம் எட்டும் தீரும். கொடி வேலிப் பட்டை கஷாயத்தில் கொடுக்க குன்மம் தீரும். சூலை வாய்வு போகும். திரிகடுகு, லேகியத்தில் கொடுக்க சகல வியாதியும் தீரும். இச்சாப் பத்தியம்.

நந்தீசர் சண்ட மாருத மெழுகு.

பரங்கிப் பட்டை பலம் 4, கடுக்காய்த் தோல் பலம் 4, திரிகடுகு பலம் 2, கொடிவேலிப் பட்டை பலம் 2, கசகசா பலம் 1, கார்போகரிசி பலம் $\frac{1}{2}$, வெப்பாலை அரிசி பலம் $\frac{1}{2}$, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, சித்தரத்தை, வால் மிளகு, அதிமதுரம் வகைக்கு பலம் $\frac{1}{4}$ இவைகளை சூரணம் செய்து கோரோசனை குங்குமப் பூ வகைக்கு $\frac{1}{4}$ ரூபாய் எடை ~~[illegible]~~ வீதம் தூள் செய்து வைத்துக் கொண்டு தாளகம், வீரம், பூரம், லிங்கம், வகைக்கு பலம் வாங்கி சுத்தி செய்து ரச செந்தூரம் பலம் $\frac{1}{4}$, எல்லாச் சரக்கும் ஒன்றாய் கலந்து திருபலாதி கஷாயம் வைத்து அதை விட்டு அரைத்து உலர்த்தி தேன் விட்டு ஒரு ஜாமம் அரைத்து பீங்கானில் வைத்துக் கொண்டு மிளகு, பிரமாணம்

பனை வெல்லத்தில் காலை மாலை 9 வேளை கொடுக்கவும். தீரும் நோய்கள் வாதம், திமிர் வாதம் பாண்டு, மகோதரம், சூலை வாய்வு, மேக வாய்வு குடல் வாதம், மண்டை வாய்வு, குதக வாய்வு, முதலிய எல்லா வியாதியும் தீரும். பசும் பால், மாமிசம், நெய் இவைகள் சேர்க்கவும். நல்லெண்ணெய், கூடாது. கரப்பான் பண்டம் கூடாது.

நந்தி மெழுகு.

ஏலம், வால் மிளகு, அதிவிடையம், கிராம்பு, வகைக்கு விராகனிடை 1 இளம் வறுப்பாய் வறுத்து இடித்து வஸ்திர காயம் செய்து வைத்துக் கொண்டு சேங்கொட்டை 80 எடுத்து மூக்கை வெட்டி சாணிப் பாலில் போட்டு வேக வைத்து கழுவி 20 எடைக் கொட்டையை எடுத்து நாவல் பட்டை சாற்றில் வேகவைத்து நன்றாய் கழுவி எடுத்து முக்கால் படி பசுவின் நெய்யை சட்டியில் இட்டு எட்டிக்கெங் கொட்டையும், போட்டுக் காய்ச்சி கொட்டைகள் வெடித்த உடன் யாவையும் எடுத்து விட்டு மேற்கண்ட நெய்யில் பனை வெல்லம் 8 பலம் தூள் செய்து பாகு பதத்தில் சூரணத்தைப் போட்டு கிண்டி தேன் முக்கால் படி விட்டு இறக்கி மிஞ்சிய பிறகு பீங்கானில் வைத்து கொண்டு சுண்டைக்காயளவு காலை மாலை 10 நாள் சாப்பிட கிரந்தி மேகம், சொறி சிரங்கு, மூல பவுத்திரம், குதக கிரச்சி, குன்மம், சூலை பாண்டு தீரும்.

கட்டுவகை படலம்.

லிங்க கட்டு.

லிங்கம் பலம் 1 சுத்தி செய்து வகைக்கு பலம் ½ நுளாக்கி படி பொன் அரிதாரம், படிக்காரம் கெந்தகம் வகைக்கு பலம் ½ அரைக்கி கோழி முட்டைக்குள் பாதி போட்டு மேலே லிங்கத்தை வைத்து அதன் மேல் மீளு போட்டு கோழி முட்டையில் மூடி ஒரு சட்டியில் பேர் பாதி மணலைப் போட்டு அதில் முட்டைய வைத்து மேலேயும் மணலைக் கொட்டி சட்டிக்கு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து 6 ஜாமம் எரிக்க கட்டும். ஜன்னிக்கும், ஜீரத்திற்கும் தேன், முலைப் பாலிலும் கொடுக்கலாம்.

லிங்க கட்டு.

லிங்கத்தை அத்தி மரத்தை துளைத்து அதற்குள் வைத்து மூன்றும் நாள் எடுத்துக் குகையில் வைத்து வாழை மட்டை சார் விட்டு உருகி கட்டும்.

தாளக் கட்டு.

தாளகம் பலம் 1 வாங்கி சிவகிரந்தை இலையில் கவசம் செய்து குக்கிட புடம் 5 புடம் போட கட்டும், மேற்கண்ட கட்டை மிளகும், கருஞ்சலாங் கண்ணியும் அரைத்து கவசம் செய்து செப்பு சிமிலில் வைத்து சீலைமண் செய்து குக்கிட புடம் போட பற்பமாகும். மேற்கண்ட பற்பத்தை வெள்ளை எருக்கம் பால் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து ஓட்டில் வைத்து மேல் ஒடு மூடி சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட சுன்னமாகும். நவலோகமும், வில்வ பழத்தில் வைத்துப் புடம் போட கட்டும்.

வெடியுப்பு கட்டு.

வெடியுப்பும், தொட்டால் சுருங்கி இலையும், சேர்த்து அரைத்து காய வைத்து மேற்கண்ட வில்லையை ஒன்று இரண்டாய் நறுக்கி குகைக்குள் போட்டு மேல் சில்வு மூடி சீலை மண் செய்து 4 எருவில் புடம் போட கட்டும்.

பதங்கம்.

முப்பூர பதங்கம்.

வீரம், பூரம் வகைக்கு விராகனிடை 1 அரப்பொடி விராகனிடை 4 ஒரு சட்டியில் அரப் பொடியைப் பரப்பி அதன் மேல் வீரம், பூரம் வைத்து அதன் மேல் அரப் பொடியை வைத்து சட்டி மூடி சீலை மண் செய்து நான்கு நாழிகை எரிக்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி

நிற்கும். அதை சுரண்டி வைத்துக் கொள்ளவும். அரிசி எடை பனம் வெல்லத்தில் கொடுக்க தர் வியாதிகள் யாவும் நீங்கும். 20/4/62

28/4/62

லிங்க கட்டு.

தங்க ரேக்கு விராகனிடை 1, லிங்கம் பலம் 1, ரேக்கை லிங்கத்தின் மேல் சுத்தி சேர்ந்த கொட்டைய இடித்து வெண்ணெயும் சேர்த்து பிசைந்த தேங்காய் பிரமாணம் எடுத்து லிங்கத்தை உள்ளுக்குள் வைத்து சட்டியில் வைத்து மேலே சட்டி மூடி எரிக்கவும். கட்டும். செய்த ~~முறை லிங்கம்~~ உருக்குப் போல் இருக்கும்.

பூரக் கட்டு.

~~பூரக் கட்டு~~ பூரத்தை மிளகு தக்காளி, சார் வேண்டிய மட்டும் சுருக்கு கொடுத்து மேற்கண்ட இலேயை அரைத்து கவசம் செய்து லகு புடம் போட்டு எடுக்கவும். கட்டும்.

அன்ன ~~பவள~~ பவழக செந்தூரம்.

அன்ன பேதி பலம் 2, நற்ப வழம் (சுத்தி செய்தது) ~~பவளம்~~ பலம் 1 இவைகளை எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு புடமிட செந்தூரமாகும். தேன், வெல்லம், வெண்ணெய் இவைகளில் வியாதிக்கு தக்க அனுபானங்களில் கொடுக்கவும். அசீரணம்; மந்தம், அதிக உஷ்ணம் இருமல், இளைப்பு, இவைகள் தீரும்.

சோலிச் ~~சகா~~ சித்து பற்பம்.

மஞ்சள் நிறம் உள்ள சோளி 1 பலம் எடுத்து கழுவி சுத்தம் செய்து ரசபூரம், ~~ரச~~ கெந்தகம் வகைக்கு 1/4 ரூபாய் எடை மூன்று சரக்குகளையும் ஒன்று கூட்டி கல்வத்தில் அரைத்து பலகரையின் வாயில் ~~செவித்தலைச்~~ சாரத்தை ஜலம் விட்டு அரைத்து பலகரையின் வாயை மூடி காய வைத்து 2½ பலம் கற்பூர சிலாசத்தை உடைத்து அகலில் பரப்பி மேற்கண்ட மருந்து பொதிந்த சோளி என்ற பலகரையை தலசத்தின் மேல் வைத்து மறுபடி 2½ பலம் சிலாசத்தை மேலே மூடி மேல்அகல் மூடி சீலை மண் செய்து 50 வரட்டியில் புடமிட பற்பமாகும். இவைகளை நெகிழ அரைத்து வைத்துக் கொண்டு வெண்ணெய், தேன், பாதாம் அல்வா, கூழ் பாண்ட லேகியம், எலுமிச்சம் பழச் சார் இவைகளில் இரண்டு அரிசியெடை கொடுக்கவும். வெள்ளை, வெட்டை, மேகம், சொரி சிரங்கு, கிரந்தி இவைகள் நீங்கும். பத்தியம் நோய்க்கு தக்கபடி வைப்பது நல்லது.

இருப்புலி ஜோதிடர் ராஜகோபால் அவர்கள் முறை.

அக்கினி செந்தூரம்.

அரப் பொடி 4 களஞ்சு, நல்ல காந்தம் 8 களஞ்சு, தாளகம் 2 களஞ்சு, ரசம் 2 களஞ்சு, கெந்தகம் 2 களஞ்சு இவைகளை கல்வத்தில் இட்டு ஏலக்காய் கஷாயம் விட்டு நன்றாக அரைக்கவும். மறுபடி குமரிச் சார் விட்டு அரைக்கவும். கஷாயம் அரைக்கால் படி குமரிச் சார் அரைக்கால் படிக்கு குறையாமல் விட்டு அரைக்கவும். இதை வழித்து வெங்கலப் பாத்திரத்தில் தடவி, கடும் ரவியில் வைக்கவும். பொரிந்து செந்தூரமாகும். அதை அரைத்து எடுத்துக் 1 அரிசியெடை தேன், வெல்லம் இவைகளில் கொடுக்க குன்மம், மந்தம், குடல் வாய்வு, தீரும்.

வான் மெழுகு.

விந்து விந்து செந்தூரம் நாத மொழி வீரதார் சிவகாமியும் வெள்ளை சிங்கி நட்சத்திரம் புகர் வீரு ஆண் குறி எட்ட பின் தொந்தமான முருகன் பூரனொடு தாப தீப பரிசம நிடை சுத்தியாவதில்லை. பாரு, பாரு பரிசுத்தமான கல்வத்திலே சிந்தை கொண்டு பதினை ஒன்று படி சேர்த்தரைத்திடு நாளதாய் சீக்கத்திரல் எடு நாத மாமதனை சேரு நாகுரு தைலமே முந்து விட்டு ஒரு சாம நாழு மறை முற்றுமே மெழுகு உலர்ந்ததாய் மோசமன்றி பனை வெல்லத்தில் இடுமருந்து பத்தியம் இல்லையே. இல்லை, இல்லை கவ வாத சன்னி சுரம் எட்டு காச மொர்டு குஷ்டமாம், ஏற கண்ட விரை வாத சூலம், ஈலையோடு

Full of mistakes

தோஷ, அஷ்ட குன்மமும் சொல்லுகின்ற வலி மார் அடைப்போடு சூதகத்தோடு மகோதிரம் சோகை மஞ்சட் காமாலை சத்தி விதத் தொல்லை போக்கோடு பவுத்திரம் வங்கிரந்தி கண்ட மாலை சகல தாரையிற் கானவும் நீரிழவு காசு ரேகம் முதலானதும் எல்லை விட்டு ஏழு கடல் விட்டு பிணி என்ன பாடு படும். அறிகிலோம். இந்த வான் மெழு எந்த நாள் மட்டும் எல்லாகும். ~~மது தின்மை.~~

விபரம்.

ரசம், ரச செந்தூரம், கெந்தகம், வீரம், அரிதாரம், மஞ்சகௌரி, வெள்ளைப் பாஷாணம், மிருதார்சிங்கி, பூரம், வெள்ளி, லிங்கம், அபின் காந்தம், சூடம், சாம்பிராணி தங்கம் இவைகள் சேர்க்கவம். இத்துடன் நாத குரு தைலம் சேர்த்து அரைக்கவும்.

மஞ்ச கௌரி.

வெங்காரம் மஞ்ச கௌரி சரி எடை சட்டியில் வைத்து எரித்து பொங்க வைத்து ஒரு அரிசி எடை, சுக்கு கஷாயம் இஞ்சி ரசம் இவைகளில் கொடுக்க கபம் துண்டு துண்டாக வெளியில் வரும். விளக்கெண்ணெயில் கொடுக்க சகல ஜன்னியும், சுரங்களும் தீரும். ஆகாரம் பச்சரிசி, கஞ்சி ~~கூச்~~ சாப்பிடவும்.

கெந்தகப் பற்பம்.

கெந்தகத்தை சுண்ணம்பு நீரால் ஏழு தடவை வேக வைத்து எடுக்கவும். மேகங்களுக்கு தேன், வெண்ணெயில் இவைகளில் கொடுக்கவும்.

வெள்ளை மாத்திரை:

வீரம், பூரம், லிங்க ரசம் சமனிடை வரகரிசி மாவு பதினு பங்கு ~~மாவு~~ முலைப் பால் விட்டு அரைத்து குன்றி அளவு மாத்திரை செய்து வெல்லம் அல்லது பழம் இவைகளில் சாப்பிட்டு கறியும், சோறும், பால், நெய், தயிர் இவைகள் அதிகமாக கூட்டவும். மேகம் 96-ம் 8 வித குன்மமும் கண்ட மாலை இவைகள் தீரும். 6 நாள் கொடுக்கவும். விளக்கெண்ணெய் தேய்த்து குளிக்கவும். பத்தியம் இல்லை. ~~கபம். கபம்.~~

விழுதி எண்ணெய்:

விழுதி இலையை பசும் பால் விட்டு இடித்து கிட்டியில் ~~பிழிந்த~~ பிழிந்த சார் படி 2, பசும் பால் படி 2, பசும் வெண்ணெய் பலம் 5, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் ஒன்று மூன்றையும் வருத்து இடித்து தூளை எடுத்துக் கொண்டு விழுதி செடியின் வேர் இடித்த சூரணம் 5 பலம் கூட்டி நல்ல எண்ணெய் படி 2 விட்டுக் காய்ச்சி காய்ச்சும் போது 4 எலுமிச்சம் பழம் அறுத்து பிழிந்து விட்டு வடித்து பச்சக் கற்பூரம் $1\frac{1}{2}$ விராகனிடை தூள் செய்து போட்டு வைத்துக் கொள்ளவும். 3 பைசா எடை வீதம் சாப்பிட்டு வரலாம். 12 நாள் 24 நாள் சாப்பிட கண்ட மாலை, பிளவை, விப்புருதி, கடகரை, குடவாலை, எலும்புருக்கி, புரை புண் இவைகள் தீரும். மேற்கண்ட சூரணத்தில் 3 பைசா எடை மத்தித்து கொடுக்கலாம். தனியாகவும் கொடுக்கலாம். பத்தியம் இல்லை.

நாத குரு தயிலம்.

நெல்லிக்காய் கெந்தகம் பலம் 5 வெடியுப்பு, (சங்கர்ச்சல்) பலம் 2, நவாச் சாரம் பலம் 2, தாளகம் விராகன் எடை 3 3/4, பரம் விராகனிடை 1 பசும் வெண்ணெய் பலம் 8 இவைகளை குழித்தயிலம் வைக்கவும்.

ஆயில் பட்டி செட்டியார் அனுபவ முறை.

மேகத்து எண்ணெய்.

முத்தின தேங்காய் 21-யை திருகி பால் பிழிந்து மேற்கண்ட பாலில் கொஞ்சம் விட்டு கடைச் சர்க்கரை அரைத்து மீதி உள்ள பாலில் கலக்கி பதமாக காய்ச்சி வடித்துக் கொண்டு அடியில் உள்ள கக்கத்தை மறுபடியும் அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து வரும் எண்ணெயை வடித்துக் கொண்டு வயதுக்கு தக்க படியும், நோய் திடமறிந்தும் $\frac{1}{2}$ பைசா

½ பைசா 1 பைசா எடை வரையில் கொடுக்கவும். குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். சொறி, சிரங்கு, கட்டுக் கரப்பான், விப்புருதி மேக ஊரல் மேகத் தடிப்பு கிரந்தை அரையாப்பு இவைகளுக்கு கொடுக்கலாம். வியாதிக்கு தக்க பத்தியம் வைக்கவும். கடைச் சரக்குகள் சுத்தி செய்து வாளம் பலம் 1, சீரகம் பலம் 1, பூ நீக்கிய லவுங்கம் தோலா 1, லவுங்கப்பட்டை தோலா 1, மராட்டி மொக்கு தோலா ¼, பெருங்காயம் தோலா ½, பூண்டு பலம் ½, வீரம் விராகனிடை 2 பூரம் விராகனிடை 2, லிங்கம் விராகனிடை 2, இரசம் விராகன் 2 இவைகளை எல்லாம் மேலே சொன்ன பாகப்படி செய்து கொள்ளவும். பாஷாண வகைகளை சுத்தி செய்ய வேண்டியதில்லை. வாளத்தை உடைத்து பருப்பை சாணிப் பாலில் வேகவைத்து சுத்திப்படுத்துவது நல்லது.

மைசூர் கிருக்கு சாமி வைத்தி சொன்ன முறை.

9 வித மேகத்துக்கு எண்ணெய்.

சித்தா மணக்கு எண்ணெய் படி ½, வாலுளுவை அரிசி பலம் 1, கெருடங் கிழங்கு 10 பலம், வெங்காயம் 20 பலம், வெள்ளருகு 3 பலம், இளநீர் படி ½, பசும் பால் படி ½, உரிக்கட்டி வேர் 1 பிடி, முதிர்ந்த வேப்பம் பட்டை பலம் 5, கோர்லாங் கட்டி பலம் 3 (கிட்டம்) எண்ணெ, இளநீர், பால் இவைகளை நீக்கி மற்ற சரக்குகளை இடித்து கஷாயம் வைத்து மேற்கண்ட மூன்றும் கலந்து பதமாக காய்ச்சி வடிக்கவும். ½ தோலா முதல் 1 தோலா வரைக் கொடுக்கலாம். நோக்கு தக்கப்படி பத்தியம் வைக்கவும். கை கண்ட முறை. சுபம். சுபம்.

முத்தின அகத்திக் கட்டை திரவாகம்.

வைரம், வைடூரியம், பச்சை இவைகள்.

சுத்தி செய்யும் முறை:- முத்தின பச்சை அகத்திக் குச்சிகளை விரல் கனம் உள்ளதாக் பொறுக்கி 4 விரல் நீளம் துண்டு துண்டுகளாக நறுக்கி துவாரம் போட்ட பானையில் குறுக்கே வைக்காமல் நேராக சொருகி அடிக்கி குழித்தைலம் வாங்கி 3-படிக்கு குறையாமல் சேகரித்து ஜாடியில் வார்த்து சீல் செய்து பூமியில் புதைத்து விடவும். மேற்கண்ட தயிலம் பிடிக்கு அளவிற்கு இரும்பு, தகரம் இல்லாமல் மரத்திலே கலம் செய்து தயாராக வைத்து இருக்க வேண்டும். கார் மழை பெய்யும் காலத்தில் கவனமாக இருந்து கல்மாரி விழும் சமயம் ஜாடியில் உள்ள தைலத்தை மரக்கலத்தில் விட்டு கல்மாரி விழும் போது வெளியில் மரக்கலத்தை தைலத்துடன் நீட்டி எடுக்கவும். அதிகமான மழை தண்ணீர் விழக்கூடாது. மரக்கலத்தில் விழுந்த கல் மாரித் துண்டுகள் கரையாமல் இருக்கும். கீழே விழுந்த கல் மாரி கட்டிகளை கையில் பொறுக்கிப் போடக் கூடாது. மேல் சொன்னபடி பிடித்த கல் மாரித் துண்டுகளுடன் தயிலத்தையும் மண் சட்டியில் விட்டு காய்ச்சி எடுத்தால் நல்ல வைரம் வைடூரியம், பச்சை முதலான கற்கள் பலவித வர்ணங்களுடன் கிடைக்கும். அதைச் சாணையில் கொடுத்து தேவை படுத்திக் கொள்ளலாம். மரக் கலத்தை தாங்கி நிற்கும் பொழுது கடவுள் தியானத்துடன் பரிசுத்தமான மனத்துடன் பிடித்தால் ஆண்டவன் அருளால் அதிகமாக கிடைக்கும். பொய் என்று ஏமாற வேண்டாம். பாடுபட்டால் பலன் உண்டு. என் தகப்பனார் எனக்கு நேரில் காட்டியது. எனக்கும் இதில் சித்தி உண்டு. இதன் வருமானத்தை தாசி, கொலை, புலால் மதுபானங்களுக்கும் உதவக்கூடாது. பாடுபட்டவரை கூலி உண்டு. சத்தியம் குருதாணை செய்வார்.

சந்தனாதிச் சூரணம்.

பன்னீர் விட்டு உலர்த்தின சந்தனம் பலம், கோஷ்டம் நன்னாரி வேர், வால் மிளகு, சீந்திச் சர்க்கரை, மஞ்சள், இலுப்பைப்பூ, அதிமதுரம், சிச்சிலிக் கிழங்கு, ஏலரிசி, தாமரை வளையம், நெய்தற்கிழங்கு, மரமஞ்சள், விலாமிச்சம் வேர். நெல்லி, முள்ளி இவற்றைத் தனித்தனியாக இடித்து சூரணம் செய்து வகை ஒன்றுக்கு பலம் ¼ திராட்சை பழம், கசகசா இவை வகைக்குப் பலம் ¼, இவை இரண்டையும் தனித்தனியாக கொஞ்சம்

ஜலம் விட்டு அரைத்துக் கொள்ளவும். பச்சைக் கற்பூரம் விராகனிடை 1½, இதனைப் பொடித்துக் கொள்ளவும்.

செய்முறை:- இவையெல்லாவற்றையும் ஒன்றாக கலந்து ஒரு மணி நேரம் கல்வத்தில் அரைத்து எல்லாம் உரவான பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்துக. பிரமாணம் விராகனிடை 1½ அல்லது 2.

உபயோகம்:- எந்தவிதமான பிரமேகம், சீழ்மேகம், இரத்த மேகம், தந்தி மேகம், முதலிய இருபத்தொரு மேகங்களும், இரத்தக் காசம், இரத்த வாந்தி, இரத்த கக்கல், பித்த ரோகங்கள், பித்த வாந்தி, நீர் எரிச்சல், நீர் கடுப்பு, நீர்பை அலலை நீர் தாரை, எரிச்சல், 48 மணி நேரத்தில் தீரும். வியாதிக்கு தக்கப்படி பத்தியம் வைக்கவும்.

அநுபானம்:- நெய், வெண்ணெய், தேன், பசுவின் பால், இளநீர், வெள்ளரிப் பிஞ்சின் சார், வெள்ளரி விதை, இடித்து பிழிந்த பால், பசுவின் மோர் இதுகளாம்.

பூ நாக பற்பம்.

பூ நாகத்தை மோரில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்தால் மண்ணையெல்லாம் கக்கி விடும். அப்படி சுத்தி செய்த பூ நாகத்தை வேண்டிய அளவு எடுத்து காயவைத்து ஒரு கலயத்தில் போட்டு கவசம் செய்து சீலை மண் செய்து 50 விரட்டியில் புடம் போட பற்பமாகும். மேற்கண்ட பற்பத்தை வெண்ணை, தேன் இவைகளில் 2, 3 அரிசி எடை காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வர சீலை, இருமல், முதலிய ரோகம் தீரும். விந்து கட்டும். போகம் கூடாது. சுபம்.

யானைப்பல் பற்பம்.

யானைப் பல் பலம் 4 கொண்டு வந்து அகத்திக் கீரையில் சுத்தி செய்து நல்ல காட்டாமணக்கின் தலையை அரைத்து கவசம் செய்து 1 முழம் புடம் போட பற்பம் ஆகும். அள்ள வாதத்திற்கு வெண்ணெயில் கொடுக்கவும்.

ஆறாத புண் புரைகளுக்கு களிம்பு.

ரத்தம், பச்சை வெட்டு, துருசு, ரசகற்பூரம், இல செந்தூரம், துத்தம் பலம் 1 பச்சை வெட்டு பலம் 1, துருசு பலம் 1 இலைசந்தூர அயசெந்தூரம் பலம் 2, ரச கற்பூரம் ¼ ரூபாயிடை இவைகளை நல்லெண்ணெயில் தூள் செய்து எண்ணை காய்ந்த பதத்தில் போட்டுக் காய்ச்சி சாணியை குலைத்து பாத்திரத்தை அதன் மேல் வைத்து எண்ணெயை ஊற்றி மறுநாள் வழித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

குழம்பு வகைப் படலம்.

உயிர் விட்டான் குழம்பு.

லிங்கம், பூரம், வீரம், ரசம், வெண்நாவி, கருநாவி, எலிப்பாஷாணம், குதிரைப் பாஷாணம், கஸ்தூரி, வெள்ளைப் பாஷாணம், குடம், கோரோஜனை, கஸ்தூரி, நேர்வாளம், இந்த பதிமூன்று சரக்குகளும் வகைக்கு விராகனிடை ஒன்று சுத்தி செய்ய வேண்டிய சரக்குகளெல்லாம் சுத்தி செய்து கொண்டு பதிமூன்று விராகனிடையும் சேர்த்து எல்லாம் ஒன்றாக கல்வத்தில் போட்டு பசுவின் நெய் படி அரைக்கால் விட்டு நான்கு ஜாமம் அரைத்து எடுத்துக் கொள்ளவும். இந்த குழம்பை கொம்பு சிமிழில் வைத்துக் கொள்ளவும். வியாதிகளுக்குத் தக்கபடி பிரமாணம் அறிந்துக் கொடுக்கவும். குளித்து விட்டு மருந்து சாப்பிடவும். பசுவின் மோர், நெய் சேர்த்து சாப்பிடவும்.

சண்ட மாருதக் குழம்பு.

ரசம், ஜாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, ரசகற்பூரம், கருநாபி, வெங்காரம், கெவுரி, வகைக்கு விராகனிடை இரண்டு சிறுகரந்தைச் சார், பழச் சார் இது களில் சுருக்குக் கொடுத்து சுத்தி செய்து எடுத்து கல்வத்தில் இட்டு சுத்தி செய்த நேர்

நேர் வாளம் பதினாறு விராகனிடை போட்டு மிளகு, குரோசானி, ஓமம், கண்ட திப்பிலி, அரத்தை, கடுக்காய், தானிக்காய், கிராம்பு, சிறு கடுகு, சுக்கு, கடுகுரோகணி, பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, திப்பிலி மூலம், சிறு நாகப்பூ, இந்துப்பூ, கோஷ்டம், ஜாதிக்காய் வகைக்கு விராகனிடை நான்கு சேர்த்து மேலே சொன்ன மருந்து எல்லாம் ஒன்றாக கலந்து திருகுகள்ளிப் பால் ஒரு ஜாமம் அரைத்து சிவதை வேர் கொடுவேலி வேர், கஷாயம் செய்து இதை விட்டு பனிரண்டு ஜாமம் அரைத்து வழித்து அய் சிமிழில் வைத்துக் கொள்ளவும். ரத்திற்கு அரத்தை சுக்கு கஷாயம் இதுகளில் கொடுக்கவும். பதிமூன்று ஜன்னிக்கும், அரத்தை சுக்கு, கிராம்பு திப்பிலி இஞ்சி, மாதுலிங்கம் பட்டை, காட்டாமணக்கு, வெள்நொச்சி, முதலியவைகளுடைய வேரைக் கொண்டு வந்து கஷாயம் போட்டுக் கொடுக்கவும்.

வில்வாதி குழம்பு:

வில்வ வேர் பலம் 10 மேற்கண்ட ப்ழம் பலம் 10 இடித்து ஒரு பாண்டத்தில் இட்டு 16 படி தண்ணீர் விட்டு அடுப்பேற்றி 3 படியாக கண்ட வைத்து, நாட்டுச் சர்க்கரை பலம் 10 போட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கி அதில் திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், மிளகு இஞ்சி, சித்தரத்தை, சீரகம், ஏலம் கிராம்பு, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம், கூகைநீர், அழகான வாலுளுவை, மாச்சக்காய், அதிவிடையம், வெப்பாலை, இந்துப்பு, வகைக்கு பலம் 2 இடித்துப் போட்டு மூங்கைப்பூ, மிளகு, ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், வகைக்கு 2 விராகன் போட்டு இறக்கி வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு புன்னைக்காய் அளவு வீதம் 6 நாள் கொள்ள தீரும். தீரும் வியாதிகள் ஈளை, இருமல், பிடரிவலி, சத்தி விக்கல், நெஞ்செரிவு, ஆரோகியம், காமாலை, வயிற்று வலி, பிடரி குடைச்சல், கிராணி மூலம் இவைகள் தீரும்.

பனைங்கோவைத் திரி.

சதகுப்பை, ஓமம், கடை மஞ்சள், சாம்பிராணி, மிளகு, பெருங்காயம், இவைகளை அரைத்து பனைங்கோவை பழச் சாதம் கூட்டி அரைத்து துணியில் தடவி திருத்துக் கொண்டு விளக்கை கொளுத்தி புகை பிடிக்கவும். மண்டை இடி, தலை பாரம், ஜன்னி, தலைவலி, மயக்கம், பீனிசம் இவைகள் தீரும். பனங் கோவை என்பது கொரட்டப் பழம் என்றும் சொல்வரார்கள்.

லிங்க செந்தூரம்.

நீர் மேல் நெருப்புச் சார் 1 படி லிங்கம் பலம் 1 கட்டி சுருக்குக் கொடுத்து 200 ஊர்ட்டியில் மேற்கண்ட சார் விட்டு அரைத்து வில்லை செய்து அகலில் வைத்து புடம் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். தேனில் கொடுக்க சீத ஜன்னிக்கும், சகல ஜன்னிக்கும் கொடுக்கலாம்.

என்னெய் வகைப் படலம்.

மேக வெட்டைக்கு என்னெய்.

பழம் பாசி இலையை கொண்டு வந்து நன்றாக இடித்து ஜலம் விட்டு பிசைந்து சார் வடி கட்டிக் கொண்டு சீரகம், ஈருள்ளி, வகைக்கு பலம் 1/4, அதை அரைத்து கலக்கி மேற்படி சாருக்கு பேர்பாதி நல்லெண்ணையைக் கூட்டி கால் பலம் சீனி சர்க்கரை கூட்டி மூன்று நாளைக்கு காலையில் சாப்பிட்டால் வெகு நாள் பட்ட வெள்ளை, வெட்டை, பிரமேகம் இதுகள் தீரும். பத்தியம் மோரும் சாதமும் சாப்பிடவும்.

வெட்டை சூட்டுக்கு என்னெய்.

தேங்காய் பால் படி 1, ஆத்துப் பசளி சார் பொடி தலை, வெள்ளை எருக்கிலை, கருசலாங் கண்ணி, வாகைச் சார் வகைக்கு சார் படி ½ வெள்ளாட்டுப் பால் படி ½, வெள்ளாட்டு சிறுநீர் படி ½, விளக்கெண்ணெய் படி 1 எல்லாம் காய்ச்சி வால் மிளகு ஏலம், கிராம்பு, வகைக்கு பலம் 1, தூள் செய்து போட்டு மேற்கண்ட சார்களுடன் கலந்து எரித்து எடுத்து வடிகட்டி வைத்துக் கொண்டு அந்தி சந்தி இரண்டு வேளையும் ஒரு கரண்டி வீதம் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

கணை என்னெய் பிள்ளைகளுக்கு.

விளக்கெண்ணெய் படி 1, கத்தாழைச் சார் படி 1/4 வெள்ளை இண்டங் கொழுந்து சார் படி 1/4 பசுவின் பால் படி ½, இதை எல்லாம் கலந்து அடுப்பில் வைத்து ஒரு சாதி விறகால் எரித்து மெழுகு பதமாய் இறக்கி இதற்கு கோஷ்டம், செண்பகப்பூ, ஏலம், சன்ன லவுங்கம், வகைக்கு பலம் ¼, வெந்தயம், பலம் 1 இவைகளை வறுத்து தூள் செய்து என்னையுடன் எரிக்கவும். உச்சிக் கரண்டி வீதம். புளி தள்ளவும். சகல கணையும் தீரும்.

பிள்ளைகள் சுரத்துக்கு என்னெய்.

கோவை, ஜாதிப்பத்திரி, நற்சீரகம், ஈரவெங்காயம் இவைகளை எல்லாம் பொடி பட அரித்து சட்டியில் இட்டு வருத்து விளக்கெண்ணெயில் இட்டு வதக்கிறல் கெட்டியாய் விடும். வெங்காயம் வெளுக்கும் சமயத்தில் இறக்கி கால் படி, விளக்கெண்ணெய் கூட்டிக் கொள்ளவும். பிறகு மேற்கண்ட சரக்குகளை அரைத்து வடித்த என்னெயில் கலக்கி வைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு தகுந்தபடி கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுக்கவும். சுரம் 18-ம் தீரும்.

சர்வ மேக ராஜாங்கத் என்னெய்,

அரைகிறேன் சர்வாங்க மேகந் தீரயே மென்ற சித்தா மணக்கெண்ணெய் படி நாலு, இதமான ஈருள்ளி சார் படி இரண்டு, தேமென்ற கமுதை நீத்தி சார் படி இரண்டு திறமான பேய் குமட்டி சார் படி இரண்டு காமென்ற கருசலாங் கண்ணீர் சார் படி இரண்டு, கனமான ஆவாரை சார் படி இரண்டு, கோமென்ற பொடி தலை, கையாந்த கரை சார் படி 2 வல்லாரையொடு கரும்பிரம்மி பொற்றலை யொடு அவுரிச் சாறே. சேரேனி செருப்படிச் சார் இரண்டு வகையும் கூட்டு சடச்சியொடு இம்பூரான் காட்டுச் செம்பை கூரான கழக் கொடி கோளியாவாரை குளிமிட்டான், காட்டுள்ளி, முருங்கையிலை, சார், கோவை, வாரான விழுதலை, வெள்ளருகு வகைக்கு சார் படி 2 என்னெயிலே சார் சேர்த்து எட்டு வகை மருந்து கேள். மாறு கருங் இருந்து வன்னி காத்துமே கருங் குறை செங்கத்தாரி, கத்தாழை, புரவசு, கரு இரண்டு கூத்துமே விளம்புகிறேன் இன்னங் கேளு. கால் கொள்ளை, குருந் தொட்டி நன்னாரி, குமிழாம் பட்டை, நீர்பலா சாத்துமே வரப் பவா பூவரசு, சங்கு, தனி தலை, கண்டங் கத்திரி, தூதுவளை, நொச்சி சிறுதா முட்டி, பேராமுட்டி, நேர்க்கரிய ஏரஞ்சி, கரந்தை புங்கு மச்சியே பூத கரப்பான் பட்டை, வேம்பாடம் பட்டை, மாதோனித்தாக வள்ளி, மகிலம் பட்டை, இஞ்சியொடு முள்ளிழவு, சங்கங்குப்பி எருக்கன், முடக்காரை., சின்னி, புன்னை, கச்சியே காமுள்ளி,

செம்முள்ளி, துத்திகாஞ்சொறி, முன்னை, சிறுநாகச் வேர், வேறான சிறுகுட்டை, மூலை தாங்கி, சிவதை வேர், வெள்ளை காக்கரட்டான் வேர், கிழா நெல்லி, சிவன் பூடு அழுக்கிறுன், புனல் முருங்கைதை வேலை, மேன் சத்திச் சாரணை நிலக்குமிழி நிலாவரை இம்பரல், நெருஞ்சி, சாரணை நிலக்குமிழி, சாரணை, வெள்ளைச் சாரணை, முக்கரட்டை, முல்நெருஞ்சி வட்ட சாரணை, பால் குரண்டி முக்கா. வேளை வட்டத்த்தி இலுப்பை; குப்பி, நிலவேம்பு, துடரி, சுடுசுரட்டி, ஒட்டகலத்தி, நீர் கடம்பு, தாழை, மருட்கிழங்கு, வெள்ளை, இன்டு முக்காவேலை, கிரந்தி நாயகம் சிறுகலா பொன்முசுட்டை, சிறுகாஞ் சொறி நிலப்பனை வில்வ வேர், மிளகரணை, விடத்தலான், உசிலம் பட்டை, கொடிவேலி, சீந்தி, நிலவாகை, கோவத்தண்டு, பாவட்டான், நாரத்தை, இருப்பை, கிழுவை, மாஞ்செவி முத்தரிக்கன் செவியாம், மந்தர்ரை, மைக்கொன்னை, காசா ஆ*ி ஆத்தி கொழுந்த ஆத்தி அரசு, அனவி, கருமத்தை வேம்பு பெரு மருந்து ஆதாலை, அரசு, வேல், குவழை, சன்னசி, முருங்கை மாதளையும், சோம்பாதே வகை வகைக்கு பலம் 10 புல்வருவி, அரசு, இளந்தை, மாவிளங்கம், வில்வம், விடத்தலே, மாதளை, முன் சொன்ன மருந்தில் சேர்க்கவும். கேளீர் நீ இடித்ததனை பாண்டத்தில் விட்டு எட்டு நாழி ஜலம் விட்டு, எட்டொன்றாய் காய்ச்சி இருத்த கஷாயத்தை என்னெயில் வாரு, வெள்ளாட்டு நீர் படிதான் 2 வாரு ஆவின் நீர் படி 2, அதிலே வாரு வார்த்துமே கலக்கியதை இவயிலில் வைத்து. போடும் மருந்து வகை கேளு. ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், அதிமதுரம், கோஷ் டம், திப்பிலி, திப்பிலி மூலம், வெங்காரம், மல்லி, வால்மிளகு, குரோசானி, ஓம் பெருங் காயம், கடுக்காய், தானிக்காய், கருஞ்சீரகம், கார்போகம், கஸ்தூரி மஞ்சள், அரத்தை, சுக்கு, அக்காருகாரம், அதிவிடையம், கடுகுரோகணி, கடுகு, இந்துப்பு, சடாமாஞ்சி, தாளிசப்பத்திரி, கசகசா ஓமம், கஞ்சா வளம்புரிக்காய், பரங்கிப்பட்டை, செங்கத்தரி, கஸ்தூரிப் பட்டை, வாலுளுவை, சிறுநாகப்பூ, கஸ்தூரிப்பட்டை, தக்கோலம், சிறுதேக்கு, தகரவித்து, கல்நாரு வசம்பு அபினி வெட்டிவேர், யானைத் திப்பிலி, கொத்த மல்லி, குங்குமப்பூ, சீரகம், கச்சோளம், நவாச்சாரம், சத்திச் சாரம், யவாச்சாரம், சாஸ்திரபேதி, வகை வகைக்கு ஒருபலந்தான், தூக்கு, கெருடன் கிழங்கு, செங்கழநீர், கிழங்கு, கார்த்திகை கிழங்கு, அபயைஅகோவக் கிழங்கு, காட்டுக் கருணை, நல் கருணை, மாதேவி கிழங்கு, முருங்கைப்பூ, எருக்கன், புங்கன் பூ, செந்தரிக் கன் பூ, செண்பகப்பூ, சித்தகத்திப் பூ, ஆவாரம் பூ தேத்தான் கொட்டை, இந்த மருந் தெல்லாம் சேர்த்து புங்கம் பால் விட்டு ஆட்டி என்னெயிலே போட்டே போட்டு நீ அடுப் பேற்றி எரி நெருப்பாக புகழான கணபதிக்கு பூசை பண்ணி நாட்டுமே மெழுகு பதம் தன்னைப் பார்த்து நல்ல பதமறிந்து வடிக்கக் கேளு. ஆட்டுமே கஸ்தூரி விராகன், இரண்டு பச்சைக் கற்பூரம் விராகன் இரண்டு சுத்தி செய்த லிங்கம் விராகன் 4, ரசகற்பூரம் விராகன் 4 இவைகளை எல்லாம் அரைத்துப் போட்டு எரித்து வடிக்கட்டி வைத்துக் கொள்ளே. தயிலம் தன்னை பதனம் பண்ணு, வடித்த கசுகுளை பதனம் பண்ணு. கசட்டில் பச்சை என்னெய் கொண்டு விட்டு அரைத்து மேல் பூச சிரங்கு, குஷ்டம், மேல் ரோகம், எல்லாம் தீரும். அரப்பு தேய்த்து குளிக்கவும். வடித்த என்னெய் நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் அந்தி, சந்தி இரு வேளையும் மூன்று நாள் வேளை சாப்பிடவும். கடுமையான பத்தியம். ஏலம் தலைக்கி என்னை வார்த்து எட்டாம் நாள் உப்பு வருத்துக் கூட்டு. இதலை தீரு நோய் எல்லாம் தீரும். இதனல் தீரும் வியாதி விஷப் பாண்டு, பெரும் பாடு, பிளவை, கண்ட மாலை, காமாலை, பாண்டு, சோகை, கெர்ப்பத்தில் எழும் நோவு, உதிரத்திரச்சிகை, மலக்கட்டு, கிருமி, வாய்வு, மூலவகை ஒன்பதும் பவுத்திரம், விப்புருதி, துடவாளை, புளவைபுத்து, கரப்பான், மண்ட குலை, விரைவாதம், மேகம் 21-ம் தீரும். போகுமே என்னெயுடன் பேரு சொன்னல் பொல்லாத நோய்கள் எல்லாம் பறந்து போகும். பத்தியம் வென்னீர் சாதம், ஏழாம் நாள், தண்ணீர் வார்க்கவும். எட்டாம் நாள் உப்பு கூட்டி ஒன்ப தாம் நாள் முக்கூட்டு என்னை தேய்த்துக் கொண்டு மறுநாள் தான் எல்லாம் சேர்க்கலாம். இதுபோன்ற மறை ஒருவரும் சொல்லவில்லை. வகையாக இம்முறையை செய்து கொண்டால் மகா வைத்தியன் என்ற பெயர் ஓங்குமே.

மாந்தம். சன்னி, பதிமூன்றுக்கும் ஐந்தெண்ணெய் முறை.

~~[illegible]~~ வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், நெய், விளக்கெண்ணெய் வகைக்கு படி ½ வேப்பம் புரப்பு கடுகு, பெருங்காயம், பூண்டு, கருசாளி, ஓமம், வசம்பு, இவைகளை வெந்நீர் விட்டரைத்து ஏழு தட்டை கொடிக் கள்ளிப் பால் தடவியு துணியில் தடவி பந்தமாக செய்யும் போது, பந்தத்திற்கு வேப்பங் குச்சியாவது அல்லது காய்ந்த எருக்கங் குச்சியில்லாவது பந்தத்தை சுற்றி எண்ணையை எல்லாம் ஒரு சட்டியில் விட்டு பந்தத்தை நனைத்துசுடர்த் தயிலமாக இறக்கவும். சகல சன்னியும், தீரும். அனுபவம் உள்ள முறை.

வாஸாரிஷ்டம்.

ஆடாதோடை பலம் 200 எடுத்து எட்டு படி ஜலத்தில் போட்டு 2 படியாய் கண்ட வைத்து ஆறிய பின் பிசைந்து வடி கட்டி வெல்லம் பலம் 100 சேர்த்து கரைத்து அத்துடன் காட்டாத்திப் பூ பலம் எட்டு, சதுர்சாதம், திரிகடுகு, தக்கோலம், வெட்டிவேர், வகைக்கு 1 பலம் பொடித்துப் போட்டு சீலை மண் செய்து 1 பக்ஷம் வைத்து இருந்து வடிகட்டி உபயோகிக்க ரத்த பித்த காசம், சுவாச காசம், வீக்கம் பாண்டு தீரும்.

அவர்த்தக்கிய ஆஸவம்.

இடுப்பு முதலிய இடங்களில் படரும் மேகங்களை போக்கும் ஓர் நல்ல மருந்து.

குரத்தாவாரை பலம் 8, பெருஞ்சீரகம் பலம் , ஏலம் பலம் ½, குமர்தகி பலம் ½, ரேவல்சீனி பலம் ½ இவைகளை பொடித்து ஒரு துரோண ஜலத்தில் விட்டு வேண்டிய அளவு சர்க்கரை தேன், கலந்து மூடி சீலை மண் செய்து போதமான நாள் வைத்திருக்க ஆஸவமாகும். இதனை 2 பலம் வீதம் இரவில் உட்கொண்டு வர இடுப்பு முதலிய இடங்களில் படரும் மேகப் படைகளைக் கண்டிக்கும். மலச்சிக்கல்களைப் போக்கும் மருந்தாகும். சுகபேதி மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

லவங்காஸவம்.

லவுங்கம், திப்பிலி, அரப்பொடி மிளகு, ஏலம், *ஏலவாலுவை, வகைக்கு பலம் 2 பொடி செய்து 16 படி ஜலம் விட்டு காய்ச்சி 4 படியாக வடிகட்டிக் கொண்டு வெல்லம் பலம் 20 சேர்த்து பழகிய மட்பாண்டத்திலிட்டு மூடி சீலை மண் செய்து 15 நாள் கழித்து வடிகட்டி உபயோகிக்க க்ஷயரோகம், கிராணி, பீலிகம் குன்மம் உதர ரோகம், போகும். * இந்த திரி இல்லாவிட்டால் பூலாங்கிழங்கு கூட்டவும். மஹோதம், வெண் குஷ்டம், குஷ்டம், கிருமி, கிரந்தி, அற்புதம் சகல சுரம் சோகை, காமாலை பாண்டு, இருதய ரோகம் இவைகள் தீரும். நல்ல தாது புஷ்டி. ரத்த விருத்தி. நல்ல திரம். பசி, ருசி இவைகள் உண்டாகும்.

~~சண்டமாருத படலம்.~~

கெந்தகத் தயிலம்.

வெடியுப்பு, கெந்தகம், மனோசிலை, அரிதாரம், மேலே சொன்ன மூன்று சரக்கும் வகைக்கு பலம் ஒன்று நவாச்சாரம், வீரம் வகைக்கு பைசா எடை ஒன்று எல்லாம் கூட்டி கல்வத்தில் போட்டு இரண்டு ஜாமம் பசுவின் நெய் விட்டு அரைத்து ஒரு முழ சமுக்கத் துணியில் தடவி உலைவாக்காக திருத்து கலயத்துக்கு சிறு துவாரம் போட்டு மேற்கண்ட கலயத்துக்குள் வலயம் போல் சுருட்டி வைத்து மேல் வாயில் சில்லை மூடி பெரிய சீலை மண் பெரிய பானை ஒன்று கொண்டு வந்து கலயம் கொள்ளும்படி பொத்து பானையை துப்பு புற மூடி கலயத்தை அதனுள் வைத்து சாணியை தடவி (கலயத்தை சுற்றி) மேலே மணலை தூவி கலயத்தை சுற்றிலும் காட்டு விரட்டியை போட்டு மேல் பானையை அடுப்பில் வைத்து கலயத்தின் சிறு துவாரத்தின் நேரில் சில எருக்கலையும் வைத்து விரட்டியில் நெருப்பை போட்டவும். தைலம் இறங்கும். சீசாவில் அடைத்துக் கொள்ளவும்.

அநுபானம் :- சீனி சர்க்கரையில் ஒரு பைசா எடை கொடுக்கவும். பத்தியம் கிடையாது. தீரும் வியாதிகள் :- ~~[illegible]~~ (இரத்தம்), மேகம், வாதம், இளம் பிள்ளை வாதம், பச்ச வாதம், கீழ் வாதம், பார்ச வாய்வு, கிரந்தி, ஜுரல், வண்டுகடி முதலியன நீங்கும். நெய், தயிர் மாமிசம், அதிகமாக சாப்பிடவும். பன்னிரண்டு நாள் கொடுக்கவும். மண்டலம் சாப்பிட்டால் (புத்)திரம். காசம் இவைகளைக் கண்டிப்பாய் எடுக்கும். இது சாதாரணமான அநுபோக முறையானபடியால் யாதொரு கெடுதியும் செய்யாது. அடிக்கடி சாப்பிடவும். இந்த மருந்துக்கு யாதொரு மருந்தும் இணையாகாது. ~~அச்சமில்லை. அச்ச மென்பது இல்லையே. இச்சைக் கொண்டு சாப்பிடலாம்~~. எல்லா நோயும் போகுமே. ~~நிச்சயமாய் குரு சொன்ன நீதி வாக்கியம் இதுவன்றே~~.

ரச மோதிரம்.

முருந்தார் சிங்கி பலம் 3, ரசம் விராகனிடை 2, வாதமடக்கி இலையை அரைத்து முருதார் சிங்கிக் மூ[illegible] மேல் சீலை செய்து கெஜப்புடம் போட வங்கம். ஆகும், மோதிரம் செய்து ரசம், பூச ரசம் மோதிரம். மூல ரோகம் உள்ளவர்கள் இந்த கையில் அணிந்து கொண்டு கால் அளப்பிருள் மூலம் நீங்கும். மேற்கண்ட வங்கத்தை கின்னிகளாக செய்து ரசத்தை [illegible] பூசினும் மணிகளாக செய்து ரசத்தை பூசினும் ரசம் ஒட்டிக் கொள்ளும். ஆலை நெருப்பில் நிற்காது. இது ரசமணி அல்ல. ஏமாறுதீர்.

வாலை சஞ்சீவிக் குளிகை.

திரிகடுகு, லிங்கம், வெங்காரம், ஓமம், கிராம்பு இவைகளை எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்து உளுந்து பெருமன் மாத்திரை செய்து துளசி, நாய் துளசி வெற்றிலை, முலைப்பால், இஞ்சி சுருசம் இவ்வகளில் ஒன்று இரண்டு மாத்திரை இட சீரம், அதிக சீரம், ஜன்னி, ப்ராத சீரம் முதலியவைகளும் நீங்கும். குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

ஊன் சுடர் தயிலம்.

கோழி முட்டை, வெண்கருவால் ஓமம், வெள்ளப்பூண்டு இவைகளைப் போட்டு அரைத்து வெள்ளைத் துணியில் தடவி காயவைத்து ஊன் ஒன்று பிடித்து கால், வால் இவைகளை வெட்டி விட்டு மேற்கண்ட துணியை அதன் மேல் பந்தமாக சுற்றி வேப்பெண்ணெய் அரைப்படி விட்டு அந்த பந்தத்தை கம்பியில் சொருகிக் கொண்டு சுடர் தைலமாக இறக்கவும். இறக்கிய தைலத்தை ஆ[illegible] [illegible] பைசா எடை உள்ளுக்கு கொடுக்கவும். பத்தியம் உப்பு இல்லாமல் மூன்று நாள் ஆறு வேளை எண்ணெய் கொடுக்கவும். குணம் ஈளை, இருமல், இளைப்பு, ஜன்னி, ஏங்கல் இவைகள் தீரும்.

உள் மூலத்திற்கு புகை போட விவரம்.

பன்னி விட்டை கம்மண் உமியில் பன்னி எண்ணெய் விட்டு பிசைந்து புளியன் சிராய் நெருப்பில் எரித்து அந்த நெருப்பில் மேற்கண்ட சாமான்களைப் போட்டு உரல் குந்தாணியில் உட்கார வைத்து புகை பிடிக்கவும்.

சேங்கொட்டை வல்லாதி மேக குளிகை.

சாணிப் பாலில் சுத்தித்த சேங்கொட்டை பலந்தான் பத்து மொய்யவே மூக்கு வெட்டி இன்னங் கேளு. [illegible] கொடிவேலி, பரங்கிப் பட்டை, அமுக்கிரா, சிவனார் வேம்பு, மாவலிங்கன் பட்டை, உத்தமனே ஒரு பலந்தான். என்னவே சிறு கஸ்தூரி பட்டை, இரு திப்பிலியும், கடுக்காய் வாலுளுவை, கோஷ்டம், சொன்ன வகை எல்லாம் இடித்து சூரணமே செய்து வைத்துக் கொண்டு உண்ணியே முன் சொன்ன சேங்கொட்டை தன்னை உரலில் இட்டு கொப்பரைத் தேங்காய், இரண்டு யென்னவே எள்ளு ஒரு படி தான் போட்டு இடித்து மெல்லவே சூரணத்தை கொட்டி நன்றாய் இடிக்கும் போது குமரவே பனை வெல்லம் பலந்தான் ஐந்து போடு. திடமாய் த ரசகற்பூரம் ஐந்து பலம் சேர்த்து இடித்து வல்லாதியாக செய்து கொண்டு வாடவே வல்லாதி அந்தி சந்தி நாள் ஒன்றுக்கு வெருகடி தான் கொள்ள குஷ்டம், கிரந்தி, அரையாப்பு, காமாலை, சூலமொடு வயிற்று வலி, வாயு, குலையோடு, யாவும்

தீரும். மண்டலமே கொள்ள வேண்டும். காலையே பத்தியந்தான். உப்பை வருத்த கூட்டவும், இச்சா பத்தியம்.

ஆசன வாயில் கிருமிகள் அரிப்பதற்கு சிகிச்சை

வெள்ளாட்டு நல்லி எலும்பை ஆசன வாயில் இரவில் படுத்துக் கொள்ளும் பொழுது சொருகி வைக்கவும். இந்த மாதிரி இரண்டு நாள் மூன்று நாள் செய்தால் அந்த கிருமிகள் எல்லாம் அந்த எலும்புக்குள் வந்து சேர்ந்து விடும். இது முக்கியமான சிகிச்சை. வியாதிஸ்தருக்குத் தெரியாமல் ரகசியமாக செய்யவும் குணமாகும். மற்றென்பக்கு அந்த கிருமிகள் உபயோகப்படும். கண் ஒளி தெரியாதவர்களுக்கு மேலே சொன்ன பிரகாரம் செய்த எலும்புகளில் உள்ள பூச்சிகளை சேகரித்து அதை ****** பானலில் வறுத்து சாம்பல் செய்து அந்த சாம்பலை வெண்ணெயில் குழைத்து கண்ணில் தீட்டி வர கண் பிரகாசம் உண்டாகும். சுபம்.

விரேசன சூடாமணி.

காசு கட்டி பலம் 1, கட்டி கற்பூரம் பலம் ½, சுத்தி வாளம் பலம் ¼, இவைகளை எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்து உளுந்து பிரமாண மாத்திரை செய்து கொண்டு காப்பி, வென்னீர் இவைகளில் கொடுக்க சுரம், ஜன்னி இவைகள் தீரும்.

1. நாக செந்தூரம் (மாத்திரை).

சுத்தி செய்த நாகம், நாவி, பச்சைக்கற்பூரம், சமன் கூட்டி திரிபலாதி, கஷாயத்தில் நாலு ஜாமம் அரைத்து குன்றி போல் உருட்டி உலர்த்தி சீனி கலந்து நேரம் 1, 2 கொடுக்க கபம், காமாலை, காசம், சுவாசகாசம், பித்த சுரம், தலைவலி, சிரசில், பி புரமேறிய சலதோஷம் இவைகள் தீரும்.

2. வெடியுப்பு சுன்னம்.

சோடா உப்பு, வெடி உப்பு, சமன் சேர்த்து ஒரு கலயத்தில் போட்டு சீலை மண் செய்து காடைப்புடம் போடவும். இதை பணவிடை தேனில் அல்லது வெண்ணெயில் கொடுக்க வயிற்று வலி நீங்கும்.

3. சகல வாயுவுகளுக்கு.

சுக்கு, திப்பிலி, மிளகு, பூண்டு, ஓமம், வாயுவிளங்கம், அரிசி, இவைகளை ஒர் நிறையாய் எடுத்து வெதுப்பி இடித்து வடிகட்டி பனைவெல்லம் கூட்டி மெழுகு போல் அரைத்து கொ கொட்டைபாக்கு அளவு 6 நாள் இரு வேளையும் கொடுக்க சகல வாயுவும் தீரும்.

4. பித்தத்திற்கு.

சீரகம் இலந்தப் பழம், இவை இரண்டும் சமன் எடுத்து அரைத்து எடுத்த எடைக்கு அரைத்து எடுத்து கலக்கி சிறு தீயாய் அடுப்பின் வைத்து எரித்து எடுத்து பிசைந்து எடைக் கிடை குல்கந்து சேர்த்து பிசைந்து வேடு கட்டி வைத்துக் கொண்டு காலை, மாலை கலச்சக்காய் அளவு பிரமாணம் கொடுத்து வர பித்தம் யாவும் தீரும்.

5. திரிபுலைச் சூரணம் சகல வியாதிகளுக்கும்.

கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், அதிமதுரம், அயச் செந்தூரம், இவைகள் வகைக்கு ஒரு தோலா வீதம் எடுத்து தேன் விட்டு அரைத்து நெய் விட்டு பிசைந்து வைத்துக் கொண்டு சாதம் சாப்பிட்ட பிறகு அதன் பேரில் சுண்டைக்காய் அளவு சாப்பிட சகல வியாதியும் தீரும்.

6. வண்டு கடிக்கு மேல் பூசும் எண்ணெய்,

P.T.O.

6. வண்டு கடிக்கு மேல் பூசும் எண்ணெய்.

நிலாமணக்கு வேர் பட்டை, பேய்பீர்க்கன் வேர், இந்த இரண்டும் பொடி செய்து கொண்டு வேப்பெண்ணெய், புங்க எண்ணெய், எருக்கன் பால், எலுமிச்சங்காய் சார், மிளகு, ஓமம், பூண்டு, வசம்பு, சுக்கு, இவைகளை பொடி செய்து எண்ணெயில் கலந்து ஐந்து நாள் குழிப்புடம் வைத்து மேல் பூச மேல் படி ரோகம் தீரும்.

7. கிரானிக்கு லேகியம்.

ஒரு படி எருமைத் தயிரை துணியில் வடிகட்டி அந்த தயிரை எடுத்து வைத்துக் கொண்டு சிறு நாகத்தாள் சலித்து வடித்த தயிரில் கூட்டி அரைத்து மேற்படி வடி தயிரில் கொஞ்சம் நெய் விட்டு அரைத்து அந்த அடையாகதட்டி மறுபடியும் சட்டியில் உருக்கி மறுபடியும் வடி தயிர் கூட்டி அரைத்து முன் போல் அடை தட்டி முன் போல் எரித்து இது போல் மூன்று முறை எரித்து எடுக்கவும். எடுத்துக் கொண்ட நெய்யை வைத்துக் கொண்டு நீரில்லாமல் துத்தி இலையை வதக்கி அரைத்து எடுத்துக் கொள்ளவும். முதலில் செய்த நெய்யுடன் கலந்து கொண்டு காலை, மாலை இரண்டு வேளையும் கொடுத்து வர மூல வாய்வு மூலக் கிராணி இரைச்சல், சீத ரத்தம் இவைகள் தீரும். இத்துடன் நாக பஸ்பம் கூட்டியும் கொடுக்கலாம்.

8. தாளகம் பச்சை கற்பூர மெழுகு.

கட்டியான தாளகம் விராகனிடை 1 கட்டியான வீரம் விராகனிடை 1 பச்சை கற்பூரம் விராகனிடை 1 வெள்ளை மிளகு விராகனிடை 2, கஸ்தூரி குன்றி எடை 2, இவைகளை நன்றாய் அரைத்து போதுமான நல்லெண்ணெய் விட்டு மெழுகு போல் அரைத்து குன்றி எடை வெல்லத்தில் கொடுக்கவும். கபம், காசம், கோழை கட்டு இவைகள் தீரும்.

9. நச்சுராதி லேகியம்.

திப்பிலி, குரோசாணி ஓமம், திராகை உப்பு, மூங்கிலுப்பு, நெல் பொரி இவைகள் வகைக்கு சமன் கொண்டு சூரணித்து வேண்டிய நெய் தேன் சர்க்கரை கூட்டி லேகியம் போல் செய்து வைத்துக் கொண்டு சாப்பிடில் சகல பித்தமும் தீரும்.

10. சூதக கட்டு வலிக்கு.

சவுக்காரம், வெடியுப்பு, சமன் எடுத்து அரைத்து ஒரு கரண்டியில் வைத்து எரிக்க வேண்டும் சுண்ணம் ஆகும். இதை எடுத்து நாவில் ஒன்று சாரம் சேர்த்து அரைத்து பனியில் வைக்க செயநீர் ஆகும். இதைஇருத்து வைத்துக் கொண்டு 10 சொட்டு இளநீரில் கொடுக்க சூதிக வயிற்று வலி, சூதக வாயு, சூதக கட்டு இவைகள் தீரும்.

11. சூதக வாய்வுக்கு.

குமட்டிக் காய் உப்பு, பேய் குமட்டிக் காய், இரண்டு பங்கு, எருக்கன் பூ, இரண்டு பங்கு கருவு நீக்கிய பிரண்டை, ஒரு பங்கு கல்லுப்பு, பங்கு சேர்த்து இடித்து சட்டியில் இட்டு ஒடு மூடி, இரண்டு ஜாமம் எரித்து ஆற விட்டு எடுத்து தூளை செய்து திரிகடி அளவு சாப்பிட்டு வெந்நீர் சாப்பிடவும். இப்படி சாப்பிட சூதக கட்டு, சூதக கிரட்சி சூதகம் அதிகமாய் போகுதலும், நிறுத்தலாம்.

12. மூலக் கடுப்புக்கு.

கடுக்காய் சுட்ட சாம்பல் அதிவிடையம், சுட்ட சாம்பல், காசிக்கட்டி தேத்தாங் கொட்டை இவைகளை ஓர் நிறையாய் சேர்த்து அரைத்து துளி துளியாய் வெண்ணெயில் கொடுக்க மூலக் கடுப்பு நீங்கும்.

13. தலை வலி மண்டை இடிக்கு தைலம்.

தாரி இலைச் சார், தும்பை இலைச் சார், பேய்பீர்க்கன் இலைச் சார், நல்லெண்ணெய் இவைகள் வகைக்கு படி ½ இவை எல்லாம் கூட்டி காய்ச்சி வடித்து நசியம் செய்து தலை முழுகவும்.

14. மண்டை குடைசலுக்குத் தைலம்.

மஞ்சத்தக்காளி, பொன்னாங்காணி

14. மண்டை குடைச்சலுக்கு.

மணத்தக்காளி, பொன்னாங்கண்ணி, கரிசலாங் கண்ணி, கீழா நெல்லி, வில்வ இலை, தேள் கொடுக்கு இலை இவையெல்லாம் சமமாய் சேர்த்து இடித்து சார் பிழிந்து நல்லெண்ணெய் சேர்த்து ஒரு நாள் சூரியபுடம் வைத்து மறு நாள் காய்ச்சி வடித்து மூன்று நாளைக்கு ஒரு தரம் முழுக்கவும். மிளகு, ரசம் செய்து உடனே சாப்பிடவும். பகல் நித்திரை செய்ய வேண்டியது. 5 நாளைக்குள் மண்டை பிடி குடைச்சல் தீரும்.

15. உச்சந் தலை இடிக்கு பத்து..

மிளகு, காயம், கொட்டைப்பாக்கு அளவு இந்த இரண்டும் நெகிழ வெந்நீர் விட்டு அரைத்து இராத்திரிக்கு சாப்பிட்டு படுக்கும்போது உச்சந்த தலையில் ரூபாய் அகலம் அப்பி புடனி உள்ளங்கால், உள்ளங்கை இவைகளில் பத்து போடவும்.

16. தலைவலிக்கு காதில் பிழிய மருந்து.

வெங்காயம், விராகனிடை 2 இந்துப்பு விராகனிடை 1, முருங்கை விராகனிடை 2, இந்த மூன்றும் தட்டி துணியில் வைத்து விளக்கில் வெதுப்பி காதில் பிழியவும். உடனே தலை வலி தீரும்.

17. நாசி அடைப்புக்கு மருந்து (பீனிசம்)

வெள்ளை காக்கணம் வேர், இந்துப்பு, மிளகு, சீனிசர்க்கரை இவைகளை சேர்த்து நன்றாய் சிதைத்து துணியில் வைத்து முலைப் பாலில் நசியம் செய்யவும்.,

18. ஒரு தலைவலிக்கு நசியம்.

நவாச்சாரம், வெள்ளை காக்கட்டான் இவைகள் வகைக்கு குன்றியிடை 2 ஒன்றாக தூள் செய்து 3 விராகனிடை நெய்யில் கலந்து சீசாவில் வைத்துக் கொண்டு வெள்ளைத் துணியில் நனைத்து வேண்டிய போது நாசித் துவாரத்திலும் பிழியவும். நீர் வடிந்து நோய் தீரும்.

19. பதினெட்டு குஷ்டத்துக்கும் மருந்து.

லிங்க ரசம் பலம் 1, விடத்தலாம் வேர் பட்டை இடித்த தூள் பலம் 1, வடி கட்டின மேற்படி தூளை வடிகட்டி கல்வத்திலிட்டு நாக மல்லிகை சார் விட்டு சிறுக சிறுக விட்டு நாலரை ஜாமம் அரைத்து வழித்து உலர்த்தி நன்றாய் தூள் செய்து சீசாவில் வைக்கவும். நாலு குன்றி எடை காலை, மாலை தேனில் சாப்பிடவும். ஒரு மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம். பதினெட்டு குஷ்டமும் அஷ்ட குன்மமும் தீரும். முக்கியம் குஷ்டத்திற்கு மிகவும் நல்லது.

20. கெந்தக பற்பம் அல்லது கெந்தக செந்தூரம்.

கெந்தகம் விராகனிடை 10 பசுவின் பால் படி ½, மருதாணி இலையை அரைத்து உருண்டை செய்து குடைந்து கெந்தகத்தை பாலில் அரைத்து கலக்கி காய்ச்சி சுத்தி செய்து எடுத்து மேலே சொன்ன மருதாணி இலைக்குள் வைத்து முழ புடம் போடவும். போட வெள்ளையாய் இருக்கும். 10 முறை செய்ய செந்தூரமாகும். வெண்ணெயில் கொடுக்க மூலம், க்ஷயம், மேகம், அரிப்பு, படை இவைகளுக்கெல்லாம் கொடுக்கலாம்.

21. வெண்குஷ்டம் நீங்க மருந்து.

மருதாணி இலையை நிழலில் உலர்த்தி இடித்து வடி கட்டின தூளை கேசரி நீர் விட்டு 4 ஜாமம் அரைத்து சுண்டைக்காய் அளவு நிழலில் உலர்த்திக் கொண்டு மேற்படி விதையை நன்றாய் தூள் செய்து கொண்டு ½ படி தண்ணீரை அடுப்பில் காய்ச்சி பதினெட்டு தரம் மேற்படி உருண்டைய தூள் செய்து போட்டு மேற்படி காய்ச்சி வடி கட்டி அதில் பசுவின் பால் படி ½ விட்டு சீனி கூட்டி அதில் மேற்படி விதைத் தூள் கிஷுக்கை பே போட்டு, இவ்விதம் இரு வேளையும் சாப்பிடவும். இச்சா பத்தியம். காலை, மாலை

இரு வேளையும் மண்டலம் சாப்பிட மேற்படி ரோகம் தீரும்.

22. சிந்தாமணி மாத்திரை.

வெங்காய சாற்றில் சுருக்கு இட்டு கட்டின லிங்கம் விராகனிடை 1, சாதிக்காய் சூரணம், வசுதமை பிசின் பூமி, சர்க்கரை கிழங்கு சூரணம் சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு சூரணம். பொரித்த வெங்காரம் மேலே சொன்ன சூரணம் வகைக்கு விராகனிடை 2 தேன் செல்லத்தக்க அளவு சிறுக சிறுக விட்டு இரண்டு ஜாமம் அரைத்து இரண்டு குன்றி எடை காலை, மாலை இருவேளையும் அதன் மேல் பாலை காய்ச்சி கற்கண்டு இட்டு சாப்பிடவும். நரம்புகளை உற்சாகம் படுத்துவதிலும், தாது விருத்தியை அதிகப் படுத்துவதும் மிக சிறந்தது. 1 மண்டலம் 2 மண்டலம் சாப்பிடவும். நெய், பால், அதிகம் சேர்க்கவும்.

23. கடல் பாசி அல்வா.

கடல் பாசி 1 பங்கு எடைக்கு தண்ணீர் 1 படி, 1¼ பங்கு சீனி மேற்படி சரக்கை தண்ணீரில் போடவும். அலம்பி மேற்படி தண்ணீரை கொதிக்க வைத்து அதில் போட்டு கொதித்த கரைந்த பதத்தில் சீனியை போட்டு தலவ கட்டியாயின பின் இறக்கி துணியில் வடி கட்டவும். தட்டத்தில் விட்டு ஆரிய பின் எடுக்க அல்வா பதம்.. அந்த கடல் பாசியில் எல்லாம் நாள் 2, 3 நாள் கெடாது. அதை சாப்பிட விந்து நம், தேவாமிர்தம் போல் இருக்கும். மல ஜல கட்டு நீங்கும்.

24. அண்ட வாயுவு, மேகப் படை சூரணம்.

சுத்தி செய்த பரங்கிப் பட்டை பலம் 5, திரிகடுகு, தேவதாரம், சீரகம், ஓமம், மதுரம் சிராம்பு, கோஷ்டம் சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, சன்ன லவுங்கப்பட்டை, பெரு லவுங்கப்பட்டை, குரோசாணி ஓமம், சித்திர மூலப் பட்டை, சிறு தேக்கு, கொத்தமல்லி, சடாமாஞ்சி, கருஞ்சீரகம், சாரைப் பருப்பு, வால் மிளகு, ஏலம், திரிபலை, சங்கம் பட்டை, பிரப்பங் கிழங்கு, சித்தரத்தை, பேரத்தை, கோரைக் கிழங்கு, விலாமிச்சம் வேர், லவுங்கப்பத்திரி, அமுக்கரான் கிழங்கு, வாய் விளங்கம், தாமரைக் கொட்டை, செவ்வெள்ளிக் கொடி, நன்னாரி வேர், வகைக்கு பலம் ¼, இவையெல்லாம் இடித்து வடி கட்டிய சூரணத்திற்கு சமன் சீனி கலந்து விநாயகர் பூஜை செய்து கொடுக்க சகல வியாதியும் தீரும். இச்சா பத்தியம், மேக வாய்வு, மேகப்படை, மூல வாய்வு, பாரிச வாய்வு, பக்க வாய்வு, அண்ட வாய்வு, மேக ஊரல் அக்கினி மந்தம் இவைகள் தீரும்.

25. அடி வயிர் வீக்கம் நீர் கட்டுக்கு பத்து.

நீர் முள்ளி சாம்பல் அல்லது ரசம் சுறையிலை, எலிப் புழுக்கை, வௌவால் புழுக்கை, கடுகு, சாம்பிராணி, கரிய போளம், வகைக்கு சமன் எடுத்து இரண்டு இலைகளின் சார் விட்டு அரைத்து கொதிக்க வைத்து பத்துப் போடவும். மேற்படி பத்துக்கு சிறுக்கீரை, நிலமுள்ளி, சுறை இனி கரிசலாங் கன்னி இவைகளை வகைக்கு கொஞ்சம் எடுத்து சிறு நீர் விட்டு இடித்து பிழிந்து மேற்படி மருந்தை அரைத்து வெதுப்பி பத்துப் போடவும்.

26. கை கால் முடக்கு வீக்கம் இவைகளுக்கு பத்து.

மலங் கற்றாழை வாட்டிப் பிழிந்த சார் படி 1 வெள்ளெருக்கன் பூவை வதக்கிய சார் படி 1 இரண்டும் கலந்து காய்ச்சி பக்குவமாக காய்ச்சி அதற்கு தகுந்த பரங்கிப் பட்டை வகைக்கு பலம் 1½, அரைத்துப் போட்டு காய்ச்சி பத்துப் போடவும்.

27. சிவ வாக்கிய லிங்க செந்தூரம்.

பாகப்படி சுத்தி செய்த காடிக்காரம், காட்டாமணக்கு பாலில் சுத்தி செய்த வீரம் வகைக்கு விராகனிடை 1 பாகப்படி சுத்தி செய்த ரச செந்தூரம் விராகனிடை 2,. எலுமிச்சம் பழத்தில் சாற்றில் சுருக்கிட்ட லிங்கம் விராகனிடை 5 இவை யெல்லாம் சேர்த்து கல்வத்தில் போட்டு அரைத்து ஒரு ஜாமம் அரைத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். பிரமாணம் 1 அரிசியெடை தேன், நெய், வெண்ணெய், பஞ்ச தீபாக்னி லேகியம், சுக்கு, ஏலம், சீரகம், வெந்தியம், முதலியவைதான் உபயோகம். மேலே கண்ட அளவாக 1, 2, 3

தடவை சாப்பிட்டால் பசி, தீபனம் அதிகரித்து தாங்க கூடாத பசி உண்டாகும். அப்படி பசி கண்டவுடன் புளித்த மோர், ரசம், நீர்மோர் இளநீர் முதலியவற்றை ஒன்றை அருந்தவும். காலை, மாலை, இரு வேளையும் உபயோகித்து வந்தால் சுரம் அநேக சன்னி ரோகம், பித்த ரோகம், விஷ சன்னி, வெறி முதலின தீரும், குதக வலி, குதக ஜன்னி, வயிற்றில் உண்டாகும் கட்டி; குன்மம் முதலானவைகள் தீரும். மேக வாய்வு கை கால் முடக்கு, கீந் வாய்வு; மார்படைப்பு முதலியன தீரும்.

28. காடிக்காரப் பக்குவம்.

வெள்ளிக் காடிக்காரத்தை கல்வத்தில் இட்டு பொடித்து அது கொள்ளத் தக்க முலைப் பால் விட்டு அரைத்துவிட்டால் ஊறினவுடன், உலரவிட்டு விட வேண்டும். ஈரமில்லாமல் உலர விட்டு மறுபடியும் பொடித்து முன் போல் அது மிதக்கக் கொள்ள பால் விட்டு அரைத்து பால் ஊறின உடன் அப்படியே உலர விடவும். அப்படியே மடக்கி மடக்கி நாவு தடவைக்கு குறையாமல் செய்து கொள்வதே காடிக்காரப் பக்குவம்.

29. ரச செந்தூரப் பக்குவம்.

ரச செந்தூரத்தை கல்வத்தில் பொடித்து அது கொள்ளத்தக்க எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்து சார் சுண்ட கல்வத்துடனே வைத்து மறுபடியும் அரைத்து இந்த மாதிரி நாலைந்து தடவை அரைத்து சுத்தி செய்யவும்.

30. பருவு உடைய மருந்து.

துத்தி இலையை அரைத்து பருவு மேல் தடவி வந்தாலும் மேற்கண்ட இலையை காடி வார்த்து கிளரி வைத்து கட்டினாலும் உடையும்.

31. சொட்டு மூத்திரம் இடுப்பு நோய் இவைகளுக்கு.

சீமை துத்தி விதையின் தூள், சீமை துத்தி பூ, மிளகு, மேல் தோல் நீக்கின சுக்கு, லவுங்கப்பட்டை, பிஞ்சுக் கடுக்காய், நெல்லிக்காய், சித்திர மூலப் பட்டை, பிஞ்சுக் கடுக்காய், பெரு மரத்துப் பட்டை இவ்வகளின் சூரணம் வகைக்கு பலம் $1\frac{1}{4}$, சாமந்திப்பு சூரணம் அமரப்பருப்பு, தேங்காய், சாலம் மிசிரி வகைக்கு பலம் 1, திராக்ஷை பலம் $2\frac{1}{2}$ எல்லா சரக்கும் நன்றாக வருத்து சூரணிக்க வேண்டியவைகளெல்லாம் ஒன்றாய் கலந்து வருத்து சூரணித்து மற்றவையெல்லாம் அரைத்து சேர்த்துக் கொள்ளவும். தேங்காய்க்குள் இருக்கும் நீரை போக்கி வைத்துக் கொண்டு பாக்கி இருக்கின்றதை திங்கில்லாமல் எடுத்துக் கொள்ளவும். தேங்காயை அரைத்து பிசைந்து கொள்ளவும். விந்துஸ்தானங்கள், ஆசன வாய் கடுப்பு, வாயுவுக்கும், வாய்வை கண்டிக்கும் . சொட்டுமூத்திரம் இவைகள் நீங்கும்.

32. கண் நோய் மருந்து.

இந்துப்பு, கடுக்காய் விதைப் பருப்பு இந்த இரண்டும் சமன் எடுத்து தக்க வெண்ணை போட்டு வெண்ணை, மோல் அரைத்துளீரு ஒரு செம்பு பாத்திரத்தில் அப்பி வைத்தால், அது நன்றாய் கரும்பு போல் ஆகும். இதை எடுத்து கொம்பு சிமிழில் வைத்துக் கொண்டு அரை குன்றி எடை எடுத்து கண்ணில் விட்டு வந்தால் பூளை தல்லர், நீர் வடிதல், நீங்காத அந்தி மாலை கண் படலம் எல்லாம் தீரும்.

33. நாக்கில் ஜலம் ஊர கஷாயம்.

மயில் இறகு, மிளகு, நில வேம்பு, சீரகம், இவைகள் காடியில் இட்டு கல்வத்தில் போட்டு பட பட அதில் நீர் விட்டு காடியை இறக்கி அதில் நன்னாரி வேர் பேரிச்சங் காய் திராக்ஷை, சீரகம், கொத்தமல்லி, வகைக்கு கொஞ்சம் நறுக்கி போட்டு அந்த கலயத்தில் போட்டு உலர வைத்து அஜர ஆமாக்கு வீதம் இரண்டு மணிக்கு ஒரு தரம் கொடுக்கவும்.

34. அயக் காந்த செந்தூரம்.

அயப் பொடி பலம் 12, குழி அம்மியில் போட்டு நன்றாய் அரைத்து போட்டு நன்றாய் போட்டு தண்ணீர் விட்டுஅரைத்து கருமை வெண்மை ஆனவுடன் காய வைத்து விட சுத்தி செய்த

கந்தகம் விராகனிடை 4, முதல் தர சுண்ணம்பு தெளி நீர் விட்டு அரைத்தால் கருநிறமாகும். ஆனவுடன் சுத்தி செய்த வீரம் விராகனிடை 4 கெந்தகம் முன் போல் நீர் விட்டு அரைத்த மெழுகு போல் வரும். சிறு வில் லைகளாக செய்து காய வைத்து நாவியை அரைத்து இரண்டு துணிக்குத் தடவி வைத்துக் கொண்டு ஒரு படிகாவித் துணியை விரித்து அதில் வில் லையை வைத்து மேற்படி துணியை மூடி மேல் ஒடு மூடி சீலை மண் செய்து காய வைத்து 60 எருவில் நீரும் மேலும் இவ்விதமே வைத்து மா ஒரு புடம் போட உயர்ந்த செந்தூரம் ஆகும். இந்த செந்தூரத்தை நோய் கண்டால் காமாலை, சோகை, வாயுவு, கைகால் அசதி இடுப்பு பவி இவைகள் போகும். இரத்த விருத்தி உண்டாகும். புஷ்டியும் உண்டாகும்.

35. மண்டை குலைக்கு தயிலம்.

நெல்லிக்காய் சார், கருந் துளசிச் சார், பசுவின் பால் வகைக்கு ஆழாக்கு எல்லாம் ஒன்றாய் கலந்து அதிமதுரம் பலம் 1 அரைத்துப் போட்டு நல்லெண்ணெய் ஆழக்கு 4 விட்டு மெழுகு பதமாய் காய்ச்சி மண்டை குடைச்சல் கண்நோய், கண் எரிவு, கண் நீர் வடிதல் தீரும்.

36. உள்ளங்கால் ஊரலுக்கு.

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய். வேப்பெண்ணெய் 3-ம் ஒன்றாய் கலந்து 5 பலம் மிளகாயையும் போட்டு காய்ச்சி வடித்து இராத்திரியில் தேய்க்கவும்.

37. மேக வாயுவு குடைச்சலுக்கு கெந்தகத் தயிலம்.

லிங்கம், தாளகம், மனோசிலை, பூரம், கந்தகம் இதைக் கஷாயமிட்டு அரைத்து சீலையில் தடவி ஆவின் நெய் படி ½, ஒட இறக்கவும். மடக்கி மடக்கி விட்டு சுடர் தயிலம் இறக்கவும். இதை வைத்துக் கொண்டு நாட்டு சர்க்கரை வேண்டிய போது தைலத்தில் சுண்டைக்காயளவு உருண்டை செய்து தயிலத்தில் பிரட்டி சாப்பிடவும். இச்சா பத்தியம். தண்டு வீக்கம் இவைம் கொடுக்கலாம்.

38. முக வாத ஜன்னிக்கு புகை.

சந்தனம், மரமஞ்சள், நற்சீரகம், சுக்கு, மிளகு, பூண்டு, இருப்பக் கட்டை, இவையெல்லாம் திரி செய்து புகை பிடிக்கவும்.

39. பருவுக்கு மருந்து.

சுத்தமான மிளகை 1 பலம் எண்ணெயில் போட்டு சிவந்த பதத்தில் எடுத்து வடித்து வடி கட்டி வைத்துக் கொண்டு முகத்தில் பூசி வர 1 வாரத்திற்கு முகத்தை விகாரப்படுத்தும். பருவுகள் இருந்த இடம் தெரியாமல் மறையும்.

40, கரு அழிஞ்சில் வேர் தயிலம்.

அழிஞ்சில் வேர் வடக்கே போகிறதாயுள்ள வேரை ஞாயிற்றுக்கிழமை காலையில் வெட்டி வந்து அதன் மேல் பட்டையை நீக்கி நல்லெண்ணெய் படி 1 அதில் போட்டு சூரிய புடம் 1 நாள் வைத்து அதை தேய்த்து முழுகவும். பீனிசம், மூக்கடைப்பு, நாந்து அடைப்பு மண்டைகுடைச்சல் பிடரி நோய் ஒரு தலைவலி தீரும்.

41. தலையில் ஒடுவுக்கு எண்ணெய்.

பூரம் விராகனிடை ¼, மிருதார் சிங்கி விராகனிடை முக்கால் காசிக்கட்டி விராகனிடை 2 தேங்காய் எண்ணெய் படி அரைக்கால், சரக்கை நன்றாய் அரைத்து எண்ணெயில் கலக்கி தடவவும். தலை ஒடுவுகள் நீங்கும்.

41. சகல ஜன்னிக்கும் தயிலம்.

வீரம், பூரம் லிங்கம் தாளகம், ரசம், மனோசிலை, கெவுரி, கெந்தகம், வெள்ளைப் பாஷாணம், இவைகளை முறையே சுத்தி செய்து வகைக்கு விராகனிடை 1 கொடிக் கள்ளிப் பாலில் மூன்று தடவை சுத்தி நனைத்து உலர்த்தி வைத்த துணியில் சுத்தி செய்த சரக்கை வேலிப் பருத்தி சாற்றில் அரைத்து துணியில் தடவி உலர்த்தி திரி சுத்தி கொரட்டை பிடித்துக் கொண்டு வேப்ப. எண்ணெய் படி 1 ஒரு பாத்திரத்தில் விட்டுக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக பந்தத்தின் மேல் விட்டுக் கொண்டு மூன்று தரம் தாரை விட்டு இறைக்கவும்.

அரு காசு எடை முதல் 4 கர்சு எடை வரையிலும் 3 நாள் 6 வேளை கொடுக்கவும். உப்பில்லா பத்தியம். நாலாம் நாள் உப்பு வருத்து சேர்க்கவும். மேலுக்கும் தவளை இடவும்.

43. அண்ட வாய்வுக்கு மெழுகு (ஓதன்டம்)

கழற்சிக்காய் பருப்பு பலம் ½, பரங்கிப் பட்டை பலம் ½, கிராம்பு பலம் 2, பூரம் பலம் 1, மேற்படி சரக்கை வெதுப்பி தூள் செய்து பனை வெல்லம் பலம் 1 சேர்த்து முட்டை வெள்ளை கருவை விட்டு அரைத்து ஒன்றி போல் உருட்டி 5 நாள் 10 நாள் சாப்பிடவும். அண்ட வாயு போகும்.

44. நரம்பிடிப்புக்கு தவளையிட நெய்.

பால் நண்டு 12 பலம், இடித்து 4 படி தண்ணீர் ஒரு படியாக காய்ச்சி வடி கட்டினது படி 1, நெய் படி 1, வேலிப் பருத்தி சார் படி 1, வாதமடக்கி சார் படி 1, முடக்கத்தான் சார் படி 1, கலச்சை இலை சார் படி 1 இவையெல்லாம் கலந்து அரிச்சிப் பட்டை காட்டு முருங்கை பட்டை, தேவதாரு, கொடடங் கிழங்கு, கருஞ்சுங்கிலியம் சதகுப்பை வசம்பு, வகைக்கு விராகனிடை 2, அரைத்துப் போட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து நரம்புப் பிடியிருந்த இடமெல்லாம் பூசி பிடிக்கவும். சகல பிடியும் தீரும், முன்னல் சொன்ன 4 வகை இலையும் இந்த தலையை முதலில் இடித்து சிறுநீர் விட்டு வதக்கி, பிடிப்பு உள்ள இடத்தில் இராத்திரிக்கு கட்டவும். இதை இடித்து அவிழ்கமாக நெய்யை தடவும். இராத்திரிக்கு கட்டவும். விடிந்து அவிழ்த்து விடவும். விடிந்து நெய்யை தடவவும். இவ்விதம் செய்ய செய்ய வியாதி குணம் ஆகும்.

45. வாந்தி அன்னது வேடூத்திற்கு.

கல்லுப்புபூ. அன்ன பேதி, வெடியுப்பு, வகைக்கு இதை குப்பமேனி சாற்றில்,

அரைத்து புடம் இட செந்தூரம் ஆகும். பணவிடை அநுபானத்தில் கொடுக்க வாந்தி தீரும்.

46. அண்டவாதம் விரைவாதம் இவைகளுக்கு மருந்து.

லிங்கம், பூரம், மிளகு, சுக்கு, கெந்தகம், இதுக்கு ரச பற்பம் 4-ல் ஒன்று சேர்த்து தேன் விட்டு அரைத்து அந்தி சந்தி சாப்பிடவும். அண்ட வாதம் குடல் வாதம், கயல் வாதம், முடக்கு வாதம் பாரிச வாதம், இதுகள் தீரும். அரை விளங்காய் பிரமாணம் சாப்பிடவும்.

47. சுர கட்டி சூரணம்.

கெந்தகம், வெடியுப்பு, நவாச்சாரம் (இவைகள்) மிளகு, இவைகள் வகைக்கு சமனிடையாக் கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு சுரக் கட்டி உள்ளவர்களுக்கு வேளைக்கு விராகனிடையாக தினம் இரண்டு வேளை தேனில் கொள்ள மறுநாள் சுரக்கட்டி கறைந்து விடும். சுரமும் வராது. இம்மருந்தின் உபயோகத்தால் மலமும் ஜலம் தாராளமாகப் போகும். மலம் அதிகமாய் போகுமாயின் மருந்தை குறைத்து மலம் சரி வர போகா விடில் மருந்தை அதிகப்படுத்திக் கொள்ளவும். குணமடைவதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இம்மருந்தை நீடித்து இடைவிடாமல் சாப்பிடுவதினல், யாதொரு கெடுதலும் நேராது. பத்தியம் தவறாமல் 16 நாள் வரையிலும் திரமாக சாப்பிட்டு சில நாள் மருந்து இல்லாமல் விட்டு மீண்டும் ஆதாரம் சத்தாகாரம் சாப்பிடவும். இப்படி பூரக் குணமடையும் வரையில் இடை விட்டு இடை விட்டு சாப்பிட்டுக் கொண்டு வருக. இருமல் இருந்தால் அரிய வேண்டிய விசேஷ குணம் உண்டு. வியாதி பரவிக் கொண்டு இருக்கிறது இருக்காலத்தில் நிவர்த்தியில் மருந்து மற்றதை ஜீரணித்து இருக்கிறது. இது குணமாம். பரங்கிப் பட்டை சூரணம் சாப்பிடலாம். என்னை தேய்த்துக் கொண்டாலும் சவரம் முதலியது காலத்தில் மருந்து நிறுத்தவும். அன்று விட்டு விட வேண்டும்.

48. வெண்குஷ்ட மாத்திரை.

தூரா இலையை வேருடன் பிடுங்கி புல்கள் இல்லாமல் பொறுக்கி எடுத்து நிழலில்

உலர்த்திய சூரணம் பலம் 10 காட்டு சீரகம் விஷ சீரகம், கசப்பு சீரகம் இடித்து எடுத்த சூரணம் பலம் 10 இவைகளை ஒருமிக்க கலந்து பானலில் போட்டு கருப்பு வெள்ளாட்டு பிச்சு நீர் கொஞ்சம் கொஞ்சமாக ஏறதாழ மூன்று படிக்கு குறையாமல் ஏழு எட்டு முறையாக விட்டுக் கிளறி ரவி முகத்தில் வைத்துக் கொண்டு வர ஒவ்வொரு முறையிலும் புதிதாக பிச்சு நீர் விடும் போது முன் விட்ட பிச்சு நீர் ரவியில் காய்ந்து வரட்சி ஆகும்பதத்தில் விடவும். இங்ஙனம் ருவு பெற்றதை சேதப்படாமல் கல்வத்தில் இட்டு பிச்சு நீர் விட்டு அரைத்து ஆனைக் குன்றி பிரமாணம் மாத்திரை செய்து ரவியில் உலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும். வெண்குஷ்டம், உள்ளவர்களுக்கு ஒவ்வொன்றாக தினம் ஒரு வேளை உண்ணவும். இதனால் வெண் குஷ்டம் நிவர்த்தி ஆகும். பத்தியம் நல்லெண்ணெய், கடுகு, உளுந்து, மொச்சை பூசணி அகத்தி மீன் கருவாடு, போகம் லாகிரி வாழைப்பழம், முதல்யவற்றை நீக்கி மற்றவைகளை வேண்டிய படி ஆகாரங்களெல்லாம் கொள்ளவம். இதனை சாப்பிடும் போது 20 நாளைக்கு மேல் 40 நாளைக்குள் வெளுத்த இடம் மயிர் கால்கள் தோறும் கருமையான புள்ளி தோன்றும். இதுவே குணம் அடைவதற்கு உத்த கால மென்று அரிய வேண்டும். இதுநாளடைவில் பரவாமல் நிறத்தை உண்டாக்கும். இங்ஙனம் 40 நாள் வரையிலும் உண்டு. குணம் பெறுவது அறிகுறிகள் காணவிடில் மீண்டும் சாப்பிடுவது உத்தமம். மேலும் சிறிது சிறிது குணம் ஏற்படின் தேகத்தின் வன்மைக்கு ஏற்றபடி 6 மாதம் உண்டு வரவும். இதனால் வெண் குஷ்டம் தீரும்.

49. ஜாதிக்காய் லேகியம்.

மாசிக்காய், ஜாதிக்காய், கசகசா, சுட்டு வருத்த கற்கடகசிங்கி புளியங் கொட்டைத் தோல் வகைக்கு பலம் 1 பசுவின் பால் விட்டு அரைத்து உருண்டையாக்கி அந்த எடைக்கு பனங் கற்கண்டு, சேர்த்து லேகியமாக கிளரி பதனம் பண்ணவும். ரத்த பேதி, சீத பேதி, மூலக் கிராணி, ரத்த மூலம், இவைகளுக்கு கச்சக்காய் அளவு தினமும் இரு வேளை காலை, மாலை சாப்பிட இரண்டு மூன்று நாளில் குணம் தெரியும்.

50. இடிஆவாரை லேகியம்.

நன்றாய் கழுவி தேய்த்த பொட்டுப் போக கழுவிய எள்ளு படி 1 ஆவாரம் வேர் பட்டை சூரணம் வருத்த கடலை மாவு வகைக்கு படி ½, இவைகளுடன் ஒரு நாட்டுச் சர்க்கரை ¼ படி நீல்லெண்ணெய் இதில் மேற்கண்டவைகளை கொஞ்சம் கொஞ்சமாக தெளித்து இடித்து லேகியப் பதமாக செய்து கொள்க. வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் அந்தி சந்தி இருவேளை உண்ண தாகம் அடங்கும். அதிக நீர் முதலிய ரோகங்களை உடைய மது மேகம் தீரும். பத்தியம் ஸ்திரீபோகம் அதிக இனிப்பு உதவாது. வாத பதார்த்தம் கூடாது.

51. அண்ட வாயுவுக்கு.

பச்சை சித்திர மூலப் பட்டை விராகனிடை 2 கோழி முட்டை, வெள்ளை கருவு விட்டு அரைத்து சுண்டைக்காய் பருமணம் பனைவெல்லம் கூட்டி அரைத்து கொட்டப்பாக்கு அளவு இரு நேரம் சாப்பிட புளி கரப்பான் கூடாது.

52. கெந்தகத் தயிலம்.

சாம்பிராணி, பலம் ¼, கெந்தகம் பலம் ¼, இவைகளை கல்வத்தில் இட்டு நன்றாய் பொடி செய்து ஒரு சுத்தமான சேலையில் நெய்யை தடவி மேலே அரைத்த மருந்தை தூவி திரி போல் திரட்டி ஒரு இரும்பு கம்பி முனையில் குத்தி விளக்கில் பொருத்தி தைலம் இறக்கவும். இதை புண், சொறி, சிரங்கு, புற்று, முதலிய இவைகளுக்கு தடவி வர குணமாகும்.

53. மெழுகு தைலம்.

கடல் உப்பு, பலம் 20, தேன் மெழுகு பலம் 20, கருப்புப்பு பலம் 10, மஞ்சள், சாம்பிராணி வாலுளுவை அரிசி, சன்ன லவுங்கப்பட்டை, குங்கிலியம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வகைக்கு 3 களஞ்சு மெழுகை பொடியாக செய்து உப்பையும் மாவு போல் இடித்து மற்ற சரக்கை இடித்து கலந்து தைலம் இறக்கவும் முதலில் சாதாரண தீயாக

எரிக்கவும். பிறகு ஜாடாக்கினியாக எரிக்கவும். புகை அதிகமாக வந்தால் மருந்து பத்திக் கொள்ளும், சாக்கிரதை வேண்டும். கடசியில் தான் தைலம் இறங்கும். பாரிச வாதம், பிடிப்பு, வெட்டுக் காயம், அண்ட வீக்கம், குடைச்சல், முதலியவைகளுக்கு பத்துப் போட குணமாகும்.

25.8.62.

குஷ்ட நாவி மஹற்றம்.

சுத்தி செய்த கரு நாவி சூரணம் விராகனிடை 2½, மஞ்சள், கடுக்காய், தூள் கொடிவேலி வேர்ப்பட்டை சூரணம் வகைக்கு விராகனிடை 10 மிளகு சூரணம் விராகனிடை 5, தேன், பசுவின் நெய், செல்லத்தக்க, அளவு தெளித்த நெய்யை, தெளித்து பசை உண்டாக்கி தேனை காய்ச்சி மேற்கண்ட சூரணத்தை போட்டு கிண்டி கிளரி பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். ஒரு நாளைக்கு இரு வேளை ஒரு விராகனிடை சாப்பிடவும். அனுபானம் ரசம் பலம் 1, ரச கற்பூரம் பலம் 1, பாஷாணம் பலம் 1, தாம்பர பற்பம் பலம் 1, தாமிர செந்தூரம் முதலிய அநுபானத்தில் உண்டு வந்தால் அதிக பிரயோசனம் உண்டும். ~~இதில் பலம் என்று எழுதியிருக்கும் வார்த்தையை பற்பம் என்று தெரிந்து கொள்ளவும்.~~

55. கருவங்க பற்பம்.

வங்க பற்பம் விராகனிடை 5, எள்ளு விராகனிடை 5, கற்போக அரிசி சூரணம் விராகனிடை 4 உலர்ந்த வேப்பம் பட்டை சூரணம், விராகனிடை ½, சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை 1½ இவையெல்லாம் ஒன்றாய் கலந்து அரை மணி நேரம் அரைத்து எல்லாம் உறவான பின் தண்ணீர சிறுக சிறுக விட்டு ஒரு ஜாமம் அரைத்து 5 குன்றி எடை மாத்திரைகள் செய்து உலர்த்தி கொள்ளவும். மாத்திரை 1 எடுத்து சர்க்கரை வெண்ணெய் முதலிய அநுபானங்களில் இரு வேளையும் சாப்பிட வெண்குஷ்டம் வெள்ளை புள்ளி இவைகள் தீரும்.

56. வெண் குஷ்டத்திற்கு மேல் பூச.

கருக்கி பொரிச்ச நவாச்சாரம் பலம் 5, நல்லெண்ணெய் பலம் 5, விதை நீக்கிய பேரிச்சங்காய் பலம் 5 இரண்டும் சேர்த்து பேரிச்சங்காயை நன்றாய் கருக்கி எண்ணெயில் போட்டு நன்றாய் அரைத்து முடிவில் அரை விராகனிடை லிங்கத்தை சேர்த்து அரைத்து நன்றாய் மிக்ஸர் ஆன விளித்து சிமிளில் வைக்கவும். இதை மேலுக்கு பூசி வருவதால் வெண்குஷ்டம், மேகப் படை வெள்ளை தழும்பு பரை ரணம் ஆறும்.

57. குஷ்டத்திற்கு மருதாணி கஷாயம்.

மருதாணி இலை பலம் 4, இதை முக்கால் படி ஜலத்தில் போட்டு இரவில் ஊர வைத்து காலையில் பிசைந்து வடி கட்டி அதில் கொஞ்சம் சர்க்கரை போட்டு சாப்பிடவும். இப்படி 40 நாள் செய்ய இரத்த விருத்தி உண்டாகி குஷ்டம் தீரும்.

54. வயிற்று வலிக்கு கஷாயம்.

முருங்கப்பட்டை உள்ளிப்பூண்டு, வசம்பு சுட்ட சாம்பல் சுக்கு, மிளகு, இந்த ஆறு சரக்கும் சமனாய் இடித்து அரைக்கால் படி கஷாயத்தில் பெருங்காயம் சுட்டு உரைத்துக் கொடுக்கவும். வயிற்று வலி உடனே தீரும்.

58. பவழ பற்பம்.

சிவந்த உருகின தாளகம், பவளம், சிலாசத்து சமனிடையாக கல்வத்தில் இட்டு வெள்ளெருக்கன் பால் விட்டு நான்கு ஜாமம் அரைத்து வில்லை செய்து அகலில் வைத்து சீலை செய்து ஒரு சட்டியில் மணல் இட்டு நடுவில் வைத்து மேல் சட்டி மூடி சீலை செய்து உலர்ந்த பின் அடுப்பின் மீது ஏற்றி நான்கு ஜாமம் சிறு தீயாய் எரிக்க எரித்து இறக்கி ஆறவிட்டு எடுக்க பற்பம். இதை 4 குன்றி பிரமாணம் அநுபானத்தில் உட்கொள்ள சுவாச காசம் நீங்கும். இன்னும் கப சம்பந்தமான ரோகங்கள் நிவர்த்தி செய்யும்.

பத்தியம் ரோகத்திற்கு தக்கபடி அறிந்து வைக்கவும்.

60 வெடியுப்பு சுன்னம்.

5 பலம் ஆமை ஓட்டை தூள் செய்து ஒரு சட்டியில் பாதி தூளை பரப்பி அதன் மேல் 4 பலம் வெடி உப்பை பரப்பி ஆமை ஓட்டு தூளை போட்டு மறைக்க முன் ஆமை ஓடு தூளை பரப்பி அதில் அகல் மூடி சீலை செய்து காய வைத்து 50 விரட்டியில் புடம் இடவும். ஆறிய பின் பார்க்க கம்பிகள் உருசி வெளுத்து இருக்கும். இதை அரைத்து வைத்துக் கொண்டு வேண்டும் போது குன்றி எடை இளநீரில் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, எரிச்சல் முதலியவை குணமாகும்.

61. மான் கொம்பு பற்பம்.

ஒரு தோலா வெடியுப்பும், ஒரு தோலா ஓமத்தையும் ஜலம் விட்டு மெழுகு போல் அரைத்து ஒரு தோலா மான் கொம்பின் பேரில் கவசித்து காய்ந்த பின் சீலை செய்து காயவைத்து ஒரு முறம் நாட்டுக் கரியில் நடுவில் வைத்து விசிறியால் விசிறி ஆறிய பின் பார்க்க மான் கொம்பு நீர் பற்பமாய் இருக்கும். இதில் பணவிடை தேனில் மத்தித்து கொடுக்க தொண்டையில் உள்ள கபங்களை கரைத்து சுவாசங்களை இற்ப்பிறம் குணப்படுத்தும்.

62. ரச பதங்கம்.

ரசம் பலம் 1, வீரதம் பலம் 1, இரண்டையும் சுத்தி செய்து நன்றாக அரைத்து ஒரு சிறு குடுவையில் போட்டு வாய் மூடி சீலை மண் செய்து காய வைத்து மூன்று செங்கலால் அடுப்பு போல் வைத்து அதன் மேல் குடுவையை வைத்து அடியில் அகன்ற அகலில் விளக்கெண்ணெய் விட்டு அதில் ஒரு இலை உள்ள பருத்தி நூல் திரி போட்டு 1 ஜாமம் எரிக்கவும். பின்பு 2-வது ஜாமத்தில் அதைப் போல் மற்றொரு திரி சேர்த்து 1 ஜாமம் எரித்து 3-வது ஜாமம் மற்றொரு திரி சேர்த்து 4-வது ஜாமத்தில் மற்றொரு திரி சேர்த்து எரிக்கவும். இது போல் ஜாமத்திற்கு ஒரு திரியாக 4 ஜாமத்திற்கு எரிக்கவும். ஆற விட்டு எடுக்க பதங்கமாக இருக்கும். அரைத்துக் கொள்ளவும். தேக வன்மை மென்மைக்கு தகுந்தவாறு ஒரு பலம் சித்தா மணக்கெண்ணெயில் 1 குன்றி எடை பதங்கத்தை போட்டு மத்தித்து சாப்பிடவும். 4,5 தடவை பேதியாகும். இப்படி 4 நாள் அடுத்து காலை நேரத்தில் சாப்பிடவும். கிரந்தி கொருக்கு, மேகவாய்வு, பிடிப்பு மேக ரணம் தீரும். பத்தியம் இச்சா பத்தியம். இருக்க வேண்டும். இந்த பதங்கத்தின் வீரு 1 மாதம் வரை இருக்கும். ஆதலால் பசி தீபனம் அதிகமாகும். நல்ல ஆகாரங்கள் உட்கொள்ள வேண்டும். அவசர நிமித்தம் வேறு அவிழ்த கொள்ளக் கூடாது. மீண்டும் இம்மருந்தை கொள்ள வேண்டுமாயின் 1 மாதம் விட்டு சாப்பிட வேண்டும். முற்கூறிய பதங்கம் விராகனிடை 1 / வரகு அரிசி மாவு பலம் ½, பனைவெல்லம் பலம் ½, இவைகளை அரைத்து மெழுகாக செய்து மிளகு, பிரமாணம் வாழைப் பழத்தில் வைத்து 4,5 நாள் கொடுக்கவும். புண், கிரந்தி, அரையாப்பு, தொடை வாழை தீரும். இம்மருந்தால் வாய் நீர் ஊறக் கண்டால் மருந்தை உடனே நிறுத்தவும்.

63. ஈரக்குலை, எரிச்சலுக்கு மருந்து.

வெங்காயம், துத்தி இலை, ஆவாரங் கொழுந்து இலவன் கொழுந்து, மாங் கொழுந்து, மாதளங் கொழுந்து இவைகளை சமமாய் எடுத்து நீராகாரம் இட்டு இடித்து வடிகட்டி ¼ படி வடித்து அதில் சீரகம் கொஞ்சம் அரைத்து கலக்கி கொடுக்கவும்.

64. கண்ணுக்கு பச்சக்கற்பூர மெழுகு.

பச்சக்கற்பூரம், குங்குமப்பூ, இவைகள் வகைக்கு சமன் எடுத்து தேன் விட்டு அரைத்து ஒரு மெழுகு போல் வைத்துக் கொண்டு இதை கண்ணில் இட்டு வர கண் வியாதியும் தீரும்.

65. கண்ணுக்கு மருந்து.

கடுக்காய், விதை நீக்கி பருப்பை முலைப்பாலில் உரைத்து கண்ணில் போட கண் பார்வை கண் புகைச்சல், திரை கட்டியது போல் இருத்தல் பார்வையை பலப்படுத்தும். குளிர்ச்சியாகவும் இருக்கும்.

66. தாம்பர பற்பம்.

தாம்பர தகடுகளை பழுக்க காய்ச்சி நல்லெண்ணெய், கோமூத்திரம், மோர், காடி, கொள்ளு கஷாயம் இவைகளில் தனி தனி தோய்த்து எடுக்க சுத்தியாகும். இந்துப்பை, பழச்சாற்றில் அரைத்து ரேக்குகளுக்கு தடவி காய்ச்சி காடியில் துவைக்க நொச்சி சாத்திரம் துவைக்க சுத்தியாகும். சுத்தம் செய்த தாம்பரம் தகட்டை 1 பலம், கெந்தகம் பலம் 1, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழ சாற்றில் அரைத்து ஒரு பலம் தாம்பர கட்டுக்கு தடவி உணர்த்தி அகலில் வைத்து கெஜபுடம் போட நீரும், ~~கிர்ச்சை~~ கிறுகிறாது, வாந்தி பிரந்தியை உண்டாக்கும். ஆதலால் மேற்படி மருந்தை பிறகு கல்வத்தில் போட்டு எலுமிச்சம் சார் விட்டு அரைத்து சுத்தி செய்து வில்லை தட்டி காய வைத்து ஒரு புடம் போட்டு எடுக்க பற்பமாகும். பற்பத்தை கல்வத்தாலரைத்து வில்லை செய்து உலர்த்தி காட்டுக கருணை கிழங்குள் வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போடவும். அதை எடுத்து அரைத்து வியாதிகளுக்குத் தகுந்த அநுபானத்தில் உபயோகிக்க குஷ்டம், குன்மம். சூலை, காசம், பிரமேகம் இவைகளுக்கும் பச்ச வாதம் பாரிச வாதம் இவைகளுக்கும் கொடுக்கலாம் தீரும்.

67. கெந்தக சுடர் தயிலம்.

சுத்தி செய்த கெந்தகம் பலம் 5, வீரம், நவாச்சாரம் வகைக்கு பலம் $1\frac{1}{4}$, மடல் அரிதாரம் பலம் $3\frac{1}{2}$, வெடி உப்பு பலம் 2, பசு நெய் பலம் 10, மேற்கண்ட சரக்கை தனித்தனியாக பொடித்து நெய்யை சிறுக சிறுக விட்டு அரைத்து மெல்லிய துணியில் தடவி திரி செய்து சுடர் இரக்கவும். பக்குவமாக இறக்கவும். அதிக காரமாக இருந்தால் நல்ல மருந்து என்று அறியவும். நல்ல கெட்டி சீசாவில் வைத்துக் கொண்டு கால் அரை விராகனிடை சீனி, வெல்லம்முதலிய அநுபானத்தில் உண்ண அரையாப்பு, கிரந்தி. வெண்குஷ்டம் வெடிப்பு விரை வாதம், மேக சம்பந்த முதலிய அநேகம் தீரும். ரோக நிதானம் போல் பத்தியம்.

68. ஜன்னி, வலிப்பு பச்ச வாதங்களுக்கு தைலம்.

ரசம். கெந்தகம், லிங்கம், பூரம், வெள்ளை, கெவுரி, மனோசிலை, அரிதாரம், ரச செந்தூரம், துடன், சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, பூண்டு, ஓமம், காயம், சதகுப்பை, இஞ்சி சித்திர மூலம் பட்டை, வகைக்கு விராகனிடை 2 எல்லாம் சுத்தி செய்து கல்வத்தில் இட்டு ஆறு மாத காடி விட்டு அரைத்து சிறு வில்லையாக உலர்த்திக் கொண்டு கரண்டியில் வேப்பெண்ணெய், வீசம் படி விட்டு காய்ச்சி அதில் வில்லைகளை தூள் செய்து போட்டு எண்ணையை காய்ச்சி உள்ளுக்கு சிறு கரண்டி அளவு கொடுத்து மேலுக்கும் பூசவும். 4,5 நாள் கொடுக்கவும். சகல ஜன்னி தீரும். உப்பு வறுத்துக் கட்டவும்.

69. வாய்வு, மந்தம் இவைகளுக்கு மாத்திரை.

சுக்கு, பலம் $\frac{1}{2}$, திப்பிலி விராகனிடை 3, தேசாவாரம் பலம் $\frac{1}{4}$, மிளகு பலம் $\frac{1}{4}$, அரத்தை பலம் $\frac{1}{4}$, ஓமம் பலம் 1, பூண்டு விராகனிடை 3, காயம் விராகனிடை 1, நொச்சிச்சார் படி $\frac{1}{2}$, நொச்சி கொழுந்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு மேற்கண்ட சரக்கை இள வறுப்பாக வறுத்து இடித்து வடி கட்டின தூளை மேற்கண்ட கொழுந்தும் சேர்த்து மேற்கண்ட சார் விட்டு குழம்பு போல் காய்ச்சி தூளை போட்டு கிண்டி லேகியம் போல் செய்து தூது விளங்காய் அளவு உருட்டிக் கொண்டு அநுபானத்தில் கொடுக்கவும்.

70. முதவாத ஜன்னிக்கு நசியம்.

தும்பை, வெத்திலை. உப்பு, இலைப்பசை கட்டி இந்த 4-ம் சேர்த்து பிள்ளைகள் மூத்திரத்தில் அரைத்து நசியம் செய்யவும்.

71. மனோசிலை மாத்திரை.

3-ம் முறை. 4-ம் முறை சுத்தி செய்த மனோசிலை, சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், வகைக்கு விராகனிடை 1 இவைகளை சேர்த்து துளசி சாற்றில் ஒரு ஜாமம்

வெள்ளாட்டு மூத்திரத்தில் 1 ஜாமம் அரைத்து குன்றி பிரமாணம் உருட்டி ஒரு மாத்திரை வெந்நீரில் கொடுக்க 3முறை 4 முறை காச்சல் தீரும்.

72. துருசு பற்பம், குன்மம் 96-க்கும்

அருசு விராகனிடை 4, ~~வெடி~~ உப்பு வெடியுப்பு விராகனிடை 2, குப்ப மேனி சாற்றில் அரைத்து வில்லை செய்து காய வைத்து குக்குட புடம் போட பற்பமாகும். 2 குன்றி எடை நெய் தேனில் கொடுக்க 96 குன்மங்களும் தீரும்.

73. நடுக்கல் சுரத்திற்கு.

தும்பைப்பூ பலம் ½, மிளகு பலம் ½, இவைகளை நன்றாய் அரைத்து நடுக்கல் சுரம் வரும்போது சுண்டைக்காய் அளவு மூன்று நாள் கொடுக்கவும்.

74. நாக்கு தடிப்பு, நாவு பேசப்படாமல் திமிர் இவைகளுக்கு.

புது செருப்பு தேர்ந்தது வில்லையாக எடுத்து சுட்டு அதோடு கொஞ்சம் வசம்பை சேர்த்து தேனில் விட்டு அரைத்து நாக்கில் தடவி வர குணம் ஆகும்.

75. நேத்திர வியாதி.

ஈருத எருமை கிடாரி சாணியை பிழிந்து அதில் சித்தாமணக்கு பருப்பு உரைத்து கண்ணில் தடவ திரை நீர் யாவும் நீங்கி நேத்திரம் சுத்தமாகும்.

76. கபவாத ஜன்னிக்கு.

வேப்பஎண்ணெய் படி ¼, வீரம் விராகனிடை ¼, மயில்இறகு விராகனிடை 1 சங்கம் வேர் விராகனிடை ¼, சங்கம் வேர் பட்டையை அரைத்து கலக்கி கலச்சக்காய் அளவு அதில் பிழிந்து எண்ணெயில் போட்டு மயில் இறகு தறுக்கி போட்டு காய்ச்சி மயில் இறகு கருகின உடன் பாத்திரத்தில் வடித்து சீசதவில் வைக்கவும். ஜன்னிக்கு காசு எடை கொடுக்கவும். உள்ளுக்கு கொடுக்கவும். 4,5 நாள் கபவாத ஜன்னி குணம் ஆகும்.

77. நவானந்தம் கவுரி பதங்கம்.

வெள்ளைப் பாஷாணம்; துருசு, காந்தம் வீரம், லிங்கம், தாளகம், கௌரி, கந்தகம், பூரம், மனோசிலை, ஆக இந்த சரக்குகளை வகைக்கு பலம் ¼ யாக கல்வத்தில் இட்டு சித்தண்ட வென் கருவோடு எருக்கன் பால் விட்டு ரவியில் வைக்க முறிந்து செயநீர் ஆகும். இந்த செயநீர் கொண்டு மேற்கண்ட சரக்கை நன்றாய் அரைத்து அதில் மூசை செய்ய ஒரு துவாரம் உள்ள மூடியும் செய்து வெடிக்காமல் நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. அதில் வாழை ரசம் 2 பலம் விட்டு மேல் மூடியால் மூடி பொருத்தமான படி செய்து சந்துக்கு கரு உருத்தமாவை அரைத்து பூசி இரண்டு ஒன்று சீலை செய்து வைத்துக் கொண்டு 4 படி உப்பை காய வைத்து நன்றாய் இடித்து திக்க வானான சட்டி ஜாடியில் போட்டு அமுத்தி நடுவில் பள்ளம் செய்து முன் செய்து உள்ள குகையை வாய் மட்டம் உப்பை அமுத்தி மேல் பொருத்தமான சட்டிக்கு உள் புறம் கரிசலாங் கண்ணி சார் தடவி உலர்த்தி மேல் மூடி சீலை மண் எழு சீலை செய்து நன்றாய் காய வைத்து அடுப்பில் வைத்து முத்தீயாய் 10 ஜாமம் எரித்து ஆற விட்டு இந்த மேல் சட்டியில் பதங்கம் சுத்தமாய் எடுத்து அரைத்து சீசாவில் வைக்கவும். வேளைக்கு கடுகு பிரமாணம் தேங்காய் பனை வெல்லத்தில் இரு வேளை கொடுக்கவும். 4-நாள் குஷ்டம், சூலை, கை கால் முடக்கு, வாத நோய், சம்பந்தமான ரோகங்கள் யாவும் தீரும். பிரசவ ஸ்திரிக்கு அடிக்கடி உண்டாக்கும் ஜன்னிக்கு சீதளம். மாந்தங்கள் அரிதாக தோன்றும். மருந்தின் அளவை கவனியாது மருந்தின் அளவை அதிகப்படுத்தி கொடுக்கவும். பத்தியம் பால் அன்னம் சாப்பிடவும்.

78. பச்சைக்கற்பூர மாத்திரை.

பச்சைக்கற்பூரம், வீரம், பூரம், லிங்கம், ரச செந்தூரம், இவைகளை சுத்தி செய்து

முலைப்பால் விட்டு அரைத்து சமமாக சேர்த்து அரைத்து குன்றி போல் உருட்டி நிழலில் உலர்த்தி தக்க அநுபானத்தில் இட, சூலை, கிரந்தி, சன்னி ஜீரம், முதலிய சலகமும் தீரும். சரீரம் சில்லிட்டு இருந்தாலும் இதை கொடுத்தால் சரீரம் சூடு உண்டாகும்.

79. கற்பூராதி குளிகை.

சுத்தி செய்த ரசம், கெந்தகம், ஜாதிக்காய், சூரணம் வகைக்கு விராகனிடை 1½, சுத்தி செய்த வாளம், விராகனிடை ½, சேர்த்து கற்றாழை சார், செல்லத்தக்க, அளவு ரசம் சேர்த்து அரைத்து மற்றதையெல்லாம் சேர்த்து அரைத்து ஊந்து அளவ மாத்திரை செய்து ஒரு மாத்திரை சர்க்கரையில் கொடுக்க புனர் போகம் கஞ்சி கொடுக்கவும். சகல ஜீரம், மந்தம் இவைகள் தீரும்.

80. சீதாராம் ரசம்.

சுத்தி செய்த கட்டி தாளகம், மனோசிலை, சுத்தி செய்த வாளம், வகைக்கு பலம் 1, மேல் தோல் நீக்கின சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு பலம் 2, முருங்கை வேலம் பட்டை, சிகப்பு பட்டையாக எடுத்து இடித்து கஷாயம் சுண்ட வைத்து மேற்கண்ட கட்டிக்கு மேற்கண்டதை இடித்து சூரணம் தனியாக இடித்து மேற்கண்ட கட்டி தனில் தனிக்கி கட்டிக்கி சுருக்கு கொடுத்து அதை அந்த கஷாயத்தில் அரைத்து அதோடு உயர்ந்த எல்லாம் சேர்த்து ஒன்றாய் அரைத்து குன்றிபோல் உருட்டி உலர்த்தி மாத்திரை 1,2 வெந்நீர், இஞ்சி ரசம் முதலிய அநுபானத்தில் உபயோகிக்க சீத ஜீரம், ஜன்னி, வாத பாண்டு, காமாலை, சுவாச காசம், உதிர ரோகம், ஜன்னி பாதம், வாந்தி 18-பித்தப் சூலை-32 பேய்ச் சொரி, பித்த பாண்டு சூலைகள், கட்டிகள் மகோதரம், வயிற்றுபிஷம் ஆனைக்கால், வாதம், கணுக்கால், வாதம் தாப சுரம், பித்தம் அக்கினி மந்தம் வீக்கம் முதலியவை குணம் ஆகும்.

81. பூரக் கட்டு.

பூரம் பலம் 1, முலைப் பாலில் 4,5 நாள் ஊரப் போட்டு வெடி உப்பு பலம் 2, நடுவில் வைத்து 4 முட்டை வெள் கருவ இட்டு எரிக்க உருகி தீப் பிடிக்கும். பக்குவத்தில் இதை எடுத்து வைத்துக் கொண்டு எவ்வியாதிக்கும் கொடுக்கலாம்.

82. எலும்பு உருக்கி வியாதிக்கு.

இலந்தப் பட்டையை இடித்து அதோடு அருகம்பில்லும் சேர்த்து இடித்து அரைத்து பசுவின் பாலில் கலக்கி குடிக்கவும்.

83. மறவை கட்டிக்கு மருந்து.

அரையாப்பு முதல் வீக்கம் முதல் பத்து புகையிலையை தாராளமாய் எடுத்து விரித்து சட்டியில் இட்டு வருத்த நாள் செய்து காசு எடை பொடிக்கு 8 காசு எடை சுண்ணம்பு சேர்த்து தேய்த்து தேங்காய் எண்ணெய் விட்டு களிம்பு போல் அரைத்து பதமாய் எடுத்து வீக்கம் அளவுக்கு துணியில் தடவி போட உரிக்கம் வற்றி கட்டி கரைந்து விடும்.

84. பீனிசத் தயிலம்.

அதிமதுரம், கோஷ்டம், கடல் நுரை, பூநாகம், கரும் செம்பை, ஆதண்டம் இலை, மிளகாய் இவைகள் எடுத்து தையான் தகரை சார் விட்டு அரைத்து நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி முழுகவும், காதடைப்பு, இரைச்சல், தலையில் குத்தல், ஒருத்தலை வலி ரத்த பீனிசம், சிறுய் பீனிசம் இவைகள் நீங்கும்.

85. வாயுவுக்கு விரோசனம்.

மிளகு விராகனிடை 3, இந்துப்பு விராகனிடை 3, நற்சீரகம் விராகனிடை 2, ஓமம் விராகனிடை 3, திப்பிலி விராகனிடை 2, கடுக்காய் விராகனிடை 10, சுத்தி சாரணை கிழங்கு விராகனிடை 10, சுக்கு விராகனிடை 5, சிவதை வேர் விராகனிடை 5, இவைகளை ரவியில் உலர்த்தி இடித்து மேற்கண்ட சூரணம் இரவில் கொள்ள திரிகடியளவு கொள்ள விரோசனம், அஜீர்ணம் வாய்வு தீரும்.

86, கோஷ நிவாரணி.

ஆறுபடி சுத்த ஜலம் புது பாண்டத்தில் இட்டு அடுப்பேற்றி அந்த ஜலம் 4-படியாக சுண்டினதும் இறக்கி ஒரு படி சுத்தமான உவர் மண்ணும், மேலும் இரண்டு பலம் கல் சுண்ணத்தையும் போட்டு கரைத்து 10-நாள் முழுதும் வைத்து இருந்து அசையாமல் வைத்திருந்து மறுநாள் தெளிவு நீரை மட்டும் இருந்து அசையாமல் வைத்து இறுத்து குப்பியில் வைக்கவும். ஸ்ரீ பிரசவம் ஆன ஸ்திரீகளுக்கும், சீதளத்தால் கானலும் கொடுரமான நா வரட்டிசிக்கும் ஜன்னி கானல் கானலும் நாவறட்டிசிக்கும், சகல தோஷடம் உடையவர்களுக்கும் கொடுக்கலாம்.

87. விக்கல், நாவில் முள் முளைத்தல் இவைகளுக்கு.

பச்சை கற்பூரம் மேற்கண்ட மருந்து மேலே கண்ட வியாதிக்கு மட்டும்.

88. முகவாத ஜன்னிக்கு கஷாயக். நசியம்.

தும்பை, வெற்றிலை, உப்புக்கல், இலுப்பக்கட்டி, இந்த நாலும் சேர்த்து நசியம் இடவும்.

89. மூலக் கடுப்புக்கு.

கடுக்காய், சுட்ட சாம்பல், ~~காசு கட்டு,~~ ? கட்டி அதிவிடையம், இவைகள் எல்லாம் சேர்த்து அரைத்து தேத்தாங் கொட்டை அளவு வெள்ளாட்டுத் தயிரில் கொடுக்கவும்.

90. சிரசில் நீர் ஏறியிருந்தால்.

சுத்தமான நல்லெண்ணெயில் 10 துளி, எருக்கன் பால் விட்டு குலுக்கி வைத்துக் கொண்டு 1, 2 துளி நாசியில் விட்டு நன்றாய் முகற விடவும். தும்மல் ஆனது அடுத்து, அடுத்து வரும். சிரசில் இருக்கும் நீரெல்லாம் வெளியாகி விடும். நிறுத்த வேண்டுமானால் குளிர்ந்த ஜலத்தை மூக்கில் அடித்து மூக்கில் துவாரத்தை ~~[illegible]~~ அமுக்கி விட நின்று விடும்.

91. முறை சுரத்திற்கு நசியம்.

ஓமம், இந்துப்பு, மிளகு, பூண்டு, எருக்கன் இலை, இவை சமன் கூட்டி முலைப். பாலில் அரைத்து நசியம் செய்ய முறை ஜீரம் தீரும்.

92. தங்க பற்பம்.

தங்க ரேக்கு விராகனிடை 1 இதை கல்வத்தில் சன்னமாக கத்தரித்து போட்டு அதோடு சித்தண்ட ஓடு சுத்தி செய்து சூள் செய்த விராகனிடை 2, சேர்த்து முளருக்கீரை சாற்றில் அரைத்து வில்லை செய்து காய வைத்து அகலில் அடக்கி சீலை செய்து உலையில் வைத்து மூசை ஆகும்படி 4 தரம் ஊதி அப்படியே விட்டு மறுநாள், எடுக்க பற்பம். அப்படி ஆகா விட்டால் மறுதரம் அரைத்து முன் போல் உலர்த்தி ஊதி எடுத்தால் பற்பம் ஆகும். பூராணிதி முதலிய லேகியத்தில் சம்பத்தப்படுத்தி அருந்திலல் தேகம் தங்க நிறமாய் இருக்கும். நல்ல பசியும் தாது விருத்தியும் உண்டாகும்.

93. வெள்ளி பற்பம்.

மேற்கண்ட தங்கத்தை செய்தது போலவே வெள்ளியையும் செய்து பார்க்க பற்பம் இருக்கும். அப்படியிருந்தால் அதை வெங்கருவால் அரைத்து வில்லை செய்து உலர்த்தி எடுக்க பற்பமாகும். இது அருபவத்தில் மேற்கண்ட சாத்தால் அரைத்து அரைத்து வில்லை செய்து காய வைத்து அகலில் வைத்து சீலை செய்து புடம் போட 1, 2, 3 தடவை போட பற்பமாகும். இதுக்கு அனுபானம் திரிகடுகு, திரிபாலாதி, சமன் கொண்டு சூரணித்து தட்டி ஒரு விராகனிடை சூரணத்தில் அரிசியெடை வெள்ளி பற்பம் வைத்து அரை தோலா நெய்யுடன் கலந்து சாப்பிட சகல வாய்வும் சகல வியாதியும் நீங்கும். தேகம் வெண்மை நிறம் கொடுத்து இருகும். நல்ல பலம் உண்டாகும். இந்த பற்பத்தை உயர்ந்த லேகியத்தில் வைத்து சாப்பிடவும். இரத்த விருத்தி இரத்த சுத்தி இவைகள் உண்டாகும்.

~~94~~.

94. லவுண குறுதி எண்ணெய்.

தேங்காய் பால் படி 1, கல்லுப்பு வளையலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சௌக் காரம், அக்கராக்காரம், வகைக்கு பலம் ½, விளக்கெண்ணெய் படி ½; நவாச்சாரம், பலம் ¼, எல்லாம் சேர்த்து அரைத்த சுத்தி செய்த வாளம் பலம் 1, சேர்த்து அரைத்து மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து காசிடை திரேக திடம் அறிந்து கொடுக்க அநேக ரோகங்கள் தீரும்.

95. வாய்புண் வெண்ணெ.

சலாசித்து, பசீசவெட்டு, குங்கிலியம், இவைகளை சமன் இடை செய்து தக்க நல்லெண்ணெய் விட்டு அரைத்து மறுபடி பச்சை தண்ணீர் விட்டு அரைத்து கழுவி எடுக்க வெண்ணெய் போல் ஆகும். அதை வைத்துக் கொண்டு புளியங் கொட்டை அளவு சாப்பிடு வர வாய் புண், உதட்டு புண் ஆறும்.

96. ரத்திர கார மெழுகு.

சித்தாமணக்கெண்ணெய் படி ¼, சுத்தி செய்த கந்தகம் பலம் 1, சுத்தி செய்த சேங்கொட்டை பலம் 10 எண்ணெயை அடுப்பில் வைத்து கெந்தகத்தை போட்டு சேங் கொட்டையை நறுக்கி போட்டு கொட்டை மிதக்கும் பக்குவத்தில் எண்ணெயை வடித்து கொண்டு மேற்கண்ட தைலம் பலம் 1, வாலை ரசம் பலம் 1, பசு நெய் பலம் 1, பனை வெல்லம் பலம் 2, ரசத்தை சேர்த்த பின் மெழுகு போல் அரைத்துக்கொண்டு குன்றியிடை 4,5 நாள் பனை வெல்லம், சீனி, வெண்ணெய் முதலிய 3 நாள் 6 வேளை உபயோக்கில் தலை நிரைந்த வெட்டை, வெடிரணம், மேகஊரல், சொரி சிரங்கு, கருங்குஷ்டம், செங்குஷ்டம், மேகரணம், கண்டமாலை, லிங்கப்புற்று, யோனிப்புற்று, அரையாப்பு, தட்டைவாலை, புண், புரை தீரும், இச்சா பத்தியம். நல்லெண்ணெய், கடுகு, புளி, தள்ளவும். நெய்அதிகம் சேர்க்கவும் தயிர் பால் அதிகம் சேர்க்கவும்.

97. வாந்திக்கு குடிநீர்.

சுண்ணம்பு தெளிவு நீரும், பசும் பாலும் சமன் கலந்து நேரம் வீசம் படி சாப்பிட 6 நேரம் கொடுக்க எந்தவிதமான வாந்தியும் தீரும்.

98. நீர் மஞ்சளாயும், சூடாயும் இறங்குதலுக்கு.

சுண்ணம்பு தெளிவு நீரும், கொத்தமல்லி, விரையை அரைத்து வடிகட்டி அதில் கல க்கி சாப்பிடவும்.

99. அண்ட பற்பம்.

வேண்டிய அளவு அண்ட ஓட்டை, எடுத்து வந்து அது மிதக்கத்தக்க வேலிப்பருத்தி சார் விட்டு ஒடு மூடி சீலை செய்து புடம் போட பற்பமாகும். அண்ட வாயுவுக்கு கொடுக்கவும். அப்படி அரை குறையாய் இருந்தால் மறுபடி அந்த சாத்தில் அரைத்து ஒரு புடம் போட பற்பமாகும்.

100. குளிர்ச்சி எண்ணெய்.

ஏலம், சீரகம், வெந்தியம், ஏலம் பலம் ½, சீரகம் பலம் ½, வெந்தியம் பலம் 1, பனங்கற்கண்டு பலம் 2, விளக்கெண்ணெய் படி ½, வல்லாரை சார் படி ½, மிளகு த்க்காளி சார் படி ½, கடை சரக்குகள் 1,2-ய் இடித்துக் கொண்டு காலை, மாலை கரண்டி அளவு சாப்பிட கணை, உள் சூடு, வெட்டை, இவைகள் நீங்கும்.

101. சண்முக மெழுகு.

சுத்தி செய்த ரசம் விராகனிடை 1, பூரம் விராகனிடை 1, வீரம் விராகனிடை 1, சுக்கு தூள் விராகனிடை 3, கிராம்பு விராகனிட 3, ஏலத்தூள் விராகனிடை 3, எல்லாம் சேர்த்து மறுபடி தேன்விட்டு சிறுகு சிறுக தேன் விட்டுஅரைத்து மெழுகு போல் செய்து குன்றியிடை பனவெல்லத்தில் கொடுக்க சகல வெள்ளை, சூலை, சந்து வாதம்

முழங்கால் ஏதம் பக்க வாதம் தீரும்.

102. விஷாமிர்தமை.

சுத்தி செய்த ரசம், அரிதாரம், நீர் விஷம், கருநாபி, நாட்டு வெங்காரம், கருஞ் சீரகம், பெருங்காயம், மனோசிலே, இந்துப்பு வகைக்கு விராகனிடை 1½, எல்லாம் சுத்தி செய்த வாளம் விராகனிடை 12½, உத்தாமணி இலைச் சார் செல்லத்தக்க அளவு தேங்காய் ஒடு சுட்ட கரி, விராகனிடை 10, பனைவெல்லம் பலம் 10, தேங்காய் பழம்-10, பால் செல்லதக்க, அளவு ரசம் கெந்தகம் சேர்த்து அரைத்து கொள்ளவும். மற்ற 8 சரக்கையும் தனித்தனியாக பொடித்து எல்லாம் ஒன்றாய் சேர்த்து 2 ஜாமம் அரைத்து கை விடாமல் அரைக்கவும். பின்பு உத்தாமணி சாற்றில் 4 ஜாமம் அரைக்கவும். பின் தேங்காய் ஒடு சுட்டு வடிகட்டிய தூள் விராகனிடை 10 இதை அதோடு சிறுக சிறுக போட்டு அரைக்கவும். அந்த தூளெல்லாம் ஆன பின் வெல்லத்தை இடித்து சட்டியில் இட்டு ஜலம் கொஞ்சம் விட்டு கரைத்து வடிகட்டி கெட்டியாக காய்ச்சி இந்த பாவையும் கல்வத்தில் இருக்கும் மருந்துடன் சிறுக சிறுக விட்டு அரைக்க வேண்டும். அந்த பாகு கெல்லாம் ஆனபின் தேங்காய் பால் பிழிந்து வடிகட்டி ½ படியாக்கி குறையாமல் வைத்துக் கொண்டு மருந்தில் சிறுக சிறுக விட்டு அரைக்க வேண்டும் இந்த பால் எல்லாம் சென்றபின் வழித்து பிங்கானில் வைத்துக் கொண்டு இது கௌசிகர் மை என்ற பிரசித்தமான பேர் உண்டாகும். அரை குன்றி முதல் 3 குன்றி வரையிலும் கொடுக்கலாம். 3-குன்றிமணியே அதிகம். தேகத்திற்கு தகுந்தபடி 4 குன்றி வரையிலும் உபயோகிக்கலாம். பனை வெல்லம் வாழைப்பழம், வெண்ணெய், சுக்கு அரத்தை முதலியவைகளில் அநுபானமாய் கொடுக்க உபயோகம். வாதம்-80 பித்தம் -40, க்ஷயம், பல்வகை ஜுரங்கள், பலவகை ஜன்னி, 7-வகை தோஷம் அஷ்ட குன்மம், சூலே 18, சூரிய சம்பந்தமான வியாதிகளெல்லாம் போம். நல்ல பாம்பு விஷம், எலிக்கடி விஷம், சகல விஷம், நாய் விஷம், தேளீக்கடி விஷம் முதலியவைகள் தீரும். பத்தியம் வியாதிக்கு தக்கபடி வைத்துக கொள்ளவும்.

103. சூதக காலத்தில் காணும் வயிற்றின் வலிக்கு.

கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, மூங்கிலுப்பு, வகைக்கு விராகனிடை 1 இதை தூள் செய்து கலசத்திலிட்டு குக்குடபுடம் போடவும். இதை தூள் செய்து கல்வத்திலிட்டு திரிகடுகு, காயம் வகைக்கு விராகனிடை 1, உரித்த பூண்டு, விராகனிடை 4, இவைகளை கல்வத்திலிட்டு அரைத்து மெழுகாய் செய்து 5,6 நாள் கொடுக்கவும். வென்னீர் சாப்பிடவும். சூதக காலத்தில் ஏற்படும் வயிற்று வலி நின்று விடும்.

104. வெண் குஷ்டத்திற்கு.

கருஞ்சீரகம் பலம் 9, கார்போக அரிசி 3, ஊமத்தம் விதை விராகனிடை 3, எருக்கம் பருப்பு இலை 8, மிருந்தை சூரணித்து மேற்கண்ட பருப்பை சேர்த்து அரைத்து உருட்டிக் கொண்டு தண்ணீரில் உரைத்து பூசவும். மேற்கண்ட நிறம் மாறும்.

105. சந்திரபிரபா செந்தூரம்.

லிங்கம் விராகனிடை 5, இந்துப்பு விராகனிடை 5 இரண்டும் சேர்த்து அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு குன்றியிடை 2 வெல்லத்தில் வைத்து 2 நாள் 4 வேளை கொடுக்கவும். வேப்பங் கொழுந்தை அரைத்து சுக்கு 2 விராகனிடை சேர்த்து அரைத்து உருண்டையாக செய்து அதனுள் செந்தூரத்தை வைத்து சூதகமாகும் முன் இருந்து சூதகம் ஆகும் வரையில் கொடுக்கவும். மாதா மாதம் சூதக நிறம் பட்டுப் போகும். இந்தப்படி 3 தடவை கொடுக்க சூதகம் நிறம் பட்டுப் போகும். கர்ப்பம் உற்பத்தியாகும்.

106. சூதக வாயுவுக்கு பேய் குமட்டிக்காய் உப்பு.

பேய் குமட்டிக்காய் பங்கு 2 எருக்கன் பூ பங்கு 2 கனவு நீக்கி பிரண்டை ஒரு பங்கு கல்லுப்பு 5 பங்கு எல்லாம் சேர்த்து புது சட்டியில் இட்டு ஒடு மூடி சீலே செய்து அடுப்பில் வைத்து எரித்து 2 ஜாமம் ஆறவிட்டு எடுத்து தூள் செய்து வைத்துக் கொண்டு 3 விரல் கொண்டது வென்னீரில் போட்டு சாப்பிடவும். சூதகட்டு வலி, சூதகம், அதிகமாய்,

போகவும் நிறுத்தும். கட்டாயிருந்தால் உடைக்கும்.

107. குழந்தைகளுக்கு மாந்தப் பொடி அவிபுடம்.

சுத்தம் செய்த ஓமம் படி $\frac{1}{4}$, கெட்டியான ரட்டை மடிப்பு துணியில் பொட்டலம் கட்டி மேல் கயிறு தொங்க விட்டு தக்க எருவு முறித்துப் போட்டு நெருப்பு உண்டாக்கி நெருப்பை களைந்து நடுமையம் ஓமம் முடித்ததை வைத்து சுற்றிலும் நெருப்பைப் போட்டு அவிழ்வித்து விடவும். ஓமம் சிவந்து எடுத்து ஆறினவுடன் முடிச்சை அவிழ்த்து ஓமத்தை தூள் செய்து கொண்டு பெருங் சுக்கு 1 பலம் இதை தோல் நீக்கி உப்பை மோர் விட்டு அரைத்து தடவி சுட்டு அதையும் தூள் செய்து பெருங்காயம் பலம் 3 இதையும் சுட்டு தூள் செய்து எல்லாம் ஒன்றாய் கலந்து போட்டு வென்னீரில் கொடுக்கவும். சிறியவர் முதல் பெரியவர் வரை கொடுக்கலாம்.

108. சிரசில் உள்ள பித்தம் இறங்க தலைக்கு தயிலம்.

சந்தனம், நெல்லி வத்தல், பாசிப்பயிர் இவை மூன்றும் எலுமிச்சம் பழம் சாற்றில் அரைத்து சிரசில் தேய்த்து சாயந்திரம் முழுக வென்னீரில் முழுகவும்.

109. கர்ப்பிணிகள் வீக்கத்திற்கு கஷாயம்.

கண்டு திப்பிலி, மதுரம், சோம்பு வகைக்கு தோலா 1 கரியான் இலை, இவைகளை நறுக்கி அரைப்படி தன்னீரில் இட்டு அரைக்கால் படியாக காய்ச்சி வடி கட்டி தினம் 2 தடவை ஆக 4 நாள் சாப்பிடவும். மல ஜலம் கழிந்து வீக்கம் வாங்கும்.

110. சாம்பிராணி தைலம்.

பால் சாம்பிராணி பலம் 5, நெல் அரிசியில் பசை பலம் $2\frac{1}{4}$, குங்கிலியம் பலம் 1, இவைகளை தூள் செய்து குழம்பாய் வைத்து தைலம் இறக்கவும்.

111. சோகை பாண்டுக்கு மண்டூர செந்தூரம் பற்பம்.

சுத்தம் செய்த மண்டூரம் பலம் 1, கெந்தகம் பலம் 1, வெடியுப்பு பலம் 1, இந்த 3-ம் சேர்த்து தேன் கொடுக்கு இலை சாற்றில் 2 நாள் அரைத்து அப்படியே கல்வத்தில் வில்லை செய்து வைத்து ஒர் இரவு வைத்து மறு நாள் தூள் செய்து அப்படியே அமுக்கி வைத்து மறுபடியும் தூள் செய்து சீசாவில் வைத்துக் கொண்டு காசு வடை கொடுக்கவும்.

112. தாம்பிர மெழுகு. *இதில் உள்ள $\frac{1}{4}$ என்பது $2\frac{1}{4}$ சேர்க்க.

தாம்பர பொடி பலம் 5, ரசம் பலம் $\frac{1}{4}$, செந்தி உப்பு பலம் $\frac{1}{4}$, பூரம் பலம் $\frac{1}{4}$, வீரம் பலம் $\frac{1}{4}$, லிங்கம் பலம் $\frac{1}{4}$, வெடி உப்பு பலம் $\frac{1}{4}$, தாமரை பொடியை சுத்தி செய்து கொண்டு கடைசியில் பொடியை போட்டு கல்வத்தில் எலுமிச்சம் சாற்றில் அரைத்து மறுபடி சிறுக சிறுக அரைத்து எலுமிச்சங்காய் பீங்கானில் போட்டு அது மிதக்க எலுமிச்சம் பழ சாறு விட்டு கலக்கி வைக்கவும். வெய்யிலில் வைக்கவும். ஒவ்வொரு நாளும் பச்சை நிறம் உள்ள நீரை இருத்து விட்டு வேறு ரசம் விட்டு முன் மாதிரி இருத்து விடவும். இவ்விதம் ஒவ்வொரு நாளும் ரசம் விட்டு கலக்கி வெய்யிலில் ஆக பலம் 50 ஆக வேண்டும். ஆக 50 ஆனபின் நீல நிறம் மாறிய உடன் எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக் கொண்டு மிளகு பிரமாணம் அநுபானத்தில் சகல ரோகத்துக்கும் தாம்பிர மெழுகு எந்த வியாதிக்கு ஆகுமோ அந்த அநுபானங்களில் கொடுக்கவும்.

113. பாசன சுத்தி.

வெள்ளாட்டு புழுக்கை, சவுக்காரம், மிளகு, கோழிமுட்டை, வெள் கருவு, எருக்கன் பால் சேர்த்து அரைத்து கவசம் செய்து சட்டியில் உவர் மண் கரைத்து வைத்து எரிக்க சுத்தி ஆகும்.

114. இருமலுக்கும், ரத்த விருத்திக்கும் கோதுமை அல்வா.

கால் படி கோதுமை அரிசியை, ராத்திரிக்கு ஊர வைத்து ஆட்டிப் பிழிந்து பாலை எடுத்து ஜலத்தை எடுத்து விட்டு சீனி சேர்த்து விட்டு கிண்டி நெய் தக்கபடி விட்டு கிண்டி வைத்துக் கொண்டு தினம் புன்னைக் காயளவு சாப்பிடவும்.

115. இரத்தம் போல் நீர் இறங்குதலுக்கு.

எருமை பால் படி 2, பொன்னாங்கண்ணி வேர், எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டு கலக்கி காய்ச்சி புறை குத்தி கடைந்து வெண்ணெய் எடுத்து அந்த வெண்ணையை அதி காலையில் 3 நாள் சாப்பிடவும். அந்த மோரை தாக சாந்தி செய்யுமிவும்.

116. கணுக்கால் வலிக்கு ரசம்.

சுக்கு ஒரு அவுன்ஸ் வாங்கி மேல் தோல் போக்கி அதை 3 பாகம் செய்து ஒரு பாகத்தை நெய் விட்டு வருத்து ரசம் செய்வதோடு சேர்த்து அரைத்து ரசம் செய்து சாத்தில் விட்டு அதோடு வேளைக்கு ½ வீசம் படி நெய் விட்டு சாப்பிடவும். இந்த படி 3 நாள் ஒவ்வொரு வேளையாக 3 வேளை சாப்பிடவும்.

117. பூரக் கட்டு.

பூரம் பலம் 1, இதை முலைப் பாலில் ஊரப் போட்டு பிரமந் தண்டு இலையை அரைத்து சிறு கலையத்தில பாதி அமுக்கி நடுவில் பூரக் கட்டியை வைத்து மேலும் தலையை வைத்து அமுக்கி ஓடு செய்து சீலை செய்து ஒரு குண்டு சட்டி நடுவில் வைத்து மேல் சட்டி மூடி சீலை செய்து ஒரு முறம் புளியம்பட்டையால் எரித்து விட்டு ஆறி எடுக்க கட்டும். அதை தூள் செய்து அநுபானங்களில் அரிசியெடை கொடுக்க வெள்ளை, வெட்டை, நீர் சுருக்கு இவைகள் தீரும். சூலை கிரந்தி இவைகள் தீரும்.

118. பலஉறீனங்களுக்கு மாத்திரை.

சுத்தி செய்த ரசம், கெந்தகம், எட்டிக் கொட்டை சூரணம் விராகனிடை 8, எலுமிச்சம் பழ சாற்றில் அரைத்து குன்றி போல் உருட்டி 1, 2 வீதம் மிளகு பொடியிலும் நெய்யிலும் கூட்டி உட்கொள்ளவும். சகல வாத ரோகம், நரம்புகளுக்கு பலம் தரும். சுரத்தினால் ஏற்படும் பலஉறீனத்தையும் பச்சை வாதத்தில் ஏற்படும் பலஉறீனத்தையும் போக்கும்.

119. நரம்பை பற்றிய ரோகங்களுக்கு மாத்திரை.

எட்டிக் கொட்டை அபின், மிளகு, சமன் கூட்டி வெற்றிலை சாற்றில் அரைத்து உருட்டி வைத்துக் கொண்டு வெற்றிலையில் வைத்து சுருட்டி உட் கொள்ள நரம்பை பற்றிய ரோகங்களை கண்டித்து பலம் கொடுக்கும்.

120. வாதாதி ரசம்.

ரசம் விராகனிடை 3, கெந்தி விராகனிடை 3, திரிபலை விராகனிடை 9, சித்திர மூலப் பட்டை விராகனிடை 12, குக்கல் சுத்தி செய்தது விராகனிடை 15 கூட்டி அரைத்து சுண்டைக்காளயவு உருட்டி உருண்டை செய்து உட்கொள்ள கீழ்வாய்வு, பாரிச வாயுவு, முதலான ரோகங்கள் தீரும். சுக்கு கஷாயம் அநுபானம் மேற்கண்ட சரக்கை நன்றாய் அரைத்து பக்குவம் செய்து விளக்கெண்ணெய் விட்டு நன்றாய் மெழுகு போல் அரைத்துக் கொள்ளவும். இந்த சரக்குகளை யெல்லாம் சுக்கு கஷாயத்தில் சுத்தி செய்யவும். தொலா எந்திரத்தில் கட்டி எரித்து சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும்.

121. குஷ்டம். படைகளுக்கு தாம்பர உருண்டை.

குஷ்டம் படைகளுக்கு கெந்தகத்தால் நிதித்த தாம்பரம் பற்பம் பத்து பங்கு, திரிகடுகு, ஐந்து பங்கு, நாவி இரண்டு பங்கு கூட்டி தேன் விட்டு அரைத்து குன்றி போல் உருட்டி உட் கொள்ளவும்.

122. பாண்டு ஜீர ரசம்.

ரசம், கெந்தகம், தாம்பரபற்பம், வாளம், சிக்கில் சமன் கூட்டி நெய் கூட்டி

அரைத்து குன்றி அளவு உருட்டி, வேப்பம் பட்டை கஷாயத்தில் கொடுக்க பாண்டு, சோகை, சோகை, காமாலை, வீக்கம் தீரும். குளிர்ந்த ஜலம், புளி ஆகாது.

123. கருப்புக்கு எண்ணெய்.

நல்லெண்ணெய் படி ½, சித்திர மூலப் பட்டை பலம் 1 அரைத்துப் போட்டு கலக்கி வெய்யிலில் வைத்துக் கொண்டு கையில் உள்ளங் கையில் 1 மண்டலம் தேய்த்து வர கை கருப்பு குஷ்டம் தீரும்.

124. நீலகண்ட ரச செந்தூரம்.

நவாச்சாரம் பலம் 2, தருசு பலம் 4, வெடி உப்பு பலம் 1, கறி உப்பு பலம் 1 வெங்காரம் பலம் 1, சுத்தி செய்த ரசம் பலம் 2, கோவை இலை சார் படி முக்கால் செய்முறை உப்புகளை எல்லாம் ஒன்றாய் சேர்க்காமல், தனித்தனி பொடித்து எல்லாம் ஒன்றாய் சேர்த்து பிறகு தருசை சேர்த்து அரைத்து கொண்டு இருந்தால் கோவை இலை சாற்றில் அரைத்து தனியே வழித்துக் கொள்ளவும். அதில் கொஞ்சம் எடுத்து ஒரு இருப்பு சட்டியை சுத்தமாக தேய்த்து அதில் கொஞ்சம் போட்டு அதில் ரசத்தையும் விட்டு அடுப்பு எரித்து சிறு தீயாக எரித்து அய கரண்டியின் பின்புறமாக தேய்த்து வரவேண்டும். சாறு சுண்டின உடன் ரசத்தை துணியில் கொட்டி பிழிந்து கெட்டியாக இருப்பதை எடுத்துக் கொள்ளவும். திரவமாய் இருக்கும் ரசத்தை சட்டியில் விட்டு மேற்கண்ட கோவையிலை ரசத்தை கொஞ்சமாக விட்டு முன் போல் எரித்து கரண்டியின் பின்புறம் தேய்த்துக் கொண்டு ரசம் எ எல்லாம் ஒட்டினவுடன், துணியில் கொட்டி ரசத்தை பிழிந்து கெட்டியாய் இருப்பதை யெல்லாம் எடுத்து இவ்விதம் செய்து வந்தால் ரச மெல்லாம் நொடியாகிவிடும். அல்லது கெட்டியாகி விடும். இதை சுண்டைக்காயளவு பிரமாணம் உருட்டிக் கொள்ள வேண்டும். நஜ இலையை அரைத்து ஒரு விளாம்பழம் பெருமன் எடுத்து இதற்குள் மேற்கண்ட உருண்டையை வைத்து உருட்டி அதின் மேல் 3 சீலைமண் செய்து உணர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் எல்லா உருண்டைகளையும் சுத்தப்படுத்திக் கொண்டு இவ்விதம் தயாரித்த உருண்டைகளை தனித்தனி கவசம் செய்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஒன்றையும் தனித்தனியாக கவசத்தின் இரண்டு பங்கு இடை விரட்டியில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு ஆறிய பின் எடுத்து எல்லாம் ஒன்றாக சேர்த்து எலுமிச்சம் பழ ரசத்தை விட்டு இரண்டு ஜாமம் அரைத்து சிறு வில்லைகளாக செய்து ஒட்டிவிட்டு காய வைத்து ஒடு மூடி சீலை செய்து சிறு புடம் இடவும். இது சிவக்கிற வரையிலும் அரைத்து அரைத்து வில்லை செய்து முன் போல் புடம் இடவும். சிவந்த பின் எடுத்து சீசாவில் வைக்கவும். 1-1½ குன்றியிடை தேன், நெய் வெண்ணெய், முதலிய அநுபானங்களிலும் கொடுக்க மேகம், கிரந்தி, சூலை, குஷ்டம். முதலிய அனேக ரோகம் தீரும். பத்தியம் வியாதிக்கு தக்கபடி வைக்கவும். இது ரச வாத முறைக்கு உபயோகப்படும். சகல மேக ரோகத்திற்கும் தரலாம்.

125. கருவங்க சுன்னம்.

சுத்தி செய்த கருவங்கம் பலம் 1, ரசம் பலம் 1, மயில் துத்தம் அதற்கு சமன் சேர்த்து சேர்த்து மொசு மொசுக்கை இலை சாற்றை விட்டு நன்றாய் அரைத்து சிறு வில்லைகளாய் செய்து முழப்புடம் போட சுன்னம். அநுபானம் மூலமாக கொடுக்க அநேக ரோகம் தீரும்.

126. சந்திராமிர்த ரசம்.

திரிகடுகு, திரிபலை, செவியம், மல்லிகை, சீரகம், இந்துப்பு, வகைக்கு தோலா 1, ரசம் கெந்தகம், லோக செந்தூரம் வகைக்கு தோலா 2, மிளகு தோலா 4, பொரித்த வெங்காரம் தோலா 8 சூரணித்த கூட்டி ஆடாதோடை ரசத்தால் ஆட்டி குன்றி அளவு* போல் உருட்டி 1, 3 வரையிலும் இஞ்சிச் சாறு, தேன், திப்பிலி பொடி, ஆடா தோடை சுரசம், வெள்ளாட்டுப் பால், முதலிய அநுபானங்களில் கொடுக்க, ஈளை இருமல் காசம் சுவாச காசம் க்ஷயம், சுரம் தீரும்.

Sry

127. சுவாசக் குடோரி.

ரசகம், கெந்தகம், மனோசிலை, நாவி, பொரித்த வெங்காரம், திரிடுகு, இவ்வெட்டுங் கட்டி சூரணித்து வைத்துக் கொண்டு 8 ஜாமம் அரைத்து வைத்துக் கொள்ளவும். சன்னி பாத சுரம், கபவாத சுரம், தோஷ சுரம், கபஜீரம், பித் சீதள ஜீரம், சகல வியாதிகளுக்கு அரை குன்றி முதல் 1 குன்றி வரையில் தேனில், அனுபானமாக கொடுக்கவும். அவைகள் அதி சீக்கிரம் குணமாகும். இதை நசியம் செய்யவும். புகை பிடிக்கவும். உபயோகிக்கலாம். இதை ஜன்னி பாத வைரவன் என்று சொல்லுவார்கள். இது எடை வித்தியாசத்தால் சிவ ராம ரசம் எனவும் சுவாசக் ~~கொருசி~~ (குடோரி) எனவும் சொல்லுவார்கள்.

128. சுவாச காசத்திற்கு மாத்திரை.

வெள்ளெருக்கன், வேர் பட்டை மிளகு சமன் கூட்டி வெற்றிலை சார் அல்லது இஞ்சி சாற்றில் அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்து வைத்துக் கொண்டு வெற்றிலை சார் இஞ்சி சார் இவைகளில் கொடுக்க சுவாச காசம் சுரம் இவைகள் நீங்கும். எருக்கன் புஷ்பத்தையும் உபயோகிக்கலாம்.

129. இருதய வலி உப்பிசம் இவைகளுக்கு மாத்திரை.

மருதம் பட்டை, திரிகடுகு, திரி சாதம், திப்பிலி மூலம், இவைகளை சமனாய் கூட்டி இஞ்சி சாற்றில் அரைத்து உருண்டை செய்து மேற்கண்ட சாற்றில் கொடுக்க மேற்கண்ட வியாதிகள் நீங்கும்.

130. சுடர் தைலம் (ஜன்னிக்கு).

குதிரை குளம்பு சீவின சுள், எருமை கொம்பு, சீவின பொடி வசம்பு, மயில் இறகு, பூண்டு, பெருங்காயம், அரிதாரம், லிங்கம், மனோசிலை, சாம்பிராணி, சூடம், ரசம், கெந்தி வகைக்கு விராகனிடை 1, வேப்பெண்ணெய் படி ¼ மேற்கண்ட எண்ணையை விட்டு அரைத்துக் கொண்டு துணியில் எருக்கன் பால் கொடிக் கள்ளிப்பால், திருகு கள்ளிப் பால், 3-ம் சேர்த்து நனைத்து உலர்த்திய துணியில் முன் அரைத்த மருந்தை தடவி முன் கொம்பு குளம்பு மயில் இறகு வசம்பு இந்த 4-யும் பஞ்சு போல் பொடி செய்து அந்த துணியில் பரப்பி திரி செய்து மேல் பால் அடித்து காய வைத்து கருது கம்பியில் கோர்த்து எண்ணையை ஓர் பாத்திரத்தில் வைத்துக் கொண்டு பந்தத்தை ~~நனைத்து~~ (கொளுத்து) சுடர் தைலம் இறக்கவும். இறக்கி வைத்துக் கொண்டு ஜன்னிக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை உபயோகிக்கலாம்..

131. ஜன்னிக்கு (13) வேறு வித தைலம்.

நொச்சிச் சார், முடக்கத்தான் வேர், வேலிப்பருத்தி சார், விழும்பிச்சார், தனிதலைச் சார், எருக்கன் பருப்பு சார், பெருமரத்து இலைச்சார், மாவுலிங்கம் இலைச் சார், குப்பை மேனி இலை சார், வகைக்கு படி 1 சித்திர மூலப் பட்டை பலம் 8, செங்கத்தாரி பட்டை பலம் 2, இந்த 2-ம் இடித்து பானையில் போட்டு இரண்டு வள்ள தண்ணீர் விட்டு 1 படியாக் காய்ச்சி பெரிய பானையில் விட்டு அதில், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், புங்கஎண்ணெய், வேப்பெண்ணெய், பசு நெய், எருமைப் பால் வகைக்கு படி 1 முன் கஷாயத்தையும் விட்டு கொதி யெழும்பிய பின் பக்குவத்தில் சரக்கு வகை :- கடுகு, வாய் விளங்கம், வசம்பு, கடுகு ரோகணி, பால் சாம்பிராணி பலம் 1 சதகுப்பை பலம் 1, திப்பிலி பலம் 1, பூண்டு பலம் 1, கஸ்தூரி மஞ்சள் பலம் 1, வேப்பம் பிசின் பலம் 1, இவைகளை இடித்து எண்ணெயில் போட்டு கிளரி மெழுகு பதத்தில் அதிகமாய் அனல் பத்தாமல் நிதானமாய் விநாயகர் பூசை செய்து வடித்து வைத்துக் கொள்ளவும். காலை, மாலை தட்டை எடை வீதம் உள்ளுக்கு கொடுக்க மேலுக்கும் தேய்த்துக் கொண்டு சாயங்காலம் ஒரு முடாவில் தண்ணீர் விட்டு கொண்டு அதில் மலை வேப்பன் இலை. வேலி பருத்தியிலை, முடக்கத்தான் இலை, தரிதாழை இலை வகைக்கு ஒரு சித்து முடாவில் போட்டு காய்ச்சி விட்டு பக்குவத்தில் இறக்கி மேலுக்கும் உசிலம்பட்டைய அரைத்து சரீரமெல்லாம் தேய்த்து தண்ணீர் விடவும். இக்காலத்தில் முன் எண்ணெய்க்கு கடுகை முன்னைக் காயளவு எடுத்து தலையில் போட்டு முக்காடிட்டு புகை

பிடிக்கவும். சரீரத்தில் வேர்வை உண்டாகும்படி செய்து மெல்லிய துணியில் துடைத்து விடவும். இந்த படி 6,8,12 நாள் செய்யவும். பத்தியம் முருங்கை இலையும், குப்ப மேனியிலையும். சமன் போட்டு அதில் உப்பை போட்டு வருத்த துவரம் பருப்பு, கத்திரி பிஞ்சு, பசு மோர் நெய் மிளகாய் கடுகு மஞ்சள், பூண்டு சீரகம், மல்லிகை இவையெல்லாம் சேர்த்துக் கொள்ளலாம். வென்னீர் சேர்த்துக் கொள்ளவும்.

27.8.62. 132. கெந்தக மெழுகு.

சுத்தி செய்த கெந்தகம் பலம் 1, பூரம் விராகனிடை 2, வெங்காரம் விராகனிடை 3, வங்கம் விராகனிடை 1 ஒரு ஜாமம் அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு ஆட்டாம் புழுக்கையளவு பிரமாணம் காலை, மாலை இரு வேளை ½ மண்டலம் கொடுக்கவும். ஊரல், தடிப்பு வெள்ளைத் தீரும் இச்சா பத்தியம்.

133. கருவங்க் செந்தூரம்.

சுத்தி செய்த கருவங்கம் பலம் 8 இவற்றை ஒரு பாண்டத்திலிட்டு உருக்கு முகத்தில் வீரம், பூரம், நவாசாரம், கெந்கம், படிக்காரம் வகைக்கு களஞ்சு 1, இதையெல்லாம் தனித்தனியாக கிரமமாய் உருக்கு முகத்தில் கொடுக்கவும். இரும்பு கம்பியில் கிளறவும். பிறகு சிறுகீரை வேர் துண்டு செய்து போட்டு வருக்கவும். 4-ஜாமம் வருக்கவும். 3-ஜாமம் மஞ்சள் வர்ணம் வரும், 4-ம் ஜாமம் வருக்க செந்தூரம் ஆகும். தேன், வெண்ணெய் முதலான அநுபானங்களில் கொடுக்க மேக சம்பந்தமான வியாதிய தீரும்.

134. சிரங்கு, சொரி கை கால் எரிவுக்கு.

வெடி உப்பு, சுண்ணம்பு, கரியுப்பு, பசு வெண்ணெயில் அரைத்து பூசவும். 3,4 நாள் பூசவும். மேற்கண்ட ரோகம் தீரும்.

135. பூ நீர் செய நீர்.

சுத்தியான பூ நீர் படி ½, தண்ணீர் படி ½, இரண்டையுங் கலந்து 12 மணி நேரம் வைத்து வடி கட்டி தெளிவை எடுத்து சீசாவில் வைக்கவும். உபயோகம் 1 பழம் எலுமிச்சம் ரசத்தில் இரண்டு விராகனிடை மேற்கண்ட செயநீர் விட்டு அது பொங்கும். அதை உடனே சாப்பிடவும். இவ்விதம் செய்தால் வயிற்று வலி உடனே தீரும். குன்ம ரோகம், மந்தாக்கினியென்னும் உதக வயிற்று வலி உடனே தீரும்.

136. மேக வியாதிக்கு செந்தூரம்.

வீரம், பூரம் லிங்கம், ரச செந்தூரம், ரசம் வகைக்கு விராகனிடை 1½, இதை கல்வத்திலிட்டு நன்றாய் சுத்தி செய்து கொண்டு கெந்தி சுத்தத விராகனிடை 5, இதை தூள் செய்து வைத்துக் கொண்டு ஒரு கோழி முட்டையை பொத்து எல்லாம் ஊத்தி விட்டு அதில் கெந்தி தூள் செய்ததை போட்டு ஒரு கட்ட சட்டியில் மணல் போட்டு அதில் முட்டையை பதிய வைத்து எரிவிட்டு மேற்கண்ட சரக்கு உருகும் போது மேற்கண்ட தூளை அதில் போட்டு கம்பியால் கிளரி, அது சிவந்த பதத்தில் எடுத்து சார் செய்து அநுபானத்தில் வைத்து சாப்பிட மேற்கண்ட வியாதி தீரும்.

137. அயச் செந்தூரம், காமாலை லேகியம்.

அயச் செந்தூரம் பலம் 1, திங்கிப்பு பலம் 2, திப்பிலி பலம் 2, சீந் கற்கண்டு பலம் 2, திபதிராக்ஷை பலம் 10, பேரிச்சம் பழம் பலம் 1, கொட்டை நீக்கி எல்லாம் சுத்தி செய்து தனித்தனி சூரணம் செய்து கொண்டு முந்திரி பழத்தை நன்றாய் அரைத்துக் கொண்டு பேரிச்சம் பழத்தையும் மறைத்து எல்லாம் ஒன்றாய் கலந்து நெய் படி ¼ விட்டு லேகியம் போல் செய்து வைத்துக் கொண்டு கலச்சக் காயளவு சாப்பிடவும். அக்னி மந்தம். காமாலை இவைகள் தீரும்.

138. அரையாப்பு கட்டிக்கு பத்து.

கட்டிக்கு அளவாய் செங் கொட்டை பாலை நனைத்து இரவில் படுத்துக் கொள்ளும்

படுத்துக் கொள்ளும் பொழுது அந்த துணியை கட்டியின் மேல் போட்டு அதற்கு ஆதாரவாய் தேன் மெழுகை வில்லை செய்து வைத்து அதன் மேல் வாழை குருத்து இலையை அளவாய் கத்தரித்து மெழுகின் மேல் வைத்து கட்டி விடவும். மறுநாள் அவிழ்த்து விடவும். கட்டி கொப்பளித்து நீர் வடிந்து விடும். மறுபடி ஆத்தும் படியான மருந்துகளை போட்டு புண்ணை ஆற்றி விடவும்.

139. கட்டு வாதி மாத்திரை.

அபின், ஜாதிக்காய், லவுங்கம், லிங்கம் இவைகள் சமன் கூட்டி சுத்த ஜலத்திலரைத்து குன்றி போல் உருட்டி நிரை காரத்தில் கொடுக்க சீத பேதி, இரத்த பேதி வாந்தி பேதி இவைகள் குணமுண்டாகும்.

140. சிவனார் வேம்பு சூர்ணம்.

சிவனார் வேம்பு சமூலத்தை இடித்து வடி கட்டி சீனி கலந்து வைத்துக் கொண்டு குஷ்டம் 18, அந்தி சந்தி சாப்பிட குஷ்டம் மேகம் இவைகள் தீரும்.

141. வெண்குஷ்டத்திற்கு எண்ணெய் தைலம்.

சித்தா மணக்கெண்ணெய் படி 1, பட்டிக் கொட்டை பலம் 8, வெள்ளருகு வேர், இடித்தது பலம் 8, இந்த மூன்றும் கலக்கி கூட்டி கடுக்காய் பலம் 8, தண்ணீரில் இட்டு ஒரு படியாக காய்ச்சி வடி கட்டி எண்ணெய் கிஷாயம் எல்லாம் சேர்த்து மெழுகு பதமாய் காய்ச்சி வடித்து 8 நாளைக்கு ஒரு தரம் மேலே தடவவும். 8 நாளைக்கு 1 தரம் விளக்கெண்ணெய் பேதிக்கு சாப்பிடவும். மேற்கண்ட மருந்தை தினமும் சாப்பிடவும்.

142. பிரூய் மூலம் உசிதம்,

பிரு மத்து வேர் பட்டையை இடித்து வடி கட்டிக் கொண்டு பாலில்சாப்பிட வெண் குஷ்டம், கருங் குஷ்டம், விஷத்தால் உண்டாக் குஷ்டம் நீங்கி சிருய் போல் உடம்பில் உண்டாகும். கறசுறப்பு 18 வகை வண்டு கடி தீரும்.

143: உதட்டு வெள்ளைக்கு.

தூதவளை இலையும், காயும், சீனக்காரம், சமன் சேர்த்து அரைத்துக் கொண்டு மாத்திரை செய்து கொண்டு முலைப் பாலில் கலந்து பசுவின் பால் விட்டு உரைத்து தடவ உதட்டு வெள்ளை நீங்கும்.

144.

பிரமியை வேரோடு பிடுங்கி அலம்பி இடித்து தலை வடிகட்டின் சார் படி 1 பாண்டத்திலிட்டு எரித்து பதமாய் எடுத்து தங்க ரேக்கு, விராகனிடை 1, அல்லத் ரேக்கு பலம் 2, அல்லது வெள்ளி ரேக்கு அதில் போட்டு கரைத்த பின் கிளரி கீழே இறக்கி வைத்து நெய்யை ஆற வைத்து பதம் மீராமல் இறக்கவும்: அதில் மிளகு சுக்கு, மஞ்சள், கடுக்காய் நெல்லி வத்தல் தானிக்காய், தோல் இவற்றின் தோல் விராகனிடை 12, இடித்து வடி கட்டி இதில் தூவி கலந்து நீரில்லாமல் கலந்து மெழுகு பதமாக செய்து கொண்டு பாக்கு அளவு சாப்பிடவும். கற்பம் இல்லாமல் யாதொரு காரணத்தால் சத்தியற்ற காரணம் இல்லாமல் இருக்கும் ஸ்திரிகள் தாகம் சோம்பல், தேகத்தை சுமக்க வலி உபத்திரவங்களோடு, இருக்கும் பெண்களுக்கு சரீரம் இளைத்தும் சோகை போல் இருக்கும். பெண்களுக்கும் மற்றும் அநேக பெண்கள் உடம்பு துடித்து அடிக்கடி தலை நோய் உடம்பு வலி ஏற்பட்டுக் கொண்டு இருப்பவும். இன்னும் அநேக ரோகம் இருந்தாலும் இதை சாப்பிட சாப்பிட உடம்பு தேறி குழந்தை உண்டாகும். ஆறு மாதம் வரை சாப்பிடவும். இன்னும் அநேக ரோகம் தீரும், வெள்ளை, வெட்டை உறஸ்திரோகம் தீரும்.

145. பாசாணக் கட்டு.

பிரண்டையை சுத்தி செய்து இடித்து வடி கட்டி எடைக்கு எடை வெடி உப்பு சேர்த்து சிறு குடுவையில் வைத்து சீலை செய்து முமப்புடம் போட சுன்னம் ஆகும். அந்த சுன்னத்தை திருகு கள்ளி பாலில் போட்டு வைக்க தெளியும். அந்த தெளிவை பாஷாண கட்டிக்கு 4 ஜாமம் அருக்கு கொடுக்க கட்டும்.

146. கக்குவாய் இருமலுக்கு.

1 முட்டை வெள்ளை கருவும் பாலும் வைத்து மிளகு பொடி சிட்டிகை போட்டு குலுக்கி 3 நாள் 6 வேளை கொடுக்க கக்குவாய் தீரும்.

147. மூலங்கருக்கு மெழுகு.

கடுக்காய், கடுகு, இந்துப்பு, பெருங்காயம், வெங்காரம் மனோசிலை, சூதம், திப்பிலி, கருஞ்சீரகம், அரிதாரம், கருநாவி, கடுகு ரோகணி, ஆக பலம் 2, வாளம் சமன் சேர்த்து வேலிப் பருத்தி சாத்தில் 3 நாள் அரைத்து தேங்காய் தொட்டி கரி விராகனிடை 5, அதை சேர்த்து அரைத்து தேங்காய் பாலில் 4 நாள் அரைத்துக் கொண்டு பணவிடை சகல வியாதிக்கும் கொடுக்கலாம். தக்க அநுபானத்தில் கொடுக்கவும். விளக்கெண்ணெயில் குழைத்த. துணியில் தடவி திரி செய்து மூலம் புரைசருக்கு அனல் காட்ட ரணம் ஆறும்.

148. பெரும் பாட்டுக்கு.

வாழைப் பழத்தை உரித்து அத்திப் பட்டை அல்லது மாப்பட்டையை இடித்து தூள் செய்து ஒரு பலம் வாழைப் பழத்துடன் பிசைந்து சார் பிழிந்து படிக்காரத்தை 4,5 குன்றி எடை போட்டு கலந்து கொடுக்க 3 வேளையில் தவறாமல் குணமாகும்.

147. மண்டூர மாத்திரை

புங்கம் பட்டை, தேவதாரு பட்டை, கறி மஞ்சள், மர மஞ்சள், லவுங்கப்பட்டை, வால் மிளகு, சித்திர மூலப் பட்டை, கோரை கிழங்கு, செவ்வியம், கடுக்காய், நெல்லி வத்தல், தான்றிக்காய், திரிகடுகு, வகைக்கு பலம் ½, சுத்தி செய்த மண்டூரம் பலம் 7½, கோமயம் படி 3, பழைய சட்டியில் கோமயத்தை விட்டு பகையாமல் கொஞ்சம் கொஞ்சமாக எரித்து பொங்காமல் எரித்து சுண்ட வைத்து குழம்பு போல் காய்ச்சி சுண்ட வைத்து பக்குவத்தில் சூரணத்தைப் போட்டு ~~[illegible]~~ கிண்டி கிளறிவுடன் எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து பதமில்லா விட்டால் கோமயத்தை கூட்டி நன்றாய் அரைத்து குன்றி பிரமாணம் உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு இந்த மாத்திரையை காலை, மாலை ஒரு மாத்திரையாக சாப்பிட்டு வர இரண்டு மணிக்கு ஒரு தரம் மோர் சாதம் சாப்பிடவும். பிறகு வேண்டியதை உண்ணலாம். இதனால். ஈரல், வீக்கம், காமாலை, பாண்டு, சுபவாதம். மூல ரோகம், சுரம் முதலியன தீரும். இரத்தத்தை சுத்தி செய்து இரத்தை பெருக்கி சரீர அழகு உண்டாகுக்கும். ½, 1 மண்டலம் சாப்பிடவும். மோர் அன்னம் சாப்பிடலாம். புளியை நீக்கவும்.

150. தாளக பற்பம்.

தாளக கட்டி சுத்தி செய்த விராகனிடை 3½ தூள் செய்த கலச்சை பருப்பு, விராகனிடை 3½, சீனக் காரத்தூள் விராகனிடை 3½, சிறு அகலில் கலச்சக்காய் தூள் பாதி பரப்பி, அதுக்கு மேல் சீனக்கார தூள் பாதி பரப்பி, அதுக்கு மேல் தாளகத்தை வைத்து, அதின் பேரில் பாதி சீனக்கார தூள் போட்டு அதன் மேல் கலச்சப் பருப்பு தூள் போட்டு மூடி மேல் ஒரு மூடி சீலை செய்து உணர்த்தி வீசை நாட்டு எருவால் புடம் இடவும். பற்பம் ஆகும். அரிசியெடை வெண்ணெய், வெற்றிலை கஷாயம், ரோகத்துக்கு தக்க அநுபானத்திலும் 1 முதல் ½ அரிசியெடை வரையில் கொடுக்கலாம். குஷ்டம். நாள் பட்ட கிரந்தி, இரத்தக் கொதிப்பால் உள்ள மலபந்த வியாதி தீரும்.

151. கள்ளி பற்பம்.

சதுரக் கள்ளிப் பால் 1, புளிய இலைச் சார் ஆழாக்கு ½, ஆவரை இலை சார் ஆழாக்கு ½, இவை யெல்லாம் கல்யத்திலிட்டு உலர்த்தி காய வைத்து அடுப்பில் வைத்து அடி வெளுத்த பின் நிறுத்தி ஆறிய பின் எடுக்க வெண்மையாய் இருக்கும் அல்லது நவாசாரத்தை 5 பங்கு சேர்த்து புடம் போட பற்பமாய் இருக்கும். இந்த பற்பம் விராகனிடை 1, அரை

அரைக்கால் படி சித்தாமணக்கெண்ணெயில் கலந்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். சிறவர் களுக்கு ½ விராகனிடை 1 விராகனிடை முலைப்பாலில் கலந்து கொடுக்கவும். பெரியவர் களுக்கு 1,2 விராகனிடை வரையிலும் கொம்பு தேனும் இஞ்சிசாறும் கலந்து கொடுக்கவும். வயிற்றில் உள்ள நாக்கு பூச்சி நட்டைப் பூச்சி கிருமி எல்லாம் எல்லா வகை கிருமிகளும் நாசமாகும். கிருமி சம்பந்தமான குன்மம் வயிற்று வலி, இருப்பு மாந்தம் வாய்வு பிறவி வாய்வு தீரும்.

152. சிவனார் வேம்பு சூரணம்.

சிவனார் வேம்பு சமூலம் சூரணம் சிறு குறிஞ்சா வேர் பட்டை, சங்கங் குப்பி, இலை, வெள்ளருகு சமூலம் கரியான் மூலம் செங்கந் தாறிப் பட்டை சங்கம் வேர் பட்டை இவைகளை தனித்தனி இடித்த சூரணம் பலம் 1, சுத்தி செய்த பரங்கிப்பட்டை சூரணம் பலம் 8, எல்லாம் ஒன்றாய் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து வைத்துக் கொண்டு 1 விராகனிடை எடுத்து சர்க்கரைநெய், தேன், சிவனார் வேம்பு தைலம் இவைகளில் சாப்பிட மேகப் புண், குலைக் கட்டு, மேக ஊரல், மேக வெள்ளை தீரும்.

153. கற்பூர சூரணம்.

சாதிக்காய், ஏலம், கிராம்பு, மிளகு, வகைக்கு பலம் 1 கற்பூரம் பலம் 2, இவைகளை சூரணித்து சீனி பலம் 1 சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு காலை, மாலை 10 நாள் சாப்பிட குடல் இரைச்சல், பசி மந்தம், புளித் தேப்பம் மாரடைப்பு தீரும்.

152. வெள்ளை பாஷாண கட்டு.

~~சகல சுரத்துக்கும்.~~ வெள்ளை பாஷாணம் சுத்தி செய்தது பலம் 1, காட்டுக் கொட்டை பருப்பு எடுத்து அரைத்து கவசம் செய்து கொண்டு அதுக்கு தக்க முத்தின தேங்காயை எடுத்து உடைத்து தண்ணீர் ஊற்றி விட்டு அதுக்குள் கவசத்தை கெட்டியாய் வைத்து தக்க கவசம் செய்து கெட்டியாய் வைத்து மேல் மூடி மேல் மூடி நகராமல் சரியாய் நன்றாய் கட்டி நன்றாய் காய் பொருந்தும்படி சீலை மண் செய்து மேல் ஏழு சீலை மண் செய்து 30, 40 எருவில் புடம் வைத்து எரித்த பின் எடுத்து மூடியை எடுத்து அரைத்து வைத்துக் கொண்டு ½ அரிசி எடை அல்லது ¼ அரிசியெடை தேன், முலைப் பாலில் கொடுக்க சகல சுரமும் மலக்கட்டும், பெரு வியாதியும் தீரும்.

155. கெந்தக பற்பம்.

கெந்தகம் பலம் கெந்தகத்தை பாலில் 3 தரம் சுத்தி செய்தது பலம் 1, மருதம் பட்டை சாம்பலில் வைத்து எரித்து கழுதை மூத்திரம் படி 1, கெந்தி கூட்டினது பலம் 4 விட்டு கண்ட எரித்து அலம்பி நந்தி யாவட்ட இலையை அரைத்து தேங்காய் அளவு கவசம் செய்து 7 சீலை மண் செய்து காய வைத்து புடம் போடவும். 30 எருவில் புடம் போடவும். சிட்டிகை வெண்ணெயில் சாப்பிட 12 நாள் சாப்பிட புளி, புகையிலை கூடாது.

156. குலைக்கு கேசரி.

ரசம், நாவி, கெந்தி பலகரை, வெங்காரம் இந்துப்பு சுக்கு இவை இரண்டும் திப்பிலி இவைகளை சமன் எடை வைத்து வெற்றிலை சாற்றில் அரைத்து 2 குன்றியிடை சாப்பிட சகல குலையும் நிவர்த்தி ஆகும்.

157. குஷ்டம் 18-க்கும்.

எட்டி விதை மேற்கண்டபட்டை இரண்டும் சமன் சேர்த்து பசுவில் பாலால் அவித்து உளர்த்தி இரண்டாவது இளநீரில் வேகவைத்து உலர்த்தி வடி கட்டி புதுக் கலயத்தில் வைத்துக் கொண்டு நித்தியம் திரிகடி பிரமாணம் சாப்பிட குஷ்டம் 18-ம் தீரும். இரு வேளையும் சாப்பிடவும்.

158. குஷ்டம் 18-க்கும் தைலம்.

எட்டி விதை, அதன் பட்டை நொச்சி வேர் பட்டை அதின் இலை இவைகள் சமூலம் அரைத்து ½ படி விளக்கெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து மேல் தேய்த்து ½ மணி நேரம்

ஊற வைத்து குளிக்கவும் தீரும்.

159. விப்புருதிக்கு என்ணெய்.

சித்தா மணக்கென்ணெய் படி 1, திப்பிலி பலம் $\frac{1}{2}$, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் கடுகு ரோகணி, வசம்பு, நீரடி முத்து, நீர் வாளப் பருப்பு, இவைகள் வகைக்கு பலம் $\frac{1}{2}$ வெள்ளப் பூண்டு; கடுக்காய், வகைக்குப் பலம் 1, நிலாவரை, பிரமி பொடுதலை, கோழி ஆவாரை சிள்ளி வெள்ளருகு, மலை வேம்பு, சங்கங்குப்பி, கலச்சி, காட்டாமணக்கு வகைக்கு $\frac{1}{4}$ படி சார், சரக்கை இடித்துப் இள போட்டு அரைத்துப் போட்டு வடித்துக் கொண்டு காலையில் ஒரு க்ரண்டி கொள்ள 4 தடவை பேதியாகும். இப்படி 4, 5 நாள் கொள் பேதியான பின்பு, உப்பு, புளி தள்ளி பத்தியம் கொள்ளவும். இதனால் பல விதமாய் ஓடி ஓடி கட்டும் விப்புருதி அதனால் உண்டாகும் புன்னும் அன்ரயப்பு, பௌத்திரம் குணம் ஆகும்.

160. வல்லாரை திரவாகம்.

வல்லாரை ~~வள்ளாரை~~ பலம் 20, ~~மேற்கண்ட~~ பொடு தலை பலம் 20, வேலிப் பருத்தி பலம் 20, வெப்பாலை பலம் 20, வெங்காயப் பூ எல்லாம் பக்குவம் செய்து தண்ணீர் படி 14 இட்டு ஓர் இரவு ஊற வைத்து ஒன்று கூட்டி திரவாகம் இறக்கி திரவகம் பலம் பசுவின் பால் மேற்கண்ட திரவாகத்தை 1,2 பலம் பசும் பாலில் கலந்து சாப்பிட குஷ்டம் கிரந்தி, ரத்தத்தில் உள்ள தோஷம் தீரும். இதில் வெங்காயப்பூ என்பதுக்கு பதில் எருக்கன் பூ என்று அறியவும்.

161. விக்கலுக்கு.

சந்தணத்தூள், மயில் இறகு சாம்பிராணி பொடி செய்து கடுதாபிசியில் வைத்து சுருட்டி புகை பிடிக்கவும்.

162. வெடி உப்பு சுன்னம்.

வெடியுப்பு பலம் 4, ஒரு சிறு பானையில் போட்டு அதன் மேல் பூவரசன் இலையை முக்கால் பாகம் பரப்பி மண் செய்யாமல் அடுப்பில் வைத்து இலை வெந்து சாம்பல் ஆன பின் ஆறி இறக்கி ஆறவாத்து எடுத்து வெடி உப்பை மட்டும் எடுத்து அரைத்து சீசாவில் வைத்து கொண்டு சகல குன்மத்துக்கும் கொடுக்கலாம். நீரடைப்புக்கு வால் மிளகு, இளநீர் தண்ணீரில் அரைத்து வடி கட்டி அதில் காசிடை சுன்னம் கொடுக்கவும் இது செய்து இருக்கிறது.

163. அரிதார பற்பம்.

தாளகம் கட்டியாக பலம் 3, அல்லது 4 இருக்க வேண்டும். அதை துணியில் பொட்டலம் கட்டி சுண்ணாம்புக்குள் நடுவில் கட்டி அதன் பேரில் வைத்து மேலும் $\frac{1}{4}$ படி நல்ல வென்னீர் கொதிக்க விட்டு அப்படியே வைத்து மறு நாள் அதை அலம்பி முன் போல் ஒரு தடவை இவ்விதம் ஒரு நாள் வைத்து அலம்பி காய வைத்து அதின் பேரில் அரச இலையை அரைத்து கவசம் செய்து அதன் மேல் சீலை மண் நன்றாய் செய்து உலர்த்தி இருபது எருவில் புடம் போட பற்பம் அல்லது செந்தூரம் ஆகும். மேற்கண்ட செந்தூரத்தை பசும் பாலில் சுத்தி செய்து அலம்ப வேண்டியது. பின்பு எடுத்து பசுவின் பாலில் இட சகல இருமலும் தீரும்.

164. பித்த வெடி, வெட்டு காயத்திற்கு களிம்பு.

தேன் மெழுகு பலம் 6, தேங்காய் என்ணை 8 பலம் சேர்த்து உருக்கி ஈய செந்தூரம் $1\frac{1}{4}$ பலம் தூவி எடுத்து வைத்துக் கொண்டு பூசி வர வெட்டுக் காயம் பித்த வெடி தீரும்.

165. ஊரல், படைக்கு மருந்து.

கார் போக அரிசி, நீரடி முத்து பருப்பு, சரக்கொன்றை இலை வகைக்கு 1 களஞ்சு மனோசிலை, தாளகம் $\frac{1}{4}$ பங்கு இவைகளை தனித்தனியே பொடித்து கோமூத்திரத்தில் அரைத்து

அரைத்து தடவ சொரி சிரங்கு, படை ஊரல் தீரும். தீ ரணம் ஆறும்.

166. தீ சுட்ட புண்ணுக்கு களிம்பு.

வெள்ளை குங்கிலியம் 4 பங்கு, நெய் ஒரு பங்கு, கூட்டி உருக்கி வைத்துக் கொண்டு பூசி வர நெருப்பு சுட்ட புண் சாதாரணம் ஆகும்.

167. ரத்தாதி சூரணம்.

மயில் துத்தம், வெள்ளை குங்கிலியம், இந்த 2-யும் பொடித்து சமனாய் கூட்டி அரைத்துக் கொள்க. இதை மேல் பூசினால், புண்களை கட்டிக்கும் ஆகும்.

168. சிவனார் வேம்பு தைலம் (அ) சூரணம்.

சிவனார் வேம்பு பலம் 10, சிவனார் வேம்பு தைலம் 1 படி அறக்கி வேரையாக வைத்துக் கொண்டு வாலுவை, தாளிச பத்திரி, கிராம்பு, அதி மதுரம், கோஷ்டம், சாதிக்காய், 4ாதிப்பத்திரி, கருஞ் சரகம், மிளகு, கடுக்காய், திப்பிலி, அதிவிடையம், பரங்கிப் பட்டை சிறு நாகப்பூ, வால் மிளகு, வகைக்கு பலம் ½, சூரணம் செய்து சிவனார் வேம்பு சூரணம் 10 பலம் கலந்து ஒன்றாய் வைத்துக் கொண்டு பாதி சீனி சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு விரக்கடி தா ள் சிவனார் வேம்பு தயிலத்தில் குழைத்து கொடுக்க வியாதிகள் 18 குஷ்ட ரோகம், மேக சூலை, மேக வாய்வு, கரப்பான், சொரிசிரங்கு, வண்டு கடி, கண்ட விஷங்கள், சில்லரை விஷங்கள், ரணங்கள் முதலியன ஓடிப் போகும். தீரும்.

169. 7 வகை பீனிசத்திற்கு மருந்து.

பாரப்பா யெழுவகை பீனிசமும் போக பாடுகிறேன் என்னை வகை சுருக்க வகை கேளு
காரப்பா நல்லெண்ணை படி தான் இரண்டு கரிசாலை அவுரி கஞ்சாபொன்னாங்கண்ணி
ஊறப்பா வெற்றிலை சார் மொசு மொசுக்கை சர்ர் உணர்த்தி மூக்குரட்டை அத்திப்பட்டை
ஆரப்பா வகை வகைக்கு ஒரு படி தான் சாறு அதன்ட சாறு படி இரண்டு படி தானே வாரே நீ.

ஆவில் பால் படி யொன்று, இச்சிக் சாறு, காசேரி கடுகு, சீரகம், கடுகு ரோகணி, கஸ்தூரி மஞ்சள், கடுக்காய், தானிக்காய், காரேணி, அதி விடையம், அரத்தை சுக்கு, கோஷ்டமொடு சத குப்பை, குரோசனி, ஓமம், சேரே நீ சிறு நாகப்பூ, கோஷ்ட மோடு சதகுப்பை, குரோசனி, தாளிச பத்திரியும், திப்பிலி மூலத்தோடு சித்திர மூலம் மூலமாம் பெருங்காயம் நெல்லி முள்ளி, மூளகரணை அழிஞ்சி வித்து, கீழ நெல்லி, பலமா வகை வகைக்கு ஒரு களஞ்சி வீதம் எலுமிச்சம் பழ சாத்தால் ஆட்டியே எண்ணெயில் போடு ஆழமா அடுப்பேற்றி எரித்து காய்ச்சி அப்பனே மெழுகு பதம் பார்த்து நீயும் ஏலமே, முருங்கைப் பூ வொரு பிடி தான் போடு இதமாக வடித்து நீ பூஜை பண்ணிறு கந்தருக்கும். கணபதிக்கும் பூஜை பண்ணிறு. பண்ணியே நாலு நாளைக்கு ஒரு தரம் முழுகு. முழுகிய போது சீயக்காய் பசும் பால் விட்டு அரைத்து தேய்த்து வென்னீர் ஊற்றிக் கொண்டு புளியோடு, புகையிலையும் பெண்ணும் தள்ளு. ஆறுமேகைப்பு, பிள்போடு புளியும் தள்ளு. அப்பனே மற்று நாள் எல்லாம். கூட்டு. ஏருமே செய் முறையும் கை முறையும் பார்த்து எதடாக செய்திடிலோ வியாதி தீரும் ஆகாது விழி யிடுப்பு, செய்வானுகில் யவனுக்கு மருந்தொன்றும் ஆகாது. பாரே நீ, சிரசிலுள்ள நோய் களெல்லாம் தீரும். பாடுகிறேன்.

170. உக்கிரான ப்வுடர் 32 நோய் தீர.

சுண்ட வேர், சமுத்திராப் பழம், அரத்தை, சுக்கு, அக்கிலாக்காரம், அதிவிடையம், ஓமம், குரோசனி, திப்பிலியும், திப்பிலி மூலம் வால் மிளகு, சித்திர மூலம் காரேணி, கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள், கடுகு ரோகணி, பெருங்காயம், கண்ட திப்பிலியே, திப்பிலியும் சாம்பராணி, பேர் அரைத்தை, திரமான அழிஞ்சி வேர், வெப்பாலை அரிசி கடுகு, செப்பாதே எருக்கிலை மேல் சுண்ணயும் கூட்டு. திரமான வகை வகைக்கு களஞ்சிட்டு அப்படியே நாவலை கண்டங் கத்திரி, சடுசான மிளகரணை வேர், ஒப்பரிய பெரு மருந்து, பங்கம் பாலையும், உத்தாமணி யோடு கடலிரிஞ்சி யென்றே யென்னவே தை வேலை குப்ப மேனி, இவை தனிலே வேர் வகைக்கு கழஞ்சி கூட்டு. *வில்வ வில்லவே அத்திப் பால், வெள்ளாட்டு

நீரும் விட்டு உலர்த்தி இடித்த தூ ளை வடிகட்டி னை யென்னவே யெப்படியுடச்சி மீழதா நன்று. யில்லா விட்டால் பேய்ச் சுறை குடுக்கையிலே யடைத்து பன்னவே பனவிடை தான் நாசிக்கேற்ற பரிவான கபால நோய் பறந்து போமே. போமென்ற யொடி தன்னை மூக்கில் உறிஞ்ச செய்தாலும் புகட்டியே திரிக்கி திரித்துக் கொண்டு நாமென்ற வேப்பென் னெய்க் கொளுத்தியாத்தி நலமான புகை தன்னை நாசிக் கேற்ற ஓமென்ற மண்டை ஜன்னியும் கபால குத்து மண்டை இடியும் ஒரு தலை நோயும் நீர் பாய்ச்சலோடு பித்தம், காமென்ற கபாலத்தில் வாய்வு சூலை கரப்பான்; கண்ணைசை, கண்ணப்புத்தே, புத்தரண, எழுவகை பினிசமும் போகும். பொல்லாத ஜலதோஷம், புகைநீர், பாய்ச்சல், கத்தான கபாலத்தில் விப்புருதி, சூலையும் காசமொடு புண், புரைகள், காணுதே ஓடும். மற்றுமுள்ள தந்த நோய் செவி நோய், கண் நோய், மற்றுமுள்ள மகத்தான ஜன்னி வகை தோஷம் போகும் சிந்தான தோஷம்.

171. வல்லாதி என்னெய்.

ஆமென்ற சுத்த வல்லாதி என்னெய் சொல்லுகிறேன். சித்தா முட்டி சமூலம் கொண்டு பாமென்ற 32 பலம் இடித்து பாண்டத்திலிட்டு 8 மரக்கால் தண்ணீர் போடு. ஏமென்ற ஒரு மரக்காலாய் வற்றக் காய்ச்சி இருத்து. அதிலே ஆவின் நெய் 1 மரக்கால் போடு. தானென்ற சந்தனமும். அதி மதுரம் கோஷ்டம். ஜாதிக்காய், ஏலம், கிராம்பு, பட்டை லவுங்கப் பத்திரி, பட்டையாம், அரத்தை சுக்கு, அக்கிராகாரம், பாங்கான தாளிச பத்திரியும், இஞ்சி திட்டமாம், பெருங்காயம், கடுகு ரோகிணி, திப்பிலியும், வாய் விளங் கம். கூகை நீரும், கோஷ்டமாம் வால் மிளகு குரோசனி, ஓமம், குங்குமப்பூ, கடுக் காய், கருஞ்சீரகம், தானிக்காய் திட்டமாம், சண்பகப்பூ, கொத்தமல்லி, செவ்வியம். வாலுளுவை, சிறு நாகப்பூ, பூவோடு லவுங்கம், வகை வகைக்கு பொடி செய்து போட்டு. 4 களஞ்சு எலுமிச்சம் பழச் சாறு படி ஒன்று வாரு. பசுவின் பால் படி தான் வார்த்து அடுப்பிலேத்தி செயலோடு கணபதிக்கு பூசை பண்ணு. சிறப்பாக எரித்து தலை மெழுகு பதம் பாரு. பூவோடு வடி களம் தண்ணீர் கேளு. புனுகு, கஸ்தூரி மஞ்சள் கோரோசனை போடே வகை வகைக்கு களஞ்சு ஒன்று, போட்டு நீ என்னையை பதனம் பண்ணு. நாட்டுவாய் உள்ளுக்கு காசு எடை உண்ணு. கொஞ்சம் ஊத்தி நாசியிலும் மேலும் பூச முகவாதம், மண்டை சூலை, தீர்ந்து போகும். பித்த மோடு நீலகாசம் ஓட்டு பினிசமும், வாய்வு சூலை உடம்பிலுள்ள சூலையெல்லாம் ஓடும் தானே. ஓடுமே சிர சிலுள்ள நோய்களெல்லாம். உத்தமனே சிவக்காய், பசும்பால், தயிர், பாடுமே பத் தியம். கைப்பு, புளிப்பு ஆகாது. பாங்கான பத்தியந்தான். மேலே கூட்டு. ஓடுமே ஒருத்தலை நோய், மண்டை சூலை, உத்தமனே நாசியிலிட கண்ண சூலை நாடாது. நயன வாதம் மருக வாதம், சன்னி நலமான பத்தியந்தான் நன்றுய் பாரே.

172. சர்வாங்க நோய்தீர மகர் மேரு தைலம். கிரதம்.

பாரப்பா சர்வாங்க நோய்களெல்லாம் மகா மேக உறிரந்தந் தன்னை வெரு
காரப்பா பேய் குமட்டி வேர் பலம் 10 கடுக்காய் வேரு நெல்லி வேரு தானிக்காய் வே
பாரப்பா தூதுவளை காஞ்சொரி பொன் முசிட்டை நன்னாரி

நெய்தலின் கிழங்கு, செங்கழநீர் கிழங்கு, தாமரைப்பூ, அல்லி, நிலப்பனையும், நிலவாகை கண்டங் கத்திரி, பொய்யாதே வகை வகைக்கு ஆறு பலம் போடு. பேய் குமட்டி வேரோடு பொடித்துப் போடு. யெய்துமே பண்டத்தில் ஏட்டு கேளு, இரு தூணி ஜலம் விட்டு எட்டிலொன்றுக்கி யெத்மே கஷாயமது படிதான் 4, அளந்து கஷாயமது படிதான் 4 அளந்து விட்டு ஆவின் நெய் படிதான் 4, நாலோடு ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிப்பத்திரி, நற்சீரகம், லவுங்கப்பட்டை, ஏலம் சாலோடு சிறு தேக்கு, சாஸ்திர பேதி, சதகுப்பை, வாய்விளங்கம், தாளிச பத்திரி, சாலோடு நல்ல சந்தனம், சிறு நாகப்பூவோடு, மதுரம், கோஷ்டம், காரோடு, தேவதாரம் வாலுளுவை, சிங்க

தாறம், கருஞ்சீகம், கஸ்தூரி மஞ்சள், மேமஞ்சி திப்பிலி, திப்பிலிமூலம், மாசிக்காயோடு கடுகு ரோகணியும் கூட நெறிஞ்சிக்காயும், கொஞ்சியதோர், கொத்தமல்லி, கோரைக் கிழங்கு, ஓமம், குரோசாணி, வர்ல்மிளகு, கடுக்காய், நெல்லி மிஞ்சாதே மாதலையும் பிஞ்சு, குங்குமம் பூவும். விளங்கவே வகை வகை வகைக்கு நால் களஞ்சி கூடு. அஞ்சாதே ஆவின் பால் படி தான் 4, மறந்துமே கர்ர்த்து முன்னே, நெய்யில் வாரே. வாரேனி செவ்விள நீர் படி தான் 2 வல்லாரை சாறு படி இரண்டு வாரே. சேரே நீ எலுமிச்சம் பழச்சார் படி 2, சீனி சர்க்கரை பலம் 2 போடு. காரே நீ நல்ல வெல்லம் பலம் 4 கறந்து நீ அடுப்பேற்றி எரித்து காய்ச்சி வாரே நீ மெழுகு பதமாய் காய்ச்சி வடித்து களம் தன்னில் வைத்து சீரகமும, கோரோசனையும் கூட்டு. சாருவாக வடித்த பின் பூசையை கேளு நின்னயமாய் கணபதிக்கும். கந்தனுக்கும் பூசை நிறையக செய்துமே நெல் புடத்தில் 30 நாள் வைத்து எடுத்து முறையோடே முக்களஞ்சு, செய்தான் கொள்ளு, சொன்ன தொரு க்ஷயம், ஈளை, காசபித்தம், சொல்லறியா தலை நடுக்கம், சொல்லாதே ஓடம் உலர்ந்து போம். ஊர்படை மோடு, பிரமிய மேகம், யுல மூத்திரம், திரிச்சியொடு சகல நீர் அடைப்பு, அழைந் தோடும் உலர்ந்து போம். சகல அப்பு அனலோடு மேலேறிவு, உஷ்ணகாந்தி, மலைந்து போம் முசல் வலிப்பு, ஈளை, இருமல், 6 வாய் வோடு நீர் சிறப்பு, வெட்டை போமே. போமென்ற பகர பற்பம் போட்டுக கொள்ளு பொல்லாத நோய்களெல்லாம் பொடித்து போகும். தேகம் என்ற கற்பத்தில் எழுந்த ரோகம் தீர்ந்து விடும். மலடிக்கு பிள்ளையுண் டாம். காமென்ற பத்தியந்தான் காக்க சொல்லு. கைப்போடு, புளி, புகையிலையும் தள்ளிப் போடு. தாமென்ற மேகமெல்லாம் தீரும். கை கண்ட முறை இது கண்டு பாரே.

173. மேகம் 21-க்கும் கொடிக்கள்ளி மூலம்.

உத்தமனே மேகவை 21 போக, பண்ணவே புங்கம் பூ படி 1, பாங்காக் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி ஊன்றுதே ஆவின் நெய் இரண்டு சேரு, உன்ன உன் அதில் விட்டு வறுத்துக் கொண்டு நன்றாக நெய்யெல்லாம் பூவில் சேர் நன்றாக பிரட்டியே வறுத்தெடுத்து தின்னமாய் உதயாதி தன்னில் தினமொன்று அந்தி சந்தி விரக்கடி நாள் கொள்ள விரகானபுளியுடன் புகையும் தள்ளு. வெல்லாட்டு வத்துலடன் ஆவின் பால் நெய், வெறுக்காக முக்கியமாய் கூட்டிக் கொள்ளு. மேக வெடி மேகபுண், மேகசூலை, விரகான பிரமேகம் வெட்டை தீரும்.

174. சித்தண்டை எண்ணெய், சித்தரண்டத்தெண்ணெய்.

சித்தரண்டத்தெண்ணை படி 1½ படி தான் வாரு. கருதவே அழகியதோர், பாண்டத்தில் வாரு ¼ படிதான் ஈருள்ளி சாறு வாரு. கருதவே பரங்கிப்பட்டை பலமுந்தானு 6 கஸ்தூரி பட்டை விரர்கனிடை 7, வசிசையாய் கெருடருட கிழங்குந்தான் வகைக்கு பலமெட்டு நிறுத்துக் கொள்ளே. கொள்ளவே கஸ்தூரி பட்டை தன்னை குளிர்ந்த தண்ணீரில் ஊரப் போட்டு அப்பவே அரைத்ததனை எண்ணையில் போட்டு அதின் பின் பரங்கிப் பட்டை அரைப்போடு கொள்ளாவே. இவையெல்லாம் வெவ்வேறாய் குளிர்ந்த தண்ணீரில் அரைத்து எண்ணெயிலே வாரே. வார்த்துமே அடுப்பேத்தி புளியம் விறகு தவிர, மத்த நீ ஓர் விறகால் எரியப் பெய்க்கு போட்டு வார்த்துமே எரித்ததனை மெழுகு பதம் பார்த்து வடித்து நீ கந்தர் பூசை பண்ணே. வார்த்து எடுத்த தனி வைத்துக் கொண்டே மைந்தா என்னை கொள்ள வகையே கேளு. யேத்துமே விளக்கெண்ணை முதல் நாளப்பா. இதமான தேய்த்து நீ முழுகிப் போடே. முழுகிய மறுநாள் சொல்லக் கேளு. முன்னையான என்னை தனை அரைச் சேர் கொள்ளு பழகிய சரீர பலன் பார்த்துக் கொள்ளு. பத்து விசை வேதியாம். பதறாதே நீ. கருதியே சுடு கஞ்சி வருத்த உப்பு கூட்டு. காய்ச்சியே கொண்டிடவே பேதி நிற்கும். நிற்கவே மற்று நாள் விளக்கெண்ணை தேய்த்து நீராட்டி கறி பதார்த்த மெல்லாம் கூட்டு. கூட்டியே 10 நாள் ஆரப் பெய்க் போட்டு கொள்ளு இந்த எண்ணை தானும் மூட்டியே இப்படியே மும்முறையே கொள்ளு. முன்னையான மேகவகை மூவேழும் தீரும். ஈட்டியே இந்த வகை யாரும் சொல்லார். என்னுடனை நிசமப்பா கொண்டு பாரு. காட்டாதே இந்த எண்ணெய் ஒருவருக்கும் கை முறையாய் சொல்லி விட்டேன் கண்டு பாரே.

175. அமுக்குரா சூரணம்.

அமுக்கராங் கிழங்கு 10 பலம் இடித்த தூள் வால் மிளகு, குரோசாணி, வாலுளுவை தேக்கு, விடத்தலை, மிளகரணை, குமரி, பூவரசு, பிலாகொன்னை, கலச்சிக் கொடி, செங்கத்தாரி, குவலை பெருமருந்து, காட்டவுரி இவையெல்லாம் சமனிடை வெட்டி உலர்த்தி குழிப்புடத்தில் தைலம் வாங்கி முஞ்சுறு அண்டங் காக்காய், அலுங்கு ஒடு, ஆமையோடு, ஆநதை, கூகை, தேவாங்கு, பச்சோந்தி, பசுந்தவளை, பெருவிரியன், பச்சைப் பாம்பு, உலர்ந்த பன்னி விட்டை, கழுதை லத்தி, யானை லத்தி, குதிரை குளம்பு, எருமை கொம்பு, உலர்த்தி தலை மண்டை, கழுதை மண்டை, முயல் புழுக்கை, வெளவால் எலும்பு புழுக்கை, ஒட்டகலத்தி வெள்ளாட்டுப் புழுக்கை, இவையெல்லாம் சமன் கொண்டு இடித்து உலர்த்தி ஒரு பெரும் பாண்டத்தில் போட்டு மூடி குழி தைலமாக இறக்கி மேலே சொன்ன தைலத்தோடு இரண்டையும் சேர்த்து சேங்கொட்டை தைலம் ½ படி கருங்குங்கிலியம் 1 களஞ்சு, கார்திகை பூண்டு களஞ்சு, 8, கருஞ்சீரகம் 8, தேவதாரம் களஞ்சு 8, கஸ்தூரி மஞ்சள் களஞ்சு, 8, ரச கற்பூரம் களஞ்சு 8, செங்கந்தாரிப் பட்டை 1 பலம் பரங்கிப் பட்டை பலம் 2, பிரப்பங் கிழங்கு பலம் 2, வலம்புரிகாய், வாலுளுவை, வகைக்கு பலம் 1, கொடிக்கள்ளி சார் ஊற்றி அரைத்து தைலத்தில் கலந்து எரித்து வடித்துக் கொண்டு முன் சேர்த்த தைலத்தில் கூட்டி வைத்துக் கொண்டு ரோகங்களுக்கு மேலே பூச உள்ளுக்கும் கொடுத்து மேல் பூச, தட்டு எடை வாதம், சிரங்கு, குஷ்டம், வஞ்சனை பில்லி, சூனியம் இவைகள் போகும். இந்த தைலத்தை பூச மயிலெண்ணெய், வேப் பெண்ணெய், சேர்த்து கொண்டு சரீரமெல்லாம் தவளை போட்டு ஒரு நாள் பொறுத்து மறுநாள் தண்ணீர் விட்டு குளிக்கவும். குளித்த உடனே தருத்தாழை கரந்தை நொச்சி, குண்டு மணி சங்கு, மலைவேம்பு, இவைகளை வேக வைத்து., வேது பிடிக்கவும். ஒத்தடம் போட வும். மருந்து உள்ளுக்கு சாப்பிட்டால் உப்பு, புளி, இல்லாமல் பத்தியம் இருக்கவும். எண்ணெய் 5,6 நாள் சாப்பிட்ட பிறகு பத்தியம் முறை பிரகாரம் முறிக்கவும். சகல நோய்களும் தீரும்.

176. ஆறுமுக செந்தூரம்.

உலர்ந்த லிங்கம் விராகனிடை 5, ரச செந்தூரம் விராகனிடை 5, வீரம், பூரம், சூதம், வகைக்கு விராகனிடை 1 கெந்தகம் விராகனிடை 3, முலைப் பால் விட்டு 1 ஜாமம் அரைக்கவும். அண்டம், வெண்கருவும் 2 ஜாமம் அரைக்கவும். இப்படி அரைத்து சுடு தண்ணீரில் போட்டு வைத்து எடுக்க செந்தூரம் ஆகும்.

177. தட்சிணாமூர்த்தி தேங்காய் குடுகு.

ஜாதிலிங்கம் விராகனிடை 2, சூதம் விராகனிடை 2, காந்தம் விராகனிடை 5, வெங்காரம், பெருங்காயம், சீனம், இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, சவுக் காரம், ஓமம், நவாச்சாரம், திப்பிலி, கருஞ்சீரகம், தேசாவரம், திப்பிலி, கருஞ் சீரகம், தேசாவரம் வகைக்கு விராகனிடை 3 பூண்டு தோல் போக்கியது பலம் 2, உத் தாமணி சாத்தில் ஒரு ஜாமம் அரைத்து முத்தினத் தேங்காய்க்குள் அடைத்து துணியால் கண்ணை மூடி பசும் சாணியில் வைத்து கணபீடமிட் ஒடு தள்ளி அரைத்து விளக்கெண்ணெய் சட்டியில் முறி இட்டு இரும்பு கரண்டி மந்தித்து வெண்ணெய் போல் ஆன வச்சி வல்லி பால் விட்டு புகட்டிக் கொடுக்க கெண்டை வாயுவுதிரச்சி, மோகதரம், நீர்ருமை, விஷபாகம், ஓயாத வயிற்று வலி, மலஜலக் கோர்வை, விஷக் கரப்பான், வீக்கம், கெற்ப நோய், விப்புருதி, கிருமி, குதக வாய்வு உதர ரோகம் இவை எல்லாம் தீரும்.

178. பரங்கத்தி மெழுகு.

கானவே லவுங்கப்பட்டை பரங்கி சக்கை கண்டித்து சமருக சூரணித்து
தோனவே சதுரக் கள்ளி பாலை விட்டு தட்டித்து விரலைப் போல் கம்பி நீட்டி
ஊனவே அக்களித்துண்டினிக்குள் பொருந்திடவே எருமை சாணியு மேலப்பி
நானவே ஊர்த்தியதை கொளுத்தும் போது நலமான வெதுப்பியதை யெடுத்துக் கொள்ள.

கொள்ளவே மறுபடியும் முன்போலப்பா். குணமாக கடிகையினால் அரைத்து மெல்லவே இரண்டு விசை செய்த பின்பு மேலாக இசந் கொருத்தியதை ஆற வைத்து யெடுத்து உள்ளபடி சிமிழ்தனில் மெழுகு தன்னை உத்தமனே பத்திரமாய் வைத்து நீ கன்னமாய் எவ்வினைக்கும் அநுபானத்தில் கண்டிறந்து எற்றிடுவாய். கலந்து தானே கலக்கவே குழந்தைகட்கு விழித் திட்டாலே கணம், மாந்தம், பல் நோய்கள் சுரமுதோடும். பழக்கவே பெரியவர்குக்கும் பிணிகள் தீரும். பத்தியமும் ஒன்றுமில்லை. பாச்சுங்காலே. பிறக்குடனே லவுங்கப்பட்டை, ஒன்றைதானும் இப்படியே செய்ததனை ஈந்திட்டாக்கால் ஔக்கி விடும் நோய்களையே. நொடிக்குள்ளாக என் மேலும் மாச்சரியம் இழும்புங் காலே.

180. மண்டை குடைச்சலுக்கு தைலம்.

நல்லெண்ணெய் படி ½, வேப்பெண்ணெய் படி ½, பசும் பால் படி ½, கருஞ் சீரகம் வீசை 3., கஸ்தூரி விராகனிடை 3, மஞ்சள் விராகனிடை 3., சீமை கிச்சிலி, கிழங்கு விராகனிடை 2, டிக்கா மல்லி விராகனிடை 2 இந்த 5-களையும் பால் விட்டு அரைத்து மேற்கண்ட எண்ணெயில் கலக்கி அதில் வட்ட தத்தி இலை, கருஞ் சூரை இலை, கருக்கிப் போட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சி மெழுகு பதம் கண்டறிந்து திறக்கி கால் கை முகம் கழுத்து வலித்திருக்கும். தருணத்தில் அவாள் முகத்தில் இந்த ஆவியை பிடித்து இந்த எண்ணையை தலையில் தேய்த்து மூக்காரை வேர் அரைத்து தேய்த்து வென்னீர் விட்டு காலையில் தலைக்கு வார்க்குவும். அன்று பத்தியமாக இருந்து மற்றும் நாள் புளி, புகை, கூட்டவும். இதில் தீரும் வியாதி மண்டைகுடைச்சல், குத்தல், நேத்திர வியாதி, சுக்கில தோஷம், நேத்திர வாய்வு, தலைவலி, கபால சூலை, நீர் பீனிசம் முதல் அநேக வியாதிகள் தீரும்.

181. சூதக மெழுகு.

கம்பி நவாச்சாரம் ½ பலம் தூள் செய்து சட்டியில் போட்டு வருத்து அதற்கு கொடிக் கல்லிப் பால் சுருக்கு கொடுத்து அரைத்து மெழுகு போல் அரைத்து சீசாவில் அடைத்து 15 நள் புதைத்து வைத்து எடுத்து துவரம் பருப்பு அளவு மூன்று நாள் கொடுக்க சூதகம் உடையும். பேதி அதிகமானால் ரசம் சாதம் கொடுக்கவும். உடம்பு நிலவரம் அறிந்து மருந்தை கூட்டி குறைத்து கொடுக்கவும்.

அபின் செய்யும் முறை.

கடுகு, கசகசா, கஞ்சா இவை மூன்றும் சரியிடையாக தூக்கி மரட்டி மொக்கு கஷாயம் விட்டு மை போல் அரைத்துக் கொண்டு நல்ல வெல்லம் பாகு செய்து அதில் போட்டு பிரட்டி எடுத்துக் கொள்ளவும்.

தாம்பர பற்பம்.

புளியை கரைத்து வைத்துக் கொண்டுஅதில் பழைய செம்பு காசை காய்ச்சி காய்ச்சி 32 தடவை தோய்த்து சுத்தம் பண்ணி கொடிவேலி வேர் பட்டையை வெள்ளாட்டுப் பால் விட்டு அரைத்து 6 பைசா துட்டுக்கு கவசம் செய்து உலையில் வைத்து ஊத பற்பமாகும்.

ரசம் கட்டி மணி செய்ய.

ரசம் பலம் 1, நாகம் பலம் 1, நாகத்தை உருக்கி இளஞ் சூட்டில் ரசத்தை நாகத்துக்கு தாக்க ரத்தை வாங்கிக் கொள்ளும். பிறகு 2 பலம் வீரத்தை மேற்கண்ட சரக்குகளுடன் கூட்டி அரைத்து கல்வத்தை சாய்த்து வைத்தால் செயநீர் வரும். இதுதான் வீரச் செயநீர். என்று பெயர். இந்தச் செயநீரில் துத்தக் கட்டியை நனைத்து வெய்யிலில் வைக்க சுன்னமாகும் மேற்கண்ட சுன்னத்தை ரசத்துடன் கூட்டி அரைத்தால் ரசம் கட்டி விடும். பிறகு மஞ்சக் காவிக் கல்லை அரைத்து மேற்கண்ட ரசக் கட்டுக்கு கவசம் செய்து 5, 6 வரட்டியில் புடம் போட மணியாகும்.

ஜன்னிக்கு புகை போடும் விதம்.

எட்டி குச்சி, ஓமம், கருஞ்சீரகம், கண்டத் திப்பிலி, கழுதை லத்தி வகைக்குப் பலம் 1,

தலை மயிர் பலம் ½, நாட்டுக் கற்பூரம் பலம் ½, வால் மிளகு பலம் ½, கிராம்பு பலம் ½, வண்ணிக் குச்சி, நுன்னி வேர், வேப்பம் ஈர்க்கு யானை லத்தி பலம் வகைக்கு ப பலம் 1, பிசாசு பற்றுக் கூடு 1, காக்கைக் கூடு 1 இவைகளை இடித்து புகை போட ஜன்னி தீரும்.

வெண் குஷ்டத்திற்கு மேல் மருந்து.

தாளகம், கார்போக அரிசி இவை இரண்டும் சரியிடையாக கல்வத்தில் போட்டு கோமூத்திரம் விட்டு அரைத்து கலச்சக்காய் அளவு உருண்டை செய்து காயவைத்து நோய் உள்ள இடத்தில் மாத்திரையை கோமூத்திரம் விட்டு உரைத்து காலை, மாலை பூசிவரத் தீரும்.

கார்போகம் துத்தம் சரியிடை கூட்டி கோமூத்திரத்தில் அரைத்து உருண்டை செய்து காய வைத்து மேற்கண்ட மூத்திரத்தில் உரைத்து காலை மாலை தடவி வர வியாதி மாறும்.

கெந்தக பிட்டு செய்யும் விதம்.

1 பலம் கெந்தகத்தை நூள் செய்து வைத்துக் கொண்டு கால் வீசம்படி விளக் கெண்ணையை வாகு சட்டியில் ஊத்தி இரண்டாக வெட்டிய செங்கொட்டை 8 டை அதில் போட்டு அடுப்பில் வைத்து நிதானமாக எரித்து கொட்டை வெந்து வெடித்து எண்ணை கருப் பாக மாறிய உடன் கெந்தகப் பொடியை போட்டு சட்டுவத்தால் தேய்க்க குழம்பாகி கெந்தகம் பொங்கும். அப்போது 30 வெற்றிலை இடித்து சார் பிழிந்து அதில் விட்டு சட்டுவத்தால் தேய்க்க பிட்டாகி விடும். சட்டியை கீழ் இறக்கி வைத்து கவ்வ குழவியால் தேய்க்க கெந்தகம் பொடியாகும். அதை சீசாவில் பத்திர படுத்தி காலை பிரமாணம் வெள்ளத்தில் வைத்து 6 நாளை காலையில் மட்டும் சாப்பிடவும். பத்தியம் வாயு பதார்த்தம் கூடாது. வியாதியின் திடம் அறிந்து மாதம் இரண்டு தடவை கொடுக்கவும். தீரும் வியாதி சூலை 18, சகல வாயுவுகள் குன்மம், கண்ட மாலை, பவுத்திரம் சகல மேகம் இவைகள் தீரும்.

பச்ச வாதம் தீர பற்பம்.

எவாச்சாரம், நவாச்சாரம், சத்திச் சாரம், சவ்வீரம், தாளகம் சங்கு பாஷா ணம், லிங்கம், மனோசிலை வகைக்கு தோலா 1 இவைகள் மலைச் சோங்குப் புழு ரத்தம் விட்டு அரைத்து அரைத்த மருந்தை எடுத்து மேற்கண்ட புழுவை பிழிந்து அதற்குள் வைத்து நூலால் கட்டி கலையத்தில் போட்டு கவசம் செய்து சீலை மண் வலுவாகச் செய்து 200 வரட்டியில் புடம் வைத்து மறு நாள் எடுத்து அரைத் சீசாவில் வைத்துக் கொள்ளவும். மேற்கண்ட பற்பம் 1 அரிசியெடை அயம் 1 அரிசியெடை கலந்து தேனில் கொடுக்கவும். 12 நாள் கொடுக்கவும்.

பத்தியம் கரப்பான், பண்டம் கூடாது. பன்றி, கோழி, மீன் எப்பொழுதும் கூடாது. தீரும் வியாதி பாரிச வாதம், பச்ச வாதம், இலம் பிள்ளை வாதம், தீரும். சுபம். சுபம். ஜன்னி 32-ம் தீரும்.

முசுர் முட்டைத் தயிலம்.

முசுர் முட்டை ¼ படி முலைப் பால் படி ¼, மேற்கண்ட பால் விட்டு அரைத்து வேப்பெண்ணெய் படி 1 சேர்த்து கலக்கி அடுப்பில் வைத்து பூண்டு பலம் 5, இஞ்சி பலம் 5, கோழி முட்டை 5 சேர்த்து பூண்டுத் தயிலம் இறக்கி இஞ்சியை இடித்து ரசமாக எண் ணெயில் சேர்க்கவும். முட்டைத் தயிலம் செய்து கொண்டு இவைகளை எண்ணெயில் கலக்கி திப்பிலி பலம் ¼, தேசவரம் பலம் ¼, ஓமம் பலம் ¼, சதகுப்பை பலம் ¼, மயிலிறகு பலம் ½, புநாகம் பலம் 1½, வசம்பு பலம் ¼ இவைகளை அரைத்து மேற்கண்ட படி எண்ணைகளுடன் கலக்கி எரித்து வடித்துக் கொண்டு ஜன்கிகளுக்கு ½ வீதம் 1 கரண்டி வரை யில் கொடுக்கலாம். காய்ச்சல் இருந்தால் கோரோசனை 1 குன்றி சேர்த்துக் கொடுக் கவும். இளைப்பு இருந்தால் கஸ்தூரி குன்றி சேர்த்து கொடுக்கவும். உப்பு, புளி

இல்லாத பத்தியம் வைக்கவும் சகல ஜன்னியும் தீரும்.

<u>காலரா வாந்தி பேதிக்கு</u>.

காடிக்காரம் 1 விராகனிடை ரச செந்தூரம் 2 விராகனிடை லிங்கம் 1 விராகனிடை 4 ஜாமம் அரைத்து 3 தடவை வெய்யிலில் வைத்து அரைக்கவும். 1 அரிசி எடை ½ மணிக்கு 1 தடவையாக 2 தடவை கொடுக்க வாந்தி பேதி நிற்கும். உடம்பு சூடேறும். அப்படி நிற்காவிட்டால் 3வது தடவை கொடுக்கவும். தேனில் அநுபானம். அதிலும் மேற்கண்டபடி முடியாவிட்டால் சுகப்படாது என்று அறியவும்.

சு.ச:27.8.

Verified with the original handwritten notebook — The original will be returned

Sundaramurthy
3/12/62

V.S.

[signature]
3.12.62.

79